# சிவாலயங்கள்

# இந்தியாவிலும் அப்பாலும்

## இரண்டாம்பாகம்

1782

ராவ் பஹதூர்

**ப. சம்பந்த முதலியார், பி.ஏ., பி.எல்.**

அவர்களால் இயற்றப்பட்டது.

**இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற நூல்கள்:**

லீலாவதி-சுலோசனை, சாரங்கதரன், மகபதி, காதலர் கண்கள், நற்குல தெய்வம், மனோஹரன், ஊர்வசியின் சாபம், இடைச்சுவர் இருபுறமும், என்ன நேர்ந்திடினும், விஜயரங்கம், கள்வர் தலைவன், தாசிப்பெண், மெய்க்காதல், பொன் விலங்குகள், சிம்ஹளநாதன், விரும்பியவிதமே, சிறுத்தொண்டர், காலவரிஷி, ரஜபுத்திரவீரன், உண்மையான சகோதரன், சதி-சுலோசனா, புஷ்பவல்லி, கீதமஞ்சரி, உத்தமபத்தினி, அமலாதித்யன், சபாபதி முதற்பாகம், பொங்கல் பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றாம்பாகம், சபாபதி நான்காம் பாகம், பேயல்ல பெண்மணியே, புத்த அவதாரம், விச்சுவின் மனைவி, வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்திரார்ஜுனா, கொடையாளி கர்ணன், சஹதேவன் சூழ்ச்சி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன் ஜெனரல் விதித்தமருந்து, மாளவிகாக்னிமித்ரம், விபரீதமான முடிவு, சுல்தான்பேட்டை சப் அசிஸ்டென்ட் மாஜிஸ்டிரேட், சகுந்தலை, காளப்பன் கள்ளத்தனம், விக்ரமோர்வசி, முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும், நாடகமேடை நினைவுகள் ஆறுபாகங்கள், நாடகத் தமிழ், யயாதி, பிராம்மணனும் சூத்திரனும், வாணீபுரவணிகன், இரண்டு நண்பர்கள், சத்ருஜித், ஹரிச்சந்திரன், மார்க்கண்டேயர், ரத்னாவளி, கண்டுபிடித்தல், கோனேரி அரசகுமரன், சந்தையிற் கூட்டம், வைகுண்ட வைத்தியர், தீட்சிதர் கதைகள், ஹாஸ்யக் கதைகள், குறமகள், நல்லதங்காள், சிறுகதைகள், நடிப்புக்கலையில் தேர்ச்சிபெறுவதெப்படி? ஹாஸ்ய வியாசங்கள், தமிழ் பேசும் படக்காக்ஷி, விடுதிப்புஷ்பங்கள், பேசும்பட அனுபவங்கள், வள்ளி மணம், கதம்பம், மாண்டவர் மீண்டது, ஆஸ்தானபுரம் நாடகச் சபை, சங்கீதப் பயித்தியம், ஒன்பது குட்டி நாடகங்கள், சபாபதி ஜமீன்தார், முதலியன.

முதற் பதிப்பு

சென்னை 'இரத்னவிலாஸ்' அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது,

1946 [விலை

INSCRIBED

TO

THE BELOVED MEMORY

OF

MY PARENTS

P. VIJIARANGA MUDALIAR

AND

P. MANICKAVELU AMMAL

AND

MY FRIEND

C. RANGAVADIVELU

**கன்றுப்பூர்** :—(திரு) சென்னை ராஜதானி, திருவாரூரிலிருந்து 11½-மயில்; திரு நெட்டி யாற்றங்குடிக்கு 6-மயில் கிழக்கு. ஒரு ஆப்பியிலிருந்து பரமசிவம் தோன்றிய க்ஷேத்திரம். ஒரு வைஷ்ணவருக்கு வாழ்க்கைப்பட்ட சைவமாதுசிரோமணி, புருஷன் வீட்டார் அறியாதபடி கன்றுகட்டுத் தறியை சிவலிங்கமாகப் பூசித்துவர, இதை ஒரு நாள் அறிந்த அவள் கணவன் அதை வெட்ட கோடாலியை ஓங்கினபோது, ஸ்வாமி அவ்வாப்பினின்றும் வெளிப்பட்டதாக ஐதிகம்; லிங்கத்தில் கோடாலியின் குறி காணப்படும். ஸ்வாமி நடுத்தறியப்பர், தேவி மாதுமையம்மை; ஏரள தீர்த்தம். இடும்பன் பூசித்த க்ஷேத்திரம்.

**கன்னுடிபுத்தூர்** :—உடுமல்பெட் தாலுக்கா கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி; பழய சிவாலயம், சோழ கட்டிடம்.

**கனகபுரம்** :—சென்னை ராஜதானி கோயமுத்தூர் ஜில்லா; ஈரோட் தாலூகா, இங்கு மூன்று சிவாலயங்கள் உள.

**கனரா பிரிவு** :—பம்பாய் ராஜதானி; இங்கு அடியிற் கண்ட சிவாலயங்கள் உண்டு :—

(1) **ஹொனவர்** :—ராமலிங்க ஸ்வாமி கோயில் (2) **இட்கி** ராமெஸ்வரர் கோயில் (2) **முத்கிரி** நாகநாதர் கோயில், இங்கு ரதோற்சவம் விசேஷம்; ராத்திரி 8 - மணி முதல் காலை வரையில் இதற்கு கோயில் தாசிகள் நடனம் செய்ய வேண்டிய முறையாம். (4) **முர்தெக்ஷ்வர்** சிவாலயம், ராவணனால் கட்டப்பட்ட தென்பது ஐதிகம். (5) **சிவேஷ்ர் கோட்டை** இங்கு பல சிவாலயங்கள் உள. (6) **உல்வி** சிவாலயம்.

**கனுசரி** :—சென்னை ராஜதானி, பாலக்காடு தாலூகா, சிவாலயம்.

**கனுபர்த்தி** :—நெல்லூர் ஜில்லா சென்னை ராஜதானி; இதன் பழய பெயர் கனகபுரி, இங்கு பூர்வத்தில் 100 சிவாலயங்கள் கட்டப்பட்டிருந்ததாகச் சொல்லப் படுகிறது; அவற்றுள் 99 கடல் கொள்ள தற்காலம் ஒன்றுதான் மிகுதியாயிருக்கிறதாம்.

**கஜப்பிரியா** :—வட இந்தியா, சுயம்பு லிங்கம், ஸ்வாமி ஜலலிங்கேஸ்வரர்.

**கஜாகிராமம்** :—குண்டூர் தாலூகா, சென்னை ராஜதானி; அகஸ்தீஸ்வரர் கோயில்.

**கஜுராஹோ** :—வட இந்தியாவில் சத்தர்ப்பூர் ராஜ்யத்திலுள்ளது. கோயில் ஆரிய சில்பம்; குவலயபுரிககு 150 - மயில்; ஸ்வாமி கண்டராய் மஹாதேவர் கோயில்; 109 அடி நிகளம் 60 அடி அகலம், 116 அடி உயரம்; இங்கு ஒரு காலத்தில் 872 சிவலிங்கங்கள் இருந்ததாகச் சொல்லப் படுகிறது.

**காகினடா** :—சென்னை ராஜதானி, பிடாபுரத்திற்கு 10 மயில்; சிவாலயம்.

**காங்ரா பிரிவு** :—பஞ்சாப் மாகாணம், இமயமலைக் கருகில்; இங்கு கீழ்க்கண்ட சிவாலயங்கள் உள.

(1) **பாயிஜ்நாத்** :—சிவாலயம் ஸ்வாமி சிவ வயித்நாத். பழய கோயில்; உள் கோயில் 8 அடி சதுரம்; வெளி கோயில் 18 அடி சதுரம்; இந்திய ஆரிய சில்பம்; இங்கு அருகில் **சித்தநாதர் கோயில்** என்று ஒரு சிவாலயமிருந்தது; 1905-ஆம் ஆண்டில் பூகம்பத்தில் பாழடைந்து விட்டது. இங்கு **கேதார் நாத்** புதிய ஆலயம் ஒன்றுண்டு. (2) **சுஜான் பூர் தீரா கௌரிக்ஷங்கர் கோயில்** 1793 - ஆம் ஆண்டில் கட்டப் பட்டது. **தர்மகேக்ஷவர் கோயில்** 1823 - இல் கட்டப்பட்டது. (3) **மாஸ்ரூர்** பழய காலத்தில் சிவாலயமாயிருந்து தற்காலம் ராமர் கோயிலாக மாற்றப்பட்டிருக்கிறது. (4) **காங்ரா பட்டணம்** :—சிவாலயம். இந்திரேஷ்வர், ஸ்வாமி, சுமார் 11 ஆம் நூற்றண்டில் கட்டப்பட்டது. (5) **ஹரிபூர்**, அம்பிகேஷ்வர் கோயில் இப்பிரிவில் இதுதான் மிகவும் பழமையான சிவாலயம்.

**காசி** :—வட இந்தியா; வாரணசி, அவிமுக்தம் என்றும் பெயர். பங்காள் வடமேற்கு இந்தியா றெயில் ஸ்டேஷன், மிகவும் பிரபலமான சிவக்ஷேத்திரம், உலகெங்கும் பிரசித்தி பெற்றது. கங்கையின் தென்கரையிலுள்ளது. சிவாலாயம் ஸ்வாமி **விஸ்வேஸ்வர்நாத்** அல்லது **விஸ்வ நாதர்**; தேவி விசாலாட்சி, அன்னபூரணி; உத்தர வாஹினி தட்கிண லிங்கம். பழய கோயில் மகம்மதியர்களால் அழிக்கப்பட்டது. இப்பொழுதிருப்பது புதிய ஆலயம். ஏழாம் நூற்றூண்டில் இந்தியாவுக்கு வந்த யுவனச்வாங் என்னும் சீன தேசத்து பௌத்த சன்யாசிப்

பிரயாணி, அக்காலத்தில் இங்கிருந்த கோயில் விக்கிரகம், மனுஷ்யவடிவிலிருந்ததாக எழுதியிருக்கிறார். அக்காலத்திய கோயில் 100 அடிக்கு மேல் உயரமாயிருந்ததாம்; அதிலிருந்த லிங்கம் நான்கு முகங்களை யுடைத்தா யிருந்ததாகவும் கூறப்பட்டிருக்கிறது. 16 - ஆம் நூற்றாண்டில் கோயில் 32 - சதுரமுள்ள கர்ப்பக் கிரஹமும், அதைச் சுற்றிலும் 16 - அடி சதுரமுள்ள நான்கு சிறு மண்டபங்களும் உடைத்தா யிருந்தது; அம்மண்டபங்களுக்கு ஞான மண்டபம், பக்தி மண்டபம், ஐஸ்வர்ய மண்டபம், சிருங்கார மண்டபம் என்று பெயர்கள் இருந்தன. அன்றியும் இதைச்சுற்றி நான்கு சிறிய கோயில்கள் இருந்தன, இவைகள் முறையே, கணேசர் தண்டபாணி தாரகேஸ்வர், காலபைரவர் விக்ரஹங்களை உடைத்தாயிருந்தன. இவற்றை யெல்லாம் அக்பர் காலத்தில் ராஜாதோடர்மல் புதுப்பித்து வைத்தார். அவ்ரங்கஜிப் காலத்தில் இவை இடிக்கப்பட்டன; சிவாலயமிருந்த இடத்தில்மகம்மதிய மசூதி கட்டப்பட்டது. 1665-முதல் 1780-வரையில் விஸ்வநாதர் ஆலயம் மறைந்திருந்தது. அழிக்கப்பட்ட பழய சிவாலயத்திற்கு கீர்த்தி லிங்கேஸ்வரர் கோயில் என்று பெயர். 1194-ஆம் ஆண்டில் குட்புதின் எனும் மகம்மதிய அரசன் காசியைக் கைப்பற்றி அங்கிருந்த 1000-கோயில்களையும் இடித்து விட்டதாகச் சொல்லப்படுகிறது. சுமார் 200-வருடங்களுக்குமுன் தற்காலத்திய விஸ்வநாதர் கோயில், அன்னபூரணி கோயில, காலபைரவர் கோயில், முதலியன மஹாராஷ்டிரர்களால் கட்டப்பட்டன. தற்காலத்திய விஸ்வநாதர் கோயில் பழய கோயிலிருந்த இடத்திற்கு தெற்கிலுள்ளது; அதற்கு 500-அடி தூரம் உளது. கோயில் சுமார் 50-அடி சதுரம்; கர்ப்பக்கிரஹம் 8-அடி குறுக்குள்ளது. கோயில் ஸ்தூபி சுமார் 60-அடி உயரம்; மண்டபம் 16-அடி சதுரம்; சிவலிங்கம் 12-ஜோதிலிங்கங்களில் முக்கியமானது, சுயம்புலிங்கம். கோயிலின் நான்கு முகப்புகளில் சூரியன், கௌரி, அனுமார், கணேசர் உருவங்கள் இருக்கின்றன, கோயிலுக்குட் சென்று, மகம்மதியர் கிறிஸ்தவர்கள் பஞ்சமர்கள் தவிர, மற்றெல்லா ஜாதியாரும் லிங்கத்திற்கு அபிஷேகமும் பூசையையும் செய்து ஆராதனம் செய்யலாம். இவ்வூரின் மேல் திசையில் தேகளி விநாயகர் ஆலயம்; இந்த விநாயகருக்கு துண்டி விநாயகரென்று மற்றொரு பெயர்.

விஸ்வேஸ்வர் கோயிலுக்கு எதிரில் அன்னபூரணி அம்மன் கோயிலிருக்கிறது. முக்கிய தீர்த்தங்கள் :— அசிகங்கம், தசாஸ்வமேத கட்டம், மணிகர்ணிகாகட்டம், பஞ்சகங்கை கட்டம், பார்ணசங்கம், கேதார கட்டம், அகஸ்திய குண்டம். பிசாச மோட்சம், ஞானகூபம், அமிர்த குண்டம் ; நாககுண்டம், முதலியவை; ஞானகூபத்தில் பரமசிவம் இருப்பதாக ஐதிகம் ; மொத்த கட்டடங்கள் 64 - ஆம் ; அவற்றுள் பிரதானமானவை அசிகங்கா கட்டம், தசாஸ்வமேத கட்டம், மணிகர்ணிகா கட்டம், பஞ்சகங்கா கட்டம், வருண சங்கம கட்டம் ; இவ்வைந்திலும் ஸ்நானம் செய்தால் 64 - கட்டங்களிலும் ஸ்நானம் செய்த பலனுண்டாம். காசி, இறக்க முக்தியளிக்கும் க்ஷேத்திரம். இங்கே அநேகம் தர்மசாலைகளுண்டு; ஸ்டேஷனிலிருந்து கால்பர்லாங்கில் ஒரு தர்ம சாலையுண்டு ; ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தருகில் ஒரு மாறுபாடியால் கட்டப்பட்ட ஒரு சத்திரமுண்டு. விஸ்வநாதர் கோயிலில் சுவாமிக்கு எதிரில் சிவப்புக் கல்லாயாகிய நந்தி குறுக்காயுளது; கர்ப்பக்கிரஹத்தின் வலது மூலையில் லிங்கம் ஒரு தொட்டியில் இருக்கிறது. காசியிலுள்ள மற்ற சிவாலயங்கள் (1) மணிகர்ணிகா கட்டத்தில் தாரகேஸ்வரர் கோயில், ராணி அஹல்யா பாயிால கட்டப்பட்டது (2) சைலேஸ்வரர் கோயில், (3) ஓங்காரேஸ்வரர் கோயில், (4) அமிர்தேஸ்வரர் கோயில், (5) அசிகங்கா கட்டத்தில் சங்கமேஷ்வர் கோயில், (6) தசாஸ்வமேத கட்டத்தில், தசாஸ்வமேதேஸ்வரர் கோயில், சூலடங்கேஸ்வரர் கோயில், க்ஷேமேஸ்வரர்கோயில், தாலம்யேஸ்வரர் கோயில், (7) வருணசங்கம கட்டத்தில் வருணைதீர்த்தேஸ்வரர் கோயில், சங்கமேஷ்வர் கோயில், நட்சத்திரேஸ்வரர் கோயில், சுவேததீப தீர்த் தேஸ்வரர் கோயில், வேதேஸ்வரர் கோயில், (8) பஞ்சகங்கா கட்டத்தில் கபர்தீஸ்வரர் கோயில், வசிஷ்டேஸ்வரர் கோயில் (9) மணிகர்ணிகேஸ்வரர் கோயில், (10) லளிதா கட்டத்தில் கங்கேஸ்வரர் கோயில், (11) மீர் கட்டத்தில் சாரசசந்திரேஸ்வரர் கோயில், (12) மாடே கட்டத்தில் சர்வேஸ்வரர் கோயில், (13) கேதார கட்டத்தில் கேதாரிஸ்வரர் கோயில், (14) அநுமந்த கட்டத்தில் அநுமந்தேஸ்வரர் கோயில், லோலாரக்கேஸ்வரர் கோயில், (15) கர்த்தடபத்தருகில் சோமநாதர் கோயில், விமோட்சர் கோயில், நீலகண்டர் கோயில், (16) பிராதகாம தீர்த்தத் தருகில், மோட்சேஸ்வரர் கோயில், கரு

ணேஸ்வரர் கோயில், மந்திரேஸ்வரர் கோயில், நீலேஸ்வரர் கோயில், காளகூடேஸ்வரர் கோயில், (17) பீமசண்டித் தீர்த்தத் தருகில் கந்தர்வேஸ்வரர் கோயில், நேமேஸ்வரர் கோயில், ராமேஸ்வரர் கோயில், ரத்தாட்சீஸ்வரர் கோயில், (18) மஹாபீமேஸ்வரர் கோயில், (19) பூதநாதர் கோயில், (20) காமேஸ்வரர் கோயில், (21) பத்ரேஸ்வரர் கோயில், (22) ஐராவதேஸ்வரர் கோயில், (23) மாதவீஸ்வரர் கோயில், (24) சத்ருக்னேஸ்வரர் கோயில், (25) லக்ஷ்மனேஸ்வரர் கோயில், (26) (27) கபிலதாரைக் கருகில் தேவ சங்கேஷ்வர் கோயில், ரிஷபத்துவசேஸ்வரர் கோயில், (28) ப்ரஹலாதேஸ்வரர் கோயில் (29) திரிலோகளேஸ்வரர் கோயில், (30) சித்ரேஸ்வரர் கோயில், ஸ்வாமி வீரேஸ்வரர் அரம்பை, [illegible], வசந்தன் முதலியோர் பூசித்து இஷ்டசித்தி பெற்ற ஸ்தலமென்பர். இன்னும் பல சிறு சிவாலயங்களும் உள.

**காசியாரி** :—வட இந்தியா பங்காளம் நாகபூர் றெயில்வே ஸ்டேஷன்; கான்டாய்சி லிறங்கி 10 - மயில் போக வேண்டும். மிட்னபூர் ஜில்லா, கொண்டாய் பிரிவு. இங்கு கோட்டையில் ஒரு மடத்தின் மத்தியில், ஒரு கிணற்றின் கீழ் பாகத்தில் லிங்கத்திற்கு பூஜை நடக்கிறது; ஸ்வாமி மஹாதேவர்; ஆலயம் இடிந்திருக்கிறது.

**காஞ்சனகுட்டம்** :—பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம் ஸ்வாமி கங்காதார்.

**காஞ்சிக்கோயில்** :—ஈரோட் தாலூகா, கோயமுத்தூர் ஜில்லா சென்னை ராஜதானி; இங்கு 5 சிவாலயங்கள் உள.

**காஞ்சீபுரம்** :—கச்சி, கச்சி ஏகம்பம், சிவபுரி, கச்சிக்காரோணம் எனும் பெயர்களுமுண்டு. கச்சிக்காரோணம் என்று பெயர் வந்ததற்குக் காரணம், பிரளய காலத்தில் பிரம்மாவும் விஷ்ணுவும் பரமசிவத்தின் உருவத்தில் ஐக்கியமாகியது என்பதாம். பழய கல்வெட்டுகளில் கச்சிப்பேடு என்றிருக்கிறது. செங்கல்பட்டு ஜில்லா சென்னை ராஜதானி றெயில் ஸ்டேஷன். பிரபல சிவஸ்தலம். இது மிகவும் புராதனமான பட்டணம். சுமார் 2000 - வருடங்களுக்கு முன்பிருந்தது. பல்லவ அரசர்களுக்கும் சோழ மன்னர்களுக்கும் ராஜதானியாயிருந்த பட்டணம். முத்தி தரும் நகரேழில் முக்கிய மானது. நகரேஷு காஞ்சி

எனும் சிறப்புடையது. அசோக அரசனது ஸ்தூபங்கள் முற்காலத்தில் இங்கிருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஹியுன்சாங் எனும் பௌத்த சன்யாசி இவ்வூரைப் பற்றி எழுதியிருக்கிறார். மணிமேகலை எனும் பழய கிரந்தத்தில் இது குறிப்பிடப்பட்டிருக்கிறது. இங்கு பூர்வ காலத்தில் வேகவதி எனும் சிறுநதி ஓடிக்கொண்டிருந்தது. இதற்கு மற்றொரு பெயர் கம்பை அல்லது கம்பாநதி; இந்நதியின் பெயரினின்றும் ஏகாம்பரம் எனும் ஸ்வாமி பெயர் வந்திருக்கலாம் என்று ஜகதீச ஐயர் எண்ணுகிறார். காஞ்சி என்பது ஆற்றுப் பூவரசுக்குப் பெயர்; அச்செடிகள் அதிகமாயிருந்தமையால் இவ்வூருக்கு ஆதியில் அப்பெயர் வந்திருக்கலாம். ஏக ஆம்ரம் (மாமரம்) என்பது மற்றொரு காரணப் பெயர் என்பர் சிலர். காஞ்சீபுரத்தில் 108 சிவாலயங்கள் இருந்ததாகச் சொல்லப் பட்டிருக்கிறது அவற்றுள் முக்கியமானவை :—

(1) **கச்சி ஏகம்பம்** :—இதுதான ஏகாம்பர நாதர் கோயில்; இங்குள்ள கோயில்களில் எல்லாம் மிகப் பெரியது. பிர்த்வி லிங்கம் சுயம்பு; மூவர் பாடல்பெற்ற க்ஷேத்திரம். உமாதேவி இரு நாழி நெற்கொண்டு 32 அறம் வளர்த்த ஸ்தலம். தேவி கம்பை நதிக்கரையில் வேத மாவடியில் பரம சிவத்தைப் பூசித்து, மணந்த திவ்ய தேசம். ஐயடிகள் காடவர் கோன்நாயனார் அரசாண்ட இடம். சுந்தரமூர்த்தி நாயனார் இடது கண்பார்வை பெற்ற ஸ்தலம்; அன்றியும் அவர் பொன் வேண்டி திருப்பதிகம் பாடி பொன் பெற்ற இடம். திருக்குறிப்புத் தொண்ட நாயனாரும், சாக்கிய நாயனாரும் மூத்தி பெற்ற திவ்ய ஸ்தலம். (ஆடிசன் பேட்டையில் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் கோயிலுளது) இக்கோயில் தேசமெல்லாம் புகழ்ந்திடும் கச்சித் திருவேகம்பற் செம்பொற் கோயில் என்று சிறப்பித்துப் பாடப்பெற்ற கோயில். கரிகாலச்சோழன் இக்கோயிலைப் பூர்வத்தில் புதுபித்ததாகச் சொல்லப்படுகிறது. இங்கு பழய கர்ப்பக்கிரஹம் முற்றிலும் இடிக்கப்பட்டு நாட்டுக்கோட்டை செட்டிமார்களால் புதிதாய்க் கட்டப்பட்டிருக்கிறது; பழய கோயில் ஏககாலத்தில் கட்டப்பட்டதன்று; கொஞ்சம் கொஞ்சமாகப் பெரிதாக்கப்பட்ட தாம். சிற்ப சாஸ்திரத்தில் வல்லுனரானசர்பெர்கூசன் என்பவர் "இங்குள்ள பல கோபுரங்களில் இரண்டு

கூட நேர் நேராக இல்லை. இரண்டு சுவர்கள் கூட சம இடையில் கட்டப்படவில்லை. ஒரு கட்டிடமும் சரியான சச்சதுரமாயில்லை," என்று எழுதியிருக்கிறார். சந்நிதி கிழக்குப் பார்த்தது; பெரிய கோபுரம் தெற்கு பார்த்தது, 188 - அடி உயரம், பதினொரு நிலைகள் உடையது. ஸ்ரீ கிருஷ்ணதேவராயரால் சுமார் 1509 - 1530 - ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்டது. இக்கோயில் கர்நாடக யுத்தத்திலும், ஐதர்கால யுத்தங்களிலும், பன்முறை சைனியங்கள் தங்குமிடமாக உபயோகிக்கப் பட்டுள்ளது. ஐதரின் பீரங்கிகளின் குண்டுகளின் வடு தெற்கு கோபுரவாயிலில் இன்னும் காணலாம். இக்கோயிலில் ஐதர் லிங்கம் என்று ஒரு லிங்கம் உண்டு; ஐதர் கலாபனை காலத்தில் மூலஸ்தானத்திற்கு பழுது வராதபடி, இந்த லிங்கத்தை எதிரில் வைத்து சுவர் எழுப்பி, ஐதர் படைகளை ஏமாற்ற உபயோகிக்கப்பட்டதாம், இங்குள்ள நடராஜர் சபைக்கு ஆகாச சபை என்று பெயர். இங்கு ஏகாம்பரநாதர் கோயில் அன்றி, பல சிறு கோயில்கள் உள. அவை:— **வெள்ளைக்கம்பம்** - விஷ்ணு பூசித்தது இது கோயிலின் இரண்டாம் பிராகாரத்திலுள்ளது; **கள்ளக்கம்பம்** கோயிலின் வடக்கிலுள்ளது விஷ்ணுவினால் பூசிக்கப்பட்டது; **நல்லக்கம்பம்** பிரமன் பூசித்தது; **வாலீச் சாம்** வாலி பூசித்தது. பெரிய கோயில் ஸ்வாமி பெயர். ஏகாம்பரநாதர் ஏகர் ஆம்ரம் - மாவிருட்சம்; தேவி - காமாட்சியம்மன் ஏலவார் குழலி, தீர்த்தங்கள் ஆலயத்துள் சிவகங்கை, கம்பாநதி, கோயிலுக்கு மேற்கில் சர்வ தீர்த்தம் (இங்கு தெப்பல் உற்சவம் வைகாசி மாசம்) ஸ்தல விருட்சம் மாமரம். இது மிகவும் பழமையானமரம்; நான்குபக்கங்களிலும் நான்குவித மாங்காய் காய்க்கிறது. நான்கு வேதங்களே இம்மாமரமாயின வென்பது ஐதிகம். இக்கோயிலில் அம்மனுக்கு மூலஸ்தானம் கிடையாது, உற்சவ விக்கிரம் மாத்திரம் உண்டு. பிரம்மோற்சவம் பங்குனிமாசம் 13 நாட்கள்; நான்காம் நாள் ரிஷபவாஹனம், இதற்குப் போர்விடை என்று பெயர், மற்ற ரிஷபங்களெல்லாம் காட்சி விடையாகும்; ஸ்வாமி யுத்தத்திற்குச் செல்லும்போது உட்காருவது போல் ரிஷபத்தின் முகத்திற்கு எதிராக ஆரோஹணிக்கிறார்; ஐந்தாம் நாள் காலை அதிகாரநந்தி உற்சவம் விசேஷம்; 9 - ஆவது நாள் வெள்ளி மாவடி சேர்வை

உற்சவம், ஸ்வாமியும் அம்மனும் ஒரே ஆசனத்தில் விற்றிருப்பார்கள். 10 - ஆம் நாள் திருக்கலியாண உற்சவம் பிரபலம்; மாலை மாற்றுகிறது பார்க்கத்தக்கது; மூன்றுநாள் பஞ்சமூர்த்திகளும் சின்னகாஞ்சிபுரத்திற்குப் போய் வரதராஜர் சந்நிதிக் கெதிரில், ஏசல் உற்சவம்; உற்சவ காலங்களில் ஸ்வாமி தெற்குக் கோபுரவாயில் வழியாகத்தான் எழுந்தருளுகிறார். பெரிய கோயிலின் உட் பிராகாரத்தில் ஒரு விஷ்ணு விக்கிரஹம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது; இம்மூர்த்திக்கு நிலாத்திங்கள் துண்டத்தான் என்று பெயர். ஏகாம்பரநாதர் கோயிலில் கலியாண மண்டபம் பச்சையப்ப முதலியாரால் 1774 - வருஷம் கட்டப்பட்டது. இந்த சிவக்ஷேத்திரம் கச்சியப்ப சிவாசாரியார், பட்டினத்தடிகள், சிவஞான யோகிகள், கச்சியப்ப முனிவர் முதலியோர்களால் பாடல்பெற்றது. ஆயிரக்கால் மண்டபத்தில் 540 தூண்கள்தானிருக்கின்றன. இக்கோயிலிலுள்ள காமதகனச் சிலை அழகியது, பார்க்கத்தக்கது. பூர்வகாலத்தில் இக்கோயிலை ஜீர்ணோத்தரணம் செய்த கரிகாலச் சோழன் சிலையு மிங்குள்ளது. இக்கோயிலுக்கெதிரிலுள்ள 16 - கால் மண்டபம் 1080 - வருஷம் கட்டப்பட்டது. கோயிலில் 6 - காலம் பூஜை யுண்டு. அர்த்த ஜாமக் கட்டளை பச்சையப்ப முதலியாருடையது. ஏகாம்பரநாதர் கோயிலிலுள்ள அகஸ்தீஸ்வரர் மண்டபமும், சபாநாதர் மண்டபமும் பழய சோழ கட்டிடங்கள். வாஹன மண்டபம் விஜய நகரத்தரசர்கள் காலத்தியது; சுமார் 400 - வருடங்களுக்கு முன் கட்டப்பட்டதென்பர் சிலர்; மூன்றும் பிராகாரத்து கோபுரமும் அக்காலத்தியதே. இங்கு பல சத்திரங்கள் உள. (1) குஜராதி சத்திரம் சர்வதீர்த்தத்திற் கருகில் உள்ளது, ஸ்டேஷனுக்கு 1 - மயில். (2) ராஜா வாசுதேவரெட்டியார் சத்திரம் 1 - மயில் (3) பச்சையப்ப முதலியார் சத்திரம் ¾ - மயில் (4) கம்மாள சத்திரம் ½ - மயில் (5) கொசமட சத்திரம் ½ - மயில் (6) யாதவர்கள் சத்திரம் ¼ - மயில் கீழண்டை ராஜவீதி; (7) ஜவுளிக்கடை சத்திரம் ½ - மயில்; (8) ராதாகிருஷ்ண தாஸ்தாகா சத்திரம்; (9) வாசாபாலைய செட்டியார் சத்திரம். (10) வன்னியர் சத்திரம், (11) கோவிந்தப்ப நாய்க்கர் சத்திரம் ஆடிசன் பேட்டை, (12) ஐயாபிள்ளை சத்திரம், (13) இராம நாய்க்கர் சத்திரம், இரண்டும் திருக்கச்சிநம்பி

தெரு. மோடார் பஸ்ஸுகளும், ஜட்காவண்டிகளும் ஏராள மாகக் கிடைக்கும்; ஹோட்டல்களுக்கும் குறைவில்லை.

(2) **திருக்கச்சி மயானம்** :—இக்கோயில், பெரிய கோயிலில் அடங்கி யிருக்கிறது; ஸ்வாமிக்கு மயானேஸ்வரர் என்று பெயர்; பண்டாசூரன் பூசித்த ஸ்தலம்; பழய கோயில் மணற் கல்லாலாயது; அதை இடித்து கருங் கல்லால் புதிதாய்க் கட்டப்பட்டிருக்கிறது; கோயில் சிவ கங்கை குளத்தின் ஒருபுறம் இருக்கிறது. பழய கோயில் 11 - ஆம் ஆண்டில் கட்டப்பட்டதாம். ஆதி காலத்தில் இக்கோயில் கிழக்கு பார்த்ததாக இருந்திருக்க வேண்டும் என்று எண்ண இடமுண்டு. பண்டா சுரனை பரமசிவம் சம்ஹரித்த ஸ்தலமென்பர்; யாக குண்டமே சிவ கங்கை என்பர். சிலர் கச்சிமயானம் சர்வ திர்த்தக் கரையிலுள்ள தென்பர் சிலர்.

(3) **ரிஷபேஸ்வரர் கோயில்** :—இது சிவ கங்கைக்கு மேற்கிலுள்ள ஒரு சிறு கோயில்; மணற் கல்லாலாயது பெரும்பாலும். சுமார் 1300 வருடங்களுக்கு முன் கட்டப் பட்டிருக்கலாம். கோயில் மேற்கு பார்த்தது; இதற்கு பிரத்யேக பூஜை யுண்டு.

(4) **கைலாசநாதர் கோயில்** :—இது சர்வ தீர்த்தத்திற்கு மேற்கிலுள்ளது; இரண்டு சிவாலயங்களடங்கியது. இதன் பூர்வீகப்பெயர் ராஜஸிம்ம பல்லவேஸ்வரம் என்பதாம்; ராஜசிம்மன் என்னும் பல்லவ அரசனால் கட்டப்பட்டது. கட்ட ஆரம்பித்த வருஷம் 567 - ஆம், கட்டி முடிந்தது 670 - ம் ஆண்டில், இரண்டாவது நரசிம்மன் அல்லது ராஜசிம்மன் காலத்தில். இங்குள்ள கர்ப்பக் கிரஹத்திற்கு எதிரில் **நாரதேஸ்வார் ஆலயம்** என்று ஒரு சிவாலயமுண்டு; இதற்கு முற்காலப்பெயர் மஹேந்திரேஸ்வரம்; மஹேந் திரன் எனும் பல்லவ அரசனால் கட்டப்பட்டதாம். பல்லவ வைரியாகிய குலோத்துங்க சோழன் காலத்தில், இக்கை லாசநாதர் கோயில் மூடப்பட்டு, இதன் மான்யங்களெல் லாம், இங்கு அருகாமையிலுள்ள அநேகதங்காபதம் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டது. இக்கோயில் மிகவும் புராதனமானது; கருங்கற்களால் கட்டப்பட்ட கோயில் களுள் மிகவும் முற்பட்டது. நடுவில் உயர்ந்த விமானம் உடையது; சுற்றிலும் 90 - சிறு அறைகள் அல்லது

மண்டபங்கள் அமைந்தது. அவைகளி லெல்லாம் அழகிய சிஸ்பங்கள் அமைந்துள்ளது. முதல்வாயிலின் வடபுறம் உள்ள சிறு கோயில் நித்தியவனீதேஸ்வரர் ஆலயம், எனக் கூறப்பட்டிருக்கிறது. இங்கு சுவர்களில் வர்ணந்தீட்டிய சித்திரங்கள் வரையப்பட்டிருக்கின்றன என்பதை சில வருடங்களுக்கு முன்பு பிரஞ்சு தேசத்து தூப்ரெயில் என்பவர் கண்டுபிடித்திருக்கிறார். அவைகளுள் சிலவற்றை வடக்கிலுள்ள மண்டபங்களில் காணலாம். இக்கோயிலில் அர்த்தநாரீஸ்வரர் சிலை யிருக்கிறது; தேவி பாகம் வீணை தாங்கி யிருக்கிறது, ஸ்வாமி பாகம் ரிஷபத்தின்மீது ஆரோஹணித்திருக்கிறது. காஞ்சீபுரத்துள்ள ஒரு கல்வெட்டில் இக்கோயில் சுவாமி திருக்கற்றளி (திரு + கல் + தளி) மஹாதேவர் என்று குறித்திருக்கிறது. இங்குள்ள லிங்கோத்பவமூர்த்தி மிகவும் அழகிய வேலைப்பாடுள்ளது. மதில் சுவர்களில் 24 யாளிகள் அல்லது சிம்மங்கள் இருக்கின்றன; இவை பல்லவர்களுடைய பிருதுகள் ஆகும்; பல்லவ தூண்களி லெல்லாம் இவை பெரும்பாலு மிருக்கின்றன. டாக்டர் மீனாட்சி அம்மாள் இக்கோயில் கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்கு முன் கட்டப்பட்டதென்பர். புத்தரும் அவரது சிஷ்யரான நாரதரும் சிவபக்தியைக் கெடுத்த பாபம் தீரும்படியாக இங்கு கைலாசநாதர் லிங்கத்தையும் நாரத லிங்கத்தையும் பூசித்ததாக ஐதிகம். கோயிலில் பிரதட்சிணம் வரும்போது தாயின் கர்ப்பத்திலிருந்து வருவதுபோல் கஷ்டம் என்பது ஐதிகம், இதில் சில இடங்களில் தவழ்ந்து தான் வரவேண்டி யிருக்கிறது. கைலாசநாதர் லிங்கம் 12 பட்டைகளை யுடையது. விமானம் மஹாபலிபுரம் ரதங்களைப் போன்றது.

(5) **அநேக தங்காபதம்** :—இதற்கு கச்சி அநேக தங்காபதம் என்றும் பெயர். இது கைலாசநாதர் கோயிலுக்குத் தெற்கில், புத்தேரித் தெருவிற்கு மேற்கே க்ழனிமத்தியில் உள்ளது. விநாயகரும் முருகரும் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமியின் பெயர் அணையதங்க உடைய நாயனார் என்று கல்வெட்டுகளில் உளது. ஸ்வாமி அநேக தங்காவதேஸ்வரர், தேவி காமாட்சி யம்மன்; தாணுதீர்த்தம். சுந்தரமூர்த்தி பாடல் பெற்றது.

**நாரதேஸ்வர ஆலயம்** :—நாரதர் சிவனடியாரை வஞ்சித்த பாபம் தீரப் பூசித்த ஸ்தலமென்பர்.

**காயாரோகணேஸ்வரர் ஆலயம்** :—மகாலட்சுமியும் பிரஹஸ்பதியும் பூசித்த கோயில்; காயா ரோகண தீர்த்தம்.

(6) **கச்சி மேற்றளி** :—இதற்கு திரு மேற்றளி என்றும் பெயர்; கச்சாலேஸ்வரர் ஆலயத்திற்கு மேற்கிலுள்ளது பிள்ளைபாளயத்தில்; மேல் + தளி—மேற்கிலுள்ள கற்கோயில், என்று அர்த்தமாகும். மஹாவிஷ்ணு சிவ சாரூபம் பெறவேண்டி தவமியற்றிய ஸ்தலம். திருஞான சம்பந்தர் சரித்திர சம்பந்தம் உடையது; ஸ்வாமி திருமேற்றளி நாதர், தேவி காமாட்சியம்மை; விஷ்ணு தீர்த்தம். இது பூர்வ காலத்தில் ஒரு சமணக் கோயிலாயிருந்து பிறகு சிவாலயமாக மாற்றப்பட்டது என்று எண்ண இடமுண்டு. திருநாவுக்கரசர் சுந்தரமூர்த்தி பாடல் பெற்றது.

(7) **முக்தீஸ்வரர் கோயில்** :—இது ஒரு பழய பல்லவாலயம், வைகுண்டப் பெருமாள் கோயிலுக்கு அருகிலுள்ளது, றெயில் ஸ்டெஷனுக்குப் போகும் பாதையில் மாதங்கேஸ்வரர் கோயிலுக்கு வடக்கிலுள்ளது, நந்திவர்மன் காலத்து கல்வெட்டு இங்கு ஒன்றுளது. இதன் பூர்வீகப் பெயர் தர்மமஹாதேவி ஆலயம்; தர்ம மஹா தேவி எனும் பல்லவ அரசியால் கட்டப்பட்டது போலும். சுமார் 1200 - வருடங்களுக்கு முற்பட்ட கட்டடம்; சிலர் இதை கைலாச நாதர் கோயிலுக்கு முற்பட்ட தென்று எண்ணுகின்றனர். கோயில் சிறியது. ஈசான தேவதை பூசித்த ஸ்தலம்.

(8) **கச்சாலேஸ்வரர் ஆலயம்** :—கச்சீஸ்வரர் கோயில் என்றும் வழங்கப்படுகிறது. கச்சபம் = ஆமை; மஹா விஷ்ணு கூர்மாவதாரத்தில் பரமசிவத்தை பூசித்த ஸ்தலம். கோயிலில் இதற்கு ஒரு சிலை யிருக்கிறது. முதல் குலோத்துங்க சோழன் காலத்தில் இக்கோயில் ஜீர்ணோத்தாரணம் செய்யப்பட்டதாக ஒரு கல்வெட்டினால் அறிகிறோம். இங்குள்ள துர்க்கை சந்நிதிக் கெதிரில் உள்ள ஓர் கல்லில் சூர்யாஷ்டகத்தில் ஐந்தாறு பாட்டுகள் செதுக்கப்பட்டிருக்கின்றன, இத்துர்க்கை கோயில் பழய சோழ கட்டிடம். இக்கோயிலில் ஐந்தாறு பல்லவ தூண்கள் உள. கர்ப்பக்கிரஹத்திற்கு எதிரிலுள்ள மண்டபம் விஜய நகரத்தரசர்கள் காலத்தியது. இங்கு குறும்பர்கள் சிலை உருவங்கள் சில இருக்கின்றன. பிரம்மோற்சவம்

சித்திரைமாசம்; முருக்கடிசேர்வை விசேஷம். கோயிலுக்குள் போக வடக்கு வழியாகத்தான் போகவேண்டும். இங்குள்ள குளத்திற்கு இஷ்டசித்தி தீர்த்தம் என்று பெயர். சூரியன் மாந்தாதா பூசித்த க்ஷேத்திரம்; இங்கு அவர்களின் கோயில்கள் உள. கர்ப்பக்கிரஹத்தில் பல கல் வெட்டுகள் உள. கோபிநாத் ராவ் என்பவர் இக் கோயில் கச்சியப்பர் என்பவரால் கட்டப்பட்ட தென்றும் கச்சியப்ப ஈஸ்வரர் என்று ஸ்வாமிக்கு திருநாமம் என்றும் நினைக்கிறார். ஸ்தலவிருட்சம்—புரசை, ஸ்வாமி கச்சபேஸ்வரர்; தேவி - காமாட்சியம்மன்.

பெரியகாஞ்சியிலுள்ள வைகுண்டப் பெருமாள் கோயில், ஆதியில் சிவாலயமா யிருந்து பிறகு வைஷ்ணவ ஆலயமாக மாற்றப்பட்ட தென்று காலஞ்சென்ற நடேச சாஸ்திரியார் கூறியுளார். அதன் பழய பெயர் பரமேஸ்வர விண்ணகரம். கோயிலுக்கு எதிரிலுள்ள கோபுரத்தில் சுப்பிரமணியர் உருவைக் காணலாம்; கோயிலின் மற்றொரு புறம் யோகதட்சிணாமூர்த்தியின் உருவம் உளது.

(9) ஜ்வரஹரேஸ்வரர் ஆலயம்:—ஜ்வரத்தை நிவாரணம் செய்யும் மஹிமையுடைய ஈஸ்வரர் என்றபடியாம். கர்ப்பகிரஹம் கஜப்பிருஷ்ட ஆகிருதி உடையது. தேவர்களுக்கு வந்த ஜ்வரத்தை தீர்த்தபடியால் ஸ்வாமிக்கு அப்பெயர் வந்ததென்பர்; கோயில் 125 + 250 அடி விஸ்தீரணமுடையது. கர்ப்பக்கிரஹத்திலும் மஹா மண்டபத்திலும் கல் வெட்டுகள் உள. இங்குள்ள பலகணிச் சில்பம் பார்க்கத்தக்கது.

(10) கச்சிநெறிக் காரைக் காடு:—இதற்கு சித்திரபுரம் என்றும் பெயர் உண்டு; இது திருக்காலிஸ்வரர் கோயில் என தற்காலம் அழைக்கப்படுகிறது. ஆடிசன்பேட்டையிலிருக்கும் தேருக்கு வட கிழக்கில் ¾ மயில் தூரத்தில், கொல்லை வெளியில், வேப்பங்குளத்திற்கு அருகாமையிலிருக்கிறது. ஆதியில் இவ்விடம் காரைவன மாயிருந்த தென்பர். புதனும் இந்திரனும் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி சத்யவாத நாதேஸ்வரர், தேவி காமாட்சியம்மன் அல்லது காரைக்குடியம்மை; தீர்த்தங்கள், இந்திர தீர்த்தம், காரை தீர்த்தம், சத்ய தீர்த்தம்; கல்வெட்டுகளில் ஸ்வாமி பேயர் திருக்கர்ரைக் காடுடையார் என்றிருக்கிறது. திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

(11) மாதங்கேஸ்வரர் கோயில் :—காஞ்சீபுரம் கஸ்பாவுக்கு வெளியில் உள்ளது, வைகுண்டப் பெருமாள் கோயிலுக்குத் தென்மேற்கில், ஆஸ்பத்திரிக்குப் போகும் வழியில்; கர்ப்பக் கிரஹம் மஹாபலிபுரம் கோயிலைப் போன்றது. சற்றேறக்குறைய எட்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாம்—நந்திவர்மன் எனும் பல்லவ அரசனால். இக்கோயிலும் முக்தேஸ்வரர் கோயிலும் ஒரேமாதிரியா யிருக்கின்றன. இங்கு மணற் கல்லாலாய சில்பங்கள் இருக்கின்றன. கைலாசநாதர் கோயிலுக்கு முற்பட்டதென்பர். சிறிய கோயில்; மேற்குபார்த்தது. மாதங்க முனிவர் பூசித்த படியால் மாதங்கேஸ்வரர் எனப்பெயர் பெற்றதாம்; இங்கு தேவி சந்நிதியில்லை.

(12) ஒணகாந்தன்றளி :—சர்வ தீர்த்தத்திற்கு வடக்கிலுள்ளது. ஒணன் காந்தன் எனும் இரண்டு அசுரர்கள் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி—ஒணகாந்தேஸ்வரர், தேவி, காமாட்சியம்மன்; ஒணகாந்த தீர்த்தம், விஷ்ணுதீர்த்தம்; சுந்தரமூர்த்தி திருப்பதிகம்பாடி பொன் பெற்ற க்ஷேத்திரம்.

(13) ஐராவதேஸ்வரர் கோயில் :—ராஜ வீதிக்குக் கிழக்கில் கச்சேஸ்வரர் கோயிலுக்கு சமீபத்தில் வடக்கில் உள்ளது. ஒரு தந்தத்தை யிழந்த ஐராவதம் பரமசிவத்தைப் பூசித்து அத்தந்தம் பெற்ற ஸ்தலம். பல்லவ கட்டிடம்; எட்டாம் ஆண்டின் கடைசியில் கட்டப்பட்டது. மிகவும் சிறிய கோயில். கோயில் பூர்த்தியாக வில்லை.

(14) திரிபுராந்தகேஸ்வரர் கோயில் :—காமாட்சி யம்மன் கோயில் சந்நிதி வீதிக்கு எதிரிலுள்ள ஒரு சந்தில் இருக்கிறது. திரிபுர அசுரர்கள் பூசித்த ஸ்தலமென்பர். பல்லவ கட்டடம்; 8-ஆம் நூற்றாண்டின் கடைசியில் கட்டப்பட்டதென்பர்.

மேற்குறித்த ஆலயங்களன்றி, வசிஷ்டேஸ்வரர் கோயில், சோணேஸ்வரர் கோயில், புண்யகோடீஸ்வரர் கோயில், பச்சிமாலயம், பனுதாம், பணீச்சரம், சுரகரீச்சாம, வீராட்டம், வேதநூபுரம், உருத்திரம், இந்திராலயம், நான்முகம், பரசிராமம், அரேகபேசம், இராமம், பிரமம், வச்சிரநகரம், மறசை, வாராகம், காரோணம், பராசரீச்சாம், மாணீசசரம், மகா சாத்தன்றளி, வீரட்டானேஸ்வரர் கோயில், வன்மிகநாதர் கோயில், பலபத்திர ஈசர்

கோயில், பயிரவேசர் கோயில், கவுளேஸ்வரர் கோயில், மங்களீஸ்வரர் கோயில், ராமநதீஸ்வரர் கோயில், மாத லீஸ்வரர் கோயில், அநந்தபத்மநாபேஸ்வரர் கோயில்; தக்கீஸ்வரர் கோயில்; மூப்புராரீஸ்வரர் கோயில், இரண்ய ஈசர் கோயில், நாரசிங்கேஸ்வரர் கோயில், வராகேஸ்வரர் கோயில், அந்தகேஸ்வரர் கோயில்; வாணீசர் கோயில், சலந்தரீஸ்வரர் கோயில்; திருமாற்பேறு சிவாலயம்; ரேணுகேஸ்வரர் கோயில்; வருணீஸர் கோயில்; நவக்கிரக ஈஸ்வரர் கோயில்; பாண்டலேசர் கோயில்; பச்சீஸ்வரர் கோயில், அமரீசர் கோயில், வீரராகவேஸ்வரர் கோயில்; சித்தீசர் கோயில், அரிசாபம் தீர்த்த ஈசர் கோயில்; இஷ்டசித்தீசர் கோயில்; கல் கீசர் கோயில், காரணீஸ்வரர் கோயில்; சர்வதீர்த்தீஸ்வரர் கோயில்; மஹாகாளீஸ்வரர்கோயில், சோழேஸ்வரர் கோயில் முதலான கோயில்கள் உள. கடைத்தெருவில்-காரணீஸ்வரர் கோயில், பழயகோயில், 1050 வருஷத்திய கல்வெட்டுளது; சக்கேஸ்வரர் கோயில் பணமணீஸ்வரர் கோயில், இது ராஜேந்திர சோழன் கட்டினது; மஹாகாளீஸ்வரர் கோயில் காமாட்சியம்மன் கோயிலுக்கருகிலுளது; சோணேஸ்வரர் கோயில் கல்வெட்டுகளில் ஸ்வாமிபெயர் கரிகால சோழேஸ்வரமுடைய நாயனுர் என்றிருக்கிறது; சோழநாதேஸ்வரர் கோயில் காமாட்சி கோயில் கிழக்கு கோபுரத் தருகிலுள்ளது.

**சின்னகாஞ்சீபுரம்:**—இங்குள்ள வரதராஜப் பெருமாள் கோயில், ஆதியில் சிவாலயமாயிருந்து, பிறகு குண்டு கோபாலராயர் என்பவரால், விஷ்ணு ஆலயமாக மாற்றப் பட்ட தென்பதற்கு பல ஆதாரங்கள் உண்டு. ஸ்வாமி பெயர் புண்யகோடீஸ்வரர் என்றிருக்கலாம்.

**காட்டுப்பள்ளி:**—கீழைத்திருக் காட்டுப்பள்ளி சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, மேற்படி தாலூகா. திருவெண்காட்டிற்கு 1 - மயில மேற்கு. சீர்காழியி லிறங்கிப் போகவேண்டும். தேவர்கள் தங்கள் அரசனுன இந்திரன் விருத்திராசுரனைக் கொன்ற பாபம் நீங்கி, தேவலோகத்தை மறுபடியும் ஆளவேண்டுமென்று சிவபெருமானைப் பூசித்த ஸ்தலம்; ஸ்வாமி ஆரண்ய சுந்தரேஸ்வரர், தேவி அகிலாண்ட நாயகி; அமிர்தப் பொய்கை; திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது. இங்கு அக்னிஸ்வரர் கோயில், என்று மற்றொரு சிவாலயம் உண்டு, தேவி சௌந்தர நாயகி.

**காட்மாண்டு**:—வட இந்தியா றெயில் ஸ்டேஷன். சிவாலயம்; பரமேஸ்வரர், பார்வதி.

**காட்டுப் பள்ளி, மேலைத்திருக்காட்டுப்பள்ளி**:—சென்னை ராஜதானி, பூதலூர் ஸ்டேஷனுக்கு 4½ - மயில் மேற்கு; திருவையாற்றிலிருந்து 10 - மயில்; குடமுருட்டி யாற்றின் தென்கரையிலுள்ளது. உறையூர் அரசன் மூத்த மனைவிக்கு சிவபிரான் அருளிச் செய்த க்ஷேத்திரம். பழய கோயில்; கர்ப்பக்கிரஹம் தற்கால பூமிமட்டத்திற்கு கீழ் இருக்கிறது; மஹாமண்டபம் உயர்ந்த மட்டத்திலிருக்கிறது; பிறகு கட்டப்பட்டது. ஸ்வாமி—தீயாடியப்பர், தேவி வார்கொண்ட முலையம்மை. சூரியதீர்த்தம். இங்குள்ள கோயிலுக்குள் விஷ்ணு ஆலயம், ஒன்றுளது. கோயில் நாட்டுக்கோட்டை செட்டிமார்களால் சிலபாகம் புதுப்பிக்கப்பட்டது. திருஞானசம்பந்தர், அப்பர், பாடல் பெற்றது.

**காடுத்துருத்தி**:—திருவாங்கூர் ராஜ்யம், கழுத்தினுச்சி என்பது மருவியது என்பர்; ராட்சசனை கரன் கழுத்தில் இறுக்கியிருந்த சிவலிங்கம் வைக்கப்பட்ட இடமென்பர்; சிவாலயம்.

**கான்டேஷ் பிரிவு**—பம்பாய் ராஜதானி. இங்கு அடியிற் கண்ட சிவாலயங்கள் உள. 1. **மஹாபலேஷ்வர்**, ஸ்வாமி மஹாபலேஷ்வர், பழய சிவாலயம் 2. **பாட்டகாவன்**, மஹாதேவர் கோயில் 3. **சாங்தேவ்** சிவாலயம் சுமார் 150 வருடங்களுக்குமுன் அஹல்யாபாயால் கட்டப்பட்டது 4. **சார்தான்** சிவாலயம் 750 வருடங்களுக்குமுன் கட்டப்பட்டதென்பர் 5. **டாட்ரே** சிவாலயம் 12-அடி சதுரம் ஹேமாத்பன்ட் கட்டிடம் 6. **கார்கேட்** சிவாலயம் பூமியின் கீழ்மட்டத்திலிருக்கிறது; 47 × 24 அடி. கொஞ்சம் பாழுடைந்திருக்கிறது 7. **ஹிராபூர்** ஹேமாத்பன்ட் கட்டிட சிவாலயம் 50 × 27 × 12 அடி 8. **கந்தாரி** சிவாலயம் ஸ்வாமி மஹாதேவர்; ஹேமாத்பன்ட் கட்டிடம் 15 × 12 × 20 அடி 9. **காட்கவான்** சிவாலயம், கருப்புக் கல்லாலாயது 37 × 32 அடி 10. **குர்ஹத்டுர்ட்** சிவாலயம், ஹேமாத்பன்ட் கட்டிடம் 18 × 15 அடி 11. மெஹ்றூன் சிறு சிவாலயம் 8 அடி சதுரம் 12. **நாகர்தேவ்லாஹூண்ட** சிவாலயம் 13. **பகோலா** சிவாலயம் 14.

பாட்னு மஹாதேவர் கோயில் 75 × 76 × 18 அடி 15. பிம்பல் னேர் சிவாலயம் ஹேமாத்பன்ட் கட்டிடம் 16. பிம்பர்கேடா சிவாலயம், ஸ்வாமி பரேஷ்வர் மஹாதேவ் 17. பிரகோசி இங்கு 3 சிவாலயங்கள்-கௌதமேஷ்வர் கோயில், சங்கமேஷ் வர் கோயில், கேதாரேஷ்வர் கோயில் 18. ராவோட் இன்சோலி; 19. ரியாகாவன் சிவாலயம் பாழடைந்திருக்கிறது. 20. ஷேன் தூர்னி, ஹேமாத்பன்ட் கட்டிட சிவாலயம் 42 × 30 அடி விஸ்தீரணம் 21. சுல்தான்பூர் மஹாதேவர் கோயில் பாழடைந்திருக்கிறது 22. அம்லாட், இங்கு இரண்டு சிவாலயங் கள் உள. சங்கேஷ்வரர் கோயில், ரோக்டீஷ்வர் கோயில் 23. புல்லாடி சிவாலயம் 15 × 132 அடி 24. உந்திர்கேடா ஸ்ரீ நாகேஷ்வர் கோயில் சுமார் 200 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. 25. வாட்கோவான் சிவாலயம் ஹேமாத் பன்ட் கட்டிடம் 38 × 27 அடி. 26. வாக்லி மான்பால் சிவால யம்; இங்கு பூர்வத்தில் சிவலிங்க மிருந்தது.

**காண்டேயா** :—பலிஹொன்னூர் தாலுக்கா, மைசூர் ராஜ்யம், கனசாவுக்கு 5 மயில்; மார்க்கண்டேஸ்வரர் கோயில்.

**காங்தேஸ்வரம்** :—திருநெல்வேலி ஜில்லா சென்னை ராஜ தானி; ஆள்வார் திருநகரி யருகிலுள்ளது. சிவாலயம் ஸ்வாமி காங்தேஸ்வரர், தேவி அறமுரைத்த நாயகி.

**காம்பிலி** :—ஐக்கியமாகாணம், சிவாலயம்; ஸ்வாமி ராமேஷ்வர்நாத் மஹாதேவ்; ஆலயம் கிலமா யிருக்கிறது. இங்கு கன்னேசி என்னும் இடத்தில் மற்றொரு சிவாலயம்; மிகவும் பாழாயிருக்கிறது. பார்வதியும் பரமசிவனும் நந்தி யின்மீது ஆரோஹணித்திருக்கும் விக்ரஹம் மாத்திரம் கெடாமலிருக்கிறது.

**காமபுரம்** :—தென் இந்தியா சிவாலயம், ஸ்வாமி சந்திர சேகரர், தேவி அமிர்தாம்பிகை.

**காமரசவல்லி** :—சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா உடையார்பாளையம் தாலுக்கா; சிவாலயம், ஸ்வாமி கார்க்கோடேஸ்வரர், கோயிலில் ரதியின்விக்ரஹம் உளது- அழகியது. பல கல்வெட்டுகள் உண்டு. 900 வருடங்களுக்கு மேற்பட்டவை. இங்கு கைலாசமுடையவர் கோயில் என்று மற்றொரு பழய கோயில் இருந்ததாகத் தெரியவருகின்றது.

**கார்முத்தி:**—சென்னை ராஜதானி, ராம்நாட் ஜில்லா, பழய சிவாலயம்; சுந்தரபாண்டியனால் கட்டப்பட்டது.

**கார்கோலம்:**—சென்னை ராஜதானி, கோதாவரிக் கரையிலுள்ள சிவஸ்தலம்.

**கார்ஜாஹ:**—கிழக்கு இந்தியா, பண்டல்கண்டில் உள்ளது, சத்தர்புரி சமஸ்தானம், மத்திய காலத்தில் கட்டிய முக்கியமான அழகிய கோயில்.

**கார்கோலம்:**—சென்னை ராஜதானி, சிவாலயம ஸ்வாமி ராமேஸ்வரர், தேவி சொக்கநாயகி, யமதீர்த்தம் சந்திர புஷ்கரிணி, யமனும் சந்திரனும் பூசித்த ஸ்தலம்

**கார்பேட்டா:**—வடஇந்தியா பங்காள் நாக்பூர் ரெயில்வே மிட்னபூர் ஜெரியா பிரிவு, ரெயில்ஸ்டேஷன். சிவாலயம் ஸ்வாமி காங்கேஸ்வர் சிவ; இங்கு 7 பெரிய தடாகங்கள் உண்டு, ஒவ்வொன்றின் மத்தியிலும் ஒரு ஆலயமுண்டு; அவற்றுள் மிகவும் உந்நதமான ஆலயம் சிவாலயம்

**காரமங்கலம்:**—திருமெய்யம் தாலூகா, புதுக்கோட்டை சமஸ்தானம், சென்னை ராஜதானி; அகஸ்தீஸ்வரர் கோயில், இது 13-ம் நூற்றூண்டிற்கு முன் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

**காரிமங்கலம்:**—தர்மபுரி தாலூகா, சேலம் ஜில்லா, சென்னை ராஜதானி, வீரபத்ர ஸ்வாமி கோயில்; பல கல்வெட்டுகள் உடையது.

**காரைக்கால்:**—தென் இந்தியா, தஞ்சாவூர் ஜில்லா, பிரெஞ்சு இலாகா, ரெயில் ஸ்டேஷன்; திருத்தர்மபுரம் என்றும் பெயர். சிவாலயம் கைலாசநாதர் கோயில், யார்முழிநாதர் கோயில், தர்மபுர ஆதீன மேற்பார்வை. ஆனிமீ காரைக்காலம்மையார் மாங்கனி உற்சவம் விசேஷம். இங்கு முசாபர் பங்களா உண்டு. சோமநாதர் கோயில்; சோமநாதர்-சோம நாயகி, சந்திரபுஷ்கரிணி; பிருகு, சௌமியர், சௌநகர் பூசித்தது.

**காரைக்குடி:**—சென்னை ராஜதானி, சிவாலயம்; நாட்டுக்கோட்டை செட்டிமார்களால் கட்டப்பட்டது. இதற்கு நகர் சிவன் கோயில் என்று பெயர். இங்கு முசாபர் பங்களா உண்டு. ஸ்வாமி நாகநாதஸ்வாமி, தேவி பிரஹந்நாயகி, பிரம்மோற்சவம் ஆனிமாதம். காரைச்குடிக்கு அருகிலுள்ள

சிவஸ்தலங்கள் :—சூரக்குடி, பூவாண்டிப்பட்டி, வேலங்குடி, இலுப்பைக்குடி, கண்டனூர், சாயக்கோட்டை முதலியன.

காரைமடை :—கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, ரெயில் ஸ்டேஷன் சிவாலயம், இங்கு சிவப்புக் கல்லாலாகிய யானைகள் உண்டு, பார்க்கத் தக்கவை. கோயிலும் அழகியது. இங்கு சத்திரங்கள் உண்டு.

காரோணம் :—வட இந்தியா, சுயம்புலிங்கம். ஸ்வாமி லகுலீஸ்வரர்.

காலடி :—தென் இந்தியா மலையாள தேசம். சிவாலயம் ஸ்வாமி சந்திரமௌளீஸ்வரர், உமாதேவி. ஆதி சங்கராசாரியர் பீடம்.

காலகநாத் :—மத்திய இந்தியா, சௌடம்பூருக்கு 9-மயில்; துங்கபத்ரையும் வரதா எனும் நதியும் சங்கமமாகுமிடம். காலகேஸ்வரர், கோயில் கருப்புக் கல்லால் கட்டப்பட்டது. 80 × 40 அடி விஸ்தீரணம். கோயிலின் அடிபீடம் விசித்திரமானது. சாளுக்கிய சில்பம். 1050-வருஷம் கட்டப்பட்டது. கர்ப்பக்கிரஹத்தைச் சுற்றி அணைபோட்டதுபோலிருக்கிறது.

காலஞ்சார் :—வட இந்தியா, சுயம்புலிங்கம், ஸ்வாமி நீலகண்டர்.

காவ்வூரு :—ரேபள்ளே தாலூகா, குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம், ஸ்வாமி ராமலிங்கேஸ்வரர்.

காவன்மங்கலம் :—தென் இந்தியா, அறிபத்த நாயனர் பூசித்த ஸ்தலம்.

காவாந்தண்டலம் :—காஞ்சிபுரம் தாலூகா, செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி, சோளேஸ்வரர் கோயில்.

காவிரிப்பாக்கம் :—தென் இந்தியா, சிவாலயம், பழய கோயில், பல்லவ கட்டிடம்.

காவிரிப்பூம்பட்டினம் :—(திரு) இதற்கு பல்லவனீச்சரம் என்பது தேவாரப் பெயர். தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சீர்காழிக்கு 10-மயில் தென்கிழக்கு. சாயவனத்திற்கு அருகிலுள்ளது. ஓர் பல்லவ அரசன் முக்திபெற்ற ஸ்தலம். ஸ்வாமி பல்லவனேஸ்வரர், தேவி-சௌந்தர நாயகி காவிரி தீர்த்தம். இயற்பகை நாயனரும் பட்டினத்துப்

பிள்ளையாரும் பிறந்த இடம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

**காளஹஸ்தி** :—சித்தூர் தாலூகா, வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, பிரபல சிவாலயம்; வாயுலிங்கம், கண்ணப்ப நாயனார் முத்திபெற்ற க்ஷேத்திரம். கோயில் சுவர்ணமுகியின் கிழக்கரையிலுள்ளது. ஸ்வாமி சந்நிதியில் உள்ள என்றும் அவியா தீபம் எந்நேரமும் காற்றினால் அசைந்துகொண்டிருக்கிறது. ஸ்ரீ கா ள ஹ ஸ் தி என்பது ஊரின் முழுப்பெயர்; ஸ்ரீ-சிலந்தி, காளம்-பாம்பு, ஹஸ்தி - யானை, இவை மூன்றும் பூசித்து முத்திபெற்ற க்ஷேத்திரமாதலால் ஸ்ரீகாளஹஸ்தி என்று பெயராயது. சிவகோசரியார் முத்திபெற்ற ஸ்தலம். நக்கீரர் பூசித்த ஸ்தலம். வாயுபகவான் பூசித்தது. மூவர் பாடல் பெற்றது. இதை தட்சிண கைலாசம் என்பர். மாசி மாதம் பிரம்மோற்சவம்; சிவராத்திரி மிகவும் விசேடம். இவ்வூருக்கு ஸ்ரீ புரம் என்றும் மும்முடிச் சோழபுரம் என்றும் பழய பெயர்களுண்டு. சுயம்புலிங்கம்; வெண்மை நிறமுடையது. எதிரிலுள்ள நந்தியும் வெண்மை நிறமுடையது. ஸ்வாமி மேற்குபார்த்து வீற்றிருக்கிறார். இக்கோயிலின் இரண்டாம் பிராகாரத்தில் 30-அடியின் கீழ் பாதாள விநாயகர் கோயிலிருக்கிறது. இங்குள்ள 1000 கால் மண்டபமும் காலி கோபுரமும் ஸ்ரீ கிருஷ்ணதேவராயரால் கட்டப்பட்டவை. ஸ்வாமி - காளத்திநாதேஸ்வரர், தேவி - ஞானப்பூங்கோதையம்மை. தீர்த்தம் பொன்முகலி, திருஞானசம்பந்தர் அப்பர் பாடல் பெற்றது. இக்கோயிலில் ஸ்வாமி பூசைக்கு தும்பைப்பூ மாலை விசேஷம். கோபுரம் மூன்றே நிலைகளுடையது. பெரிய கோயிலின் தெற்கிலுள்ள குன்றில் **கண்ணப்ப ஈஸ்வரர்** கோயில் இருக்கிறது. கண்ணப்பர் பூசித்த ஸ்தலம். இங்கு **மணிகண்டதீஸ்வரர்** கோயில் என்று ஒரு சிவாலயமுண்டு. பழய கல்வெட்டுகளில் திருமணிக் கங்கையுடைய நாயனார் என்று ஸ்வாமி பெயர் இருக்கிறது. இக்கோயில் 12-ஆம் நூற்றாண்டில் ஆண்ட வீரராஜேந்திர சோழனால் கட்டப்பட்டது. இக்கோயிலுக்குள் விஷ்ணு சந்நிதியும் உண்டு. ஸ்வாமி பெயர் திருமணிக் கங்கையுடைய நாயனார் என்றிருக்கிறது கல்வெட்டுகளில்; இது மூன்றாம் குலோத்துங்க சோழனால் 12-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

**கார்னேஸ்வரம் :—**சென்னை ராஜதானி, கோதாவரிக் கரையிலுள்ள சிவாலயம்.

**காருயில் :—**(திரு) காருயல் எனவும் திருக்காறை வாசல் எனவும் அழைக்கப்படுகிறது. சென்னை ராஜதானி; திருநெட்டி யாற்றங்குடிக்கு 3-மயில் தென் கிழக்கு திருவாரூருக்கு 8-மயில் தெற்கு, இந்திரன் பூசித்த க்ஷேத்திரம். முசுகுந்த சக்ரவர்த்தி இந்திரனிடம் பெற்றுவந்த தியாக ராஜப் பெருமான் இங்கு எழுந்தருளப் பெற்றது. சப்த விடங்க ஸ்தலங்களில் ஒன்று. ஆதீ விடங்கர், குக்குட நடனம், ஸ்வாமி கண்ணாயிர நாதேஸ்வரர், தேவி கைலாய நாயகி, பிரமதீர்த்தம். புரட்டாசி பௌர்ணமியில் இந்திரன் பூஜை. திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. பிரம்மோற்சவம் சித்திரைமாதம்.

**கானப்பேர் :—**காளையார் கோயில், காளிபுரம், என வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, சிவகங்கை சமஸ்தானத்தின் நிர்வாகத்திற்குள்ளாயது. தென் இந்தியா ரெயில் நாட்டரசன் கோட்டை ஸ்டேஷனுக்கு 6-மயிலிலுள்ளது சுவாமி காளை வடிவில் சுந்தரமூர்த்திக்குத் தோன்றி "நம்முடைய வாசஸ்தலம் கானப்பேர்" என்று சொல்லி திருச்சூழியிலிருந்து, அவரை இங்கு வரச்செய்து அவருக்கு காளையுரு காட்டி தரிசனம்கொடுத்த ஸ்தலம். சாபத்தினல் காட்டானையாகச் சபிக்கப்பட்ட ஐராவதம் பூசித்து முன்னுருபெற்ற க்ஷேத்ரம். ஸ்வாமி-காளையீஸ்வரர், காளையப்பர் சுந்தரேஸ்வரர், சோமேஸ்வரர், தேவி - சுவர்ணவல்லி, மீனாட்சி, சௌந்தரநாயகி; யானைமடு, புட்பவலதீர்த்தம், பொன் பிம்பம் அரசனை தீர்த்தம். திருஞானசம்பந்தர் சுந்தரர் பாடல் பெற்றது. பழய கோயில், பல கல்வெட்டுகள் உள. கௌண்டில்ய ரிஷி பூசித்த ஸ்தலம். கோயில் மருதபாண்டியன் கட்டியதென்பர். மிகவும் பெரிய கோபுரமுடையது. கோபுரத்தைக் கட்டியவர்கள் சின்ன மருது பெரிய மருது எனும் சகோதரர்களாம். தெப்பல் உற்சவம் விசேஷம்.

**கானப்பேட்டை :—**திருமெய்யம் தாலுகா, புதுக்கோட்டை சமஸ்தானம், சென்னை ராஜதானி, சிவாலயம்.

**கானரா பிரிவு :—**பம்பாய் ராஜதானி; இங்கு அடியிற் கண்ட சிவாலயங்கள் உண்டு. 1. அக்நாஷி காமேஷ்வர் மஹா

தேவ் கோயில் 2. பாய்லூர மார்க்கண்டேஷ்வர் கோயில் பழமையானது 3. பானவாசி மதுகேஷ்வர் கோயில், சங்கராசாரியாரால் கட்டப்பட்டதென்பர்; சாளுக்கிய சில்பம். மதுகைடபர்களைக் கொன்ற மஹாவிஷ்ணுவால் கட்டப்பட்டதென்பது ஸ்தலபுராணம். இங்கு 12-கல்வெட்டுகள் உள, இரண்டாம் நூற்றூண்டுமுதல் 17-ஆம் நூற்றூண்டு வரையில் 4. பந்கல் சோணேஷ்வர் கோயில்- இங்கு தமிழ் கல்வெட்டுகள் இரண்டு உள. 5. பக்தால் சாங்தேஷ்வர் கோயில், சம்புலிங் கேஸ்வரர் கோயில், மூர்கோபிநாத் கோயில் ராமலிங்வீரபத்ரர் கோயில், 6. பில்கி, இதற்கு ஸ்வேதபுரம் என்று பழய பெயர்; விரூபாட்சர் கோயில், 7. தாரேஷ்வர் கோயில், இங்குள்ள லிங்கம் ராவணன் கோகர்ணத்தில் வைத்த லிங்கத்தின் பாகம் என்பர்; கருப்புக் கல்லாலாயது. இங்கு ஐந்து தீர்த்தங்கள் உள, 8. கங்காவலி காமேஷ்வர், லிங்கம் விஸ்வகர்மாவால் ஸ்தாபிக்கப்பட்டதாம்.

**காருட்டு முள்ளூர்** :—சென்னை ராஜதானி, ஓமாம்புலியூருக்கு 3-மயில்; பதஞ்சலி பூசித்த ஸ்தலம், ஸ்வாமி பதஞ்சலி நாதேஸ்வரர், தேவி கோல்வளைக்கையம்மை, அல்லது கானர் குழலி, தீர்த்தம் சிவபுஷ்கரணி; சுந்தரர் பாடல் பெற்றது.

**காருடு காத்தான்** :—சென்னை ராஜதானி, செட்டிநாடு, சிவாலயம், மீனுட்சி சுந்தரேஸ்வரர், நகரத்தாரால் கட்டப்பட்டது, காரைக்குடிக்கு 6-மயில்.

**கானூர்** :—(திருக்கானூர்) சென்னை ராஜதானி பூதலூர் ஸ்டேஷனுக்கு 7-மயில் வடக்கு, பரமசிவம் உமாதேவியார் தவஞ்செய்கையில் அக்னி மயமாய்த் தோன்றிய ஸ்தலம். ஊர் பாழடைந்து போயிற்று, கோயில்மாத்திர மிருக்கிறது. சுமார் 100-வருடங்களுக்கு முன் கோயில் கண்டெடுக்கப்பட்டது. மணல் மூடியபடியால் கோயில் பூமிமட்டத்திற்கு கீழ் இருக்கிறது. ஸ்வாமி செம்மேனியப்பர், தேவி சிவயோக நாயகியார்; வேத தீர்த்தம்; திருஞானசம்பந்தர் அப்பர் பாடல் பெற்றது.

**காஜிபேட்டை** :—நிஜாம் ராஜ்யம், சிவாலயம், பூகம்பத்தினல் சிதைவுற்றது.

**காஸ்மீரம்** :—வட இந்தியா. காஸ்மீர் ராஜ்யத்தி லுள்ளது. மார்த்தாண்டேஸ்வரர் கோயில், ஸ்வாமி - விஜய ஈஸ்வரர். 84 தூண்கள் உடையது.

**கிக்கா** :—இதற்கு மற்றொரு பெயர் மருகலு, மேற்கு இந்தியாவில் மேற்கு மலைத்தொடர் அருகிலுள்ளது சிவாலயம், ஸ்வாமி பெயர் சந்திரசேகரர், கோயிலுக்கு ரிஷ்ய சிருங்கேஸ்வரர் கோயில் என்று பெயர் உண்டு. ஸ்வாமிக்கு மற்றொரு நாமம் ரிஷ்யசிருங்கேஸ்வரர், லிங்கத்தின் இடது பாகம் ரிஷ்யசிருங்கரின் மனைவி சாந்தா தேவியின் சிலை யிருக்கிறது. லிங்கத்திற்கு இரண்டு சிருங்கங்கள் (கொம்பு கள்) உளது. ரிஷ்யசிருங்கர் இங்கு லிங்கத்தில் ஐக்கியமான தாக ஐதிகம். கோயிலைச் சுற்றி பல காத தூரம் கருப்பே வராது என்பது ஐதிகம்.

**கிருபாசாகரம்** :—சென்னை ராஜதானி பனங்காட்டூருக்கு அருகிலுள்ளது. சிவாலயம், ஸ்வாமி கிருபாநாயகர், தேவி கிருபாநாயகி, புலஸ்தியர் பூசித்தது.

**கிருஷ்ணு** :—சென்னை ராஜதானி, மேற்படி ஜில்லா ரெயில் ஸ்டேஷன், சிவாலயம்.

**கிருஷ்ணுபுரம்** :—சென்னை ராஜதானி கடப்பை ஜில்லா, கடப்பைக்கு 5 மயில் வடக்கு சிவாலயம். ரெயில்வே ஸ்டேஷன் ; உத்தரபிநாகினி தீர்த்தம்.

**கிக்கேரி** :—கிருஷ்ணராஜ்பெட் தாலூகா, மைசூர் ராஜ் யம், சிவாலயம். ஸ்வாமி பிரம்மேஸ்வரர் ; கோயில் 1171-ஆம் வருஷம் கட்டப்பட்டது, சளுக்கிய சில்பம்.

**கிடங்கில்** :—திண்டிவனம் தாலூகா, தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, பக்தபராதீஸ்வரர் கோயில் ; கல்வெட்டுகளில், திருவிறையான் கோயில் மஹாதேவர், திருக்கௌளீஸ்வரமுடைய மஹாதேவர், திருக்கவுரீஸ்வர முடைய நாயினர், என்றும் ஸ்வாமி பெயர் இருக்கிறது.

**கிடங்கரை** :—காஞ்சீபுரம் தாலூகா, சென்னை ராஜதானி இரு புளிய மரங்களினிடையில் ஒரு பெரிய சிவலிங்கம் இருக்கிறது. லிங்கத்தின் எதிரில் சிவனுடைய சிலையும் ரிஷபமும் உண்டு. முற்காலத்திய சிவாலயம் கிலமாய் விட்டதாம்.

**கிர்னர்** :—வட இந்தியா, குஜராத்திலிருக்கிறது. **சோம நாதர் கோயில்**; தற்காலம் 130 அடி சதுரம்தானிருக்கிறது. இது வட இந்தியாவிலிருந்த பழய கோயில்களில் மிகவும் பிரதானமா யிருந்தது; மிகவும் செல்வமுடையதா யிருந்தது. மகம்மத் கஜனியால் இடித்துக் கொள்ளையடிக்கப்பட்டது; தற்காலம் கோயில் 1168-ம் வருஷம் குமாரபாலர் என்பவரால் புதுப்பிக்கப்பட்டது.

**கிரமத்தூர்** :—மதுரை ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம்.

**கிருதேஸ்வரம்** :—வட இந்தியா சுயம்புலிங்கம், ஸ்வாமி-பஸ்மகாய ஈஸ்வரர்.

**கிருஷ்ணராஜநகர்** :—எடத்துறை என்பது பழய பெயர். மைசூர் ராஜ்யம். மைசூரிலிருந்து 20 மைல் சிவாலயம். ஸ்வாமி அர்க்கேஸ்வரர்; காவிரிக் கரையிலுள்ளது. இங்கு பல ஸ்நான கட்டங்கள் உள.

**கில்லபாடு** :—சென்னை ராஜதானி நெல்லூர் ஜில்லா, சிவாலயம் பாழா இருக்கிறது.

**கி ன ச ரி**:—பாலக்காடு பிரிவு, சென்னை ராஜதானி, சிவாலயம்.

**கீரகிராமா** :—இதற்கு பெய்ஜ்நாத் என்று மற்றொரு பெயர்; வட இந்தியா ஹிமயமலைச் சாரலில் உள்ளது. காங்கிராவுக்கு 25 மயில் கிழக்கு. சிவாலயம்; மன்யுகா, ஆஹூகா என்னும் இரண்டு சகோதரர்களால் 1204-வருடம் கட்டப்பட்டது. ஸ்வாமி சிவ வைத்தியநாதர், கர்ப்பக்கிரஹம் 8-அடி சதுரம்; மண்டபம் 20-அடி சதுரம், மதிற்சுவர் 120 × 60-அடி; கோயிலுக்கு எதிரிலுள்ள நந்தியின் பக்கத்தில் ஜமதக்னியின் ஆலய மிருக்கிறது. இக்கோயில் மிகவும் பழமையானது என்று பெர்கூசன் கூறுகிறார். இக்கோயிலில் நந்தி மண்டபமும் கணேசருடைய சிலையு மிருக்கிறது.

**கீரனூர்** :—(கிளியனூர்) சென்னை ராஜதானி புதுக்கோட்டை சமஸ்தானம். இது ஆதியில் ஜைனர் கோயிலா யிருந்தது. 1786-ஆம் சனசாரி சந்திரர் என்பவரால் புதுப்பிக்கப்பட்டது. சம்ஸ்கிருதத்தில் சுகபுரி என்று பெயர். (சுகம்=கிளி) சிவாலயம். பல கல்வெட்டுகளுடையது.

**கீரானூர்** :—சென்னை ராஜதானி, மதுரை ஜில்லா, சிவாலயம், சோழ கட்டிடம்; ஸ்வாமி வாகீஸ்வரர், பல கலவெட்டுகள் உள.

**கீரிமலை** :—இலங்கையில் யாழ்ப்பாணத்திலுள்ளது. இங்கு முற்காலத்திலிருந்த பழய சிவாலயம் பறங்கியர்களால் இடிக்கப்பட்டது.

**கீலாடி** : ஷிமோகா ஜில்லா மைசூர் ராஜ்யம் சிவாலயம்; இரட்டைக் கோயில், ராமேஸ்வரர் வீரபத்திரர் ஆலயங்கள்.

**கீழ்நாசக்குடி** :—சென்னை ராஜதானி, பிரெஞ்சு இலாகாவிலுள்ளது. ஆதியப்பர் கோயில், கல்வெட்டுகளில் திரு ஆதீசுரமுடையார் என்று ஸ்வாமி திருநாமமிருக்கிறது.

**கீழ்க்கரை** :—ராமநாதபுரம் ஜில்லா, சென்னை ராஜதானி பழய சிவாலயம்; வரகுண பாண்டியனால் கட்டப்பட்டதாம்.

**கீழக்குறிச்சி** :—புதுக்கோட்டை சமஸ்தானம், சென்னை ராஜதானி, புதுக்கோட்டைக்கு 14 மயில் சிவாலயம். ஸ்வாமி மஹிஷேஸ்வரர்.

**கீழ்வேளூர்** :—(திரு) தற்காலம் கேவளூர் என்று அழைக்கப்படுகிறது; கீவளூர் என்றும் அழைக்கப்படுகிறது. சென்னை ராஜதானி, நாகப்பட்டினம் தாலூகா, சிக்கலுக்கடுத்த ஸ்டேஷன். அகஸ்தியர் பூசித்த க்ஷேத்திரம், சுப்பிரமணியர் சூரபத்மனைக் கொன்ற பாபம் தீரப் பூசித்த ஸ்தலம். ஸ்வாமியின் பக்கத்தில் பாலசுப்பிரமணியர் தவக்கோலத்துடன் இருக்கிறார். நடராஜர் இங்கு 8 கைகளுடன் இருக்கிறார்; வலது கால் நர்த்தனம் செய்வதுபோல் காணப்படுகிறது. இங்கு குபேரனுக்கும் இந்திரனுக்கும் கோயில்களுண்டு. இவ்வூருக்கு தட்கிணபதிரகாரணயம் என்றும் பெயர் உண்டு. சிவலிங்கம் இலந்தைமரத்தடியில் இருக்கிறது. கோயில் மதில்கள் வெள்ளைக் கற்களால் ஆனவை; சூரியன் இந்திரன் இவர்களுடைய அழகிய சிலைகள் இங்கே இருக்கின்றன. கோயில்ஸ்டேஷனுக்கு $\frac{3}{4}$-மயில், ஸ்வாமி அட்சய லிங்கேஸ்வரர், தேவி வனமுலைநாயகியம்மை, அஞ்சுவட்டத்தம்மை; சந்நிதி கட்டு மலையின்மீதுள்ளது. சிவஞான தீர்த்தம்; ஸ்தல விருட்சம் இலந்தை. இங்குள்ள நடராஜமூர்த்தி அகஸ்தியருக்கு வலது பாத தர்சினம் அளித்துளர். கோயிலின் கோபுரம் முற்றிலும்

கருங்கல்லால் ஆனது. திருஞானசம்பந்தர் அப்பர் பாடல் பெற்றது. கர்பக்கிரகம் சோழக் கட்டிடம்; பிராகாரங்கள் துல்ஜாஜி மஹாராஜாவால் கட்டப்பட்டவை.

**கீழப்பழுவூர்**:—உடையார்பாளையம் தாலூகா திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, அரியலூருக்குத் தெற்கிலுள்ளது. திருவையாருக்கு 11-மயில் வடகிழக்கு; இதற்கு ஆலந்துறை என்று மற்றொரு பெயர்; சிறுபழூவூர் என்றும் பெயர். சிவாலயம், ஸ்வாமி வடமூலேஸ்வரர், தேவி அருந்தவநாயகி; பழு = ஆல்; கொள்ளிட தீர்த்தம், பிரம தீர்த்தம். அஷ்ட வீரட்டானங்களில் ஒன்று; யானையை உரித்துப் போர்த்த ஸ்தலம். பிரம்மோற்சவம் பங்குனி மாசம்; திருஞான சம்பந்தர் பாடல்பெற்றது. இங்கு பரசுராமர் பூசித்து மாத்ருஹத்தி நீங்கினர் என்பது ஐதிகம். இதனருகில் **மேலைப் பழுவூரில்** ஒரு சிவாலயமுண்டு; பல்லவ கட்டிடம். இவ்வூருக்கு கெடும் கழுவூர் என்றும் பெயர் உளது; ஸ்வாமி சுந்தரேஸ்வரர், தேவி மீனாட்சி.

**கீழூர்**:—திருக்கோயிலூர் தாலூகா, தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, வீரட்டானேஸ்வரர் கோயில்; ஸ்வாமி பெயர் திருவீரட்டானமுடையார் என்றும், திருக்குகனீஸ்வரமுடையார் என்றும் கல்வெட்டுகளி லிருக்கிறது. ஊர் பெயர் திருக்கோவனூர் என்றிருக்கிறது. பிரஹந்நாயகி-பெரிய நாய்ச்சியார். பழய கோயில் 1907-ம் வருடம் முற்றிலும் புதுப்பிக்கப்பட்டது.

**கீழக்கடம்பூர்**:—இதற்கு கடம்பையிளங் கோயில் என்றும் பெயர். சீர்காழிக்கு 10-மயில் சிவாலயம், வைப்பு ஸ்தலம்.

**கீழூர்**:—தென் இந்தியா மலையாள தேசம். சிவாலயம் ஸ்வாமி பாதுகாத்தஈசர், பார்வதி தேவி.

**குக்கனூர்**:—மத்திய இந்தியா, நிஜாம் ராஜ்யம், இட்டார்சியிலிருந்து 4-மயில் வடக்கு; சிவாலயம்; ஸ்வாமி கள்ளேஸ்வரர். பெரிய கோயில் 82 × 75 கஜம் விஸ்தீரணம்; இதன் கிழக்கு கோபுரம் 16-ஆம் நூற்றூண்டில் கட்டப்பட்டதாக பெர்கூசன் நினைக்கிறூர். இதற்குப் பின்புறம் 9 சிறு கோயில்கள் உள, **நவலிங்கர்**கோயில்; அவைகளில் 9 லிங்கங்கள் இருக்கின்றன. இச் சிறு கோயில்கள் 9-ஆம் நூற்றூண்டில் கட்டப்பட்டிருக்கலாம் என்று பெர்கூசன்

எண்ணுகிறார். பெரும்பாலும் சாளுக்கிய சில்பம். கோயில்கள் சிவப்பு மணற் கல்லாலாயவை.

குகையூர் :—சென்னை ராஜதானி, கள்ளக்குறிச்சி தாலுகா, சிவாலயம். வெள்ளாற்றங் கரையிலுள்ளது. ஸ்வாமி சுவர்ணபுரீஸ்வரர்; அம்மன் கோயில் அழகிய சில்பமுடையது. கற்களின் அடிப்பாகம் மூங்கிலைப்போல் செதுக்கப்பட்டிருக்கிறது. இங்கு பல கல்வெட்டுகள் உள.

குங்கல்குண்டா :—நரசராவ்பெட் தாலுகா, குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி போகேஸ்வரர்.

குட்டிபுரம் :—சென்னை ராஜதானி, மலையாள தேசம் பொன்மாரி சிவாலயம்.

குட்லிகி :—பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி, சித்தேஸ்வர் கோயில்; இது தற்காலம் லிங்காயத்தார் வசத்திலிருக்கிறது.

குடவாயில் :—(திரு) கொரடாச்சேரி ஸ்டேஷனுக்கு 8-மயில் வடக்கு, சென்னை ராஜதானி, கருடன் பூசித்தது; அமுதம் கொண்டுவந்து தானும் தன் தாயும் சாபம் நீங்கப் பெற்ற ஸ்தலம். திருணபிந்து முனிவர் பூசிக்க ஸ்வாமி திருக்குளத்திலிருந்து வெளிப்பட்டு அவரது குஷ்ட வியாதியைத் தீர்த்தருளிய க்ஷேத்ரம். ஆகவே திருக்குடவாயில் எனப் பெயர் பெற்றது. ஸ்வாமி சோணேஸ்வரர், தேவி பெரியநாயகியம்மை; அமிர்த தீர்த்தம்; திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

குடிமங்கலம் :—உடுமல்பெட் தாலுகா, கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, பழய சிவாலயம் பாழாயிருக்கிறது. 1538-ம் வருஷத்திய கல்வெட்டுள்ளது.

குடிமல்லம் :—~~குடியாத்தம் தாலுக்கா, கோயமுத்தூர் ஜில்லா~~, சென்னை ராஜதானி; ரேணுகுண்டா ஸ்டேஷனுக்கு 6-மயில் வடகிழக்கு; சிவாலயம், ஸ்வாமி பரசுராமேஸ்வரர் இங்குள்ள சிவலிங்கம் மிகவும் பழமையானது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டியது என்பர்; 5-அடி உயரம், லிங்கத்தின் முன்பக்கம் பரமசிவத்தின் உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது; இரண்டு கரங்கள்தா னிருக்கின்றன; வலது கரத்தில் ஒரு ஆட்டை தலைகீழாகப் பிடித்துக்கொண்டிருப்

பதுபோலிருக்கிறது; இடது கரத்தில் ஒரு கரகம்; பின்னிய கேசத்தை உடையது; எக்ஞோபவிதம் கிடையாது. கோபிநாத் ராயர் அவர்கள் இதன் காலம் கி. மு. முதல் நூற்றூண்டு என்று நினைக்கிறார். கோயில் விக்ரமசோழனல் கட்டப்பட்டதாம். துப்ரெயில் துரை லிங்கம் 2000 வருடங்களுக்கு முற்பட்டது என்று எண்ணுகிறார்.

குடிமியாமலை:—சென்னை ராஜதானி, புதுக்கோட்டைக்கு 12-மயில்; இதற்கு சிகாநல்லூர் என்றும் திருமலைக் குன்றம் என்றும் பெயர். சிவாலயம் மிகவும் பழமையானது; பல்லவ சில்பம்; குகைக்கோயில் மஹேந்திரவர்மனல் ஏழாம் நூற்றூண்டில் குடையப்பட்டது. இங்குள்ள ஏழு நிலைக் கோபுரம் ஒரு பாண்டிய அரசன் கட்டியது. ஸ்வாமி சிகைநாதர், தேவி அகிலாண்டேஸ்வரி. அம்மன் கோயிலுக் கெதிரில் ஆறு மூலை வடிவுள்ள ஒரு கல்லின்மீது பழய காலத்தில் புதுக்கோட்டை அரசர்களுக்கு பட்டாபிஷேகம் ஆவது வழக்கமாம். கோயிலுக்குத் தெற்கே அர்த்த சித்திரமாக கணேச விக்ரஹம் உளது; வலம்புரி விநயகர். இதற்கும் கொயிலுக்கும் இடையில் பல்லவ கிரந்த எழுத்தில் சங்கீதக் கல்வெட்டு ஒன்றுளது. இது ஏழு அல்லது எட்டாம் நூற்றூண்டில் வெட்டப்பட்டதென்பர். இங்கு பின்புறத்திலும் ஒரு மலைக்கோயில் உண்டு, இதற்கு மேலைக் கோயில் என்று பெயர்; இதில் சிவலிங்கமிருக்கிறது. கர்ப்பக் கிரஹமும், அர்த்த மண்டபமும் மலையில் செதுக்கப்பட்டிருக்கிறது. இக்கோயில் மூர்த்தி முன்பு சிகாநாதர் என்றே வழங்கப்பட்டிருக்கவேண்டும் என்று எண்ணுகின்றனர். இங்குள்ள துவாரபாலர்கள், அர்த்தமண்டபத்தில், ஒருவரை ஒருவர் பார்த்தவண்ண மிருக்கின்றனர். இவர்களுக்கு இரண்டு கைகளே உண்டு. மஹேந்திரவர்மன் கோயில்களில் உள்ள உருவங்களை ஒத்திருக்கின்றன. தூண்கள் திருச்சிராப்பள்ளி மலையடிவாரத்திலுள்ள குகைக் கோயில் தூண்களை ஒத்திருக்கின்றன. இங்குள்ள மலைப் பாறையில் 63 நாயன்மார்களுடைய உருவங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. கோயில் 23 அடி 8 அங்குலம் × 12 அடி 2 அங்குலம்; லிங்கம் வட்ட வடிவ முடையது.

குடிமூல ராமேஸ்வரம்:—சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி பெயர், கிருதகிருத்திய ராமேஸ்வரர்.

குடியாத்தம் :—வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்; 300 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது. ஸ்வாமி பாலசார்தூலேஸ்வரர்.

குடிவாடா :—கிருஷ்ணு ஜில்லா, மேற்படி தாலூகா, சென்னை ராஜதானி, பீமேஸ்வரர் கோயில்.

குண்டூர் :—சென்னை ராஜதானி, ரெயில்வே ஸ்டேஷன்; அகஸ்திய ஈஸ்வரர் கோயில்.

குண்டுபல்லெ :—கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி, குகைக்கோயில், வட்டவடிவமுடையது. 18 அடி வட்டக் குறுக்களவு, 14 அடி 9 அங்குல உயரம். இது ஆதியில் புத்த ஆலயமாயிருந்தது, அதன் தாதுகர்ப்பம் (தாகோபா) சிவலிங்கமாக மாற்றப்பட்டதென டாக்டர் பர்ஜஸ் கூறுகிறார்.

குண்ணக்குடி :—சென்னை ராஜதானி, இராமநாதபுரம் ஜில்லா, திருப்பத்தூருக்கு 7 மயில், மதுரைக்கு 45 மயில் (இது பிரபல சுப்பிரமணிய ஸ்தலம்) இங்குள்ள மலையின் அடிவாரத்தில் 3 பெரிய குகைக் கோயில்கள் உள. இவைகளில் பெரிய லிங்கங்கள் இருக்கின்றன. இவைகளில் பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், கலித்தாண்டவமூர்த்தி உருவங்களும் இவைகளை செதுக்குவித்த அரசன் அரசியின் உருவங்களும் இருக்கின்றன. இங்கு பல கல்வெட்டுகள் உள. இங்குள்ள லிங்கங்களுக்கெல்லாம் சோமசூத்திரம் கிடையாது. நந்திராஜன் என்பவன் தன் தகப்பனுக்கு சக்கிலி ஸ்திரீயின் மூலமாகப் பிறந்த பிள்ளைக்குத் தன் ராஜ்யத்தை ஒப்புவித்தபோது, சோமசூத்திரமில்லாத லிங்கப் பிரதிஷ்டை செய்யும்படியாக அவனைக் கேட்டுக் கொண்டதாகவும், அதன்படி அவன் 18 கோயில்களில் ஒரே மாதிரியாக 18 லிங்கங்கள் பிரதிஷ்டை செய்ததாகவும் ஐதிகம்.

குணுகூடி :—சென்னை ராஜதானி, சோமேஸ்வரர் கோயில்.

குத்தங்குடி :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா குற்றாலம் ஸ்டேஷனிலிருந்து 5 மயில், தொழுந்தூருக்கு அருகிலுள்ளது. ஸ்வாமி கோடீஸ்வரர், தேவி பெரியநாயகி ; தேவார வைப்புஸ்தலம்.

**குப்தேஸ்வரர் கோயில்:**—விசாகப்பட்டணம் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். நடுகுன்றின் உச்சியி லுள்ளது. ஸ்வாமி குப்தேஸ்வரர் (மறைந்திருக்கும் ஈஸ்வரர் என்று பொருள்படும்) 1650 வருஷம் இங்குள்ள லிங்கம் ஜெயபூர் அரசனுகிய வீரவிக்ரம தேவரால் கண்டு பிடிக்கப் பட்டது. சிவராத்திரி விசேஷம்.

**கும்பகோணம்:**—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜ தானி, பிரபல சிவஸ்தலம். தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன். இங்கு பல சிவாலயங்கள் உள. (1) **கும்பேஸ் வரர்** கோயில், ஸ்வாமி கும்பேஸ்வரர், தேவி மங்களாம் பிகை. ஏமபுஷ்கரிணி, காவிரி நதி, மஹாமக தீர்த்தம்; திருஞான சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. மஹாமக தீர்த்தம் 20 ஏக்ரா விஸ்தீர்ணமுடையது. இதைச் சுற்றி 16 மண்டபங்கள் உள. அச்சுத நாயக்கர் மந்திரி கோவிந்த தீட்சிதரால் இவை கட்டப்பட்டன. பரமசிவத்தின் கட்டளை யால் 12 வருஷங்களுக்கு ஒருமுறை கங்கை இக்குளத்தில் வருவதாக ஐதிகம். அச்சமயம் ஸ்நானம் மிகவும் புனித மானது; லட்சக் கணக்கான ஜனங்கள் வருகின்றனர். இக்குளத்தின் வடகரையிலுள்ள மண்டபத்தில் துலாபுருஷ தானம் செதுக்கப்பட்டிருக்கிறது. அம்மன் ஸ்வாமி சந்நிதி இரண்டும் கிழக்கு பார்த்தவை. அம்மன் சந்நிதி ஸ்வாமி கோயிலுக்குப் புறம்பாயிருக்கிறது. இங்கு சில மண்டபங் களில் சளுக்கிய சில்ப மமைந்த தூண்கள் உள. இவை கொஞ்சம் பிற்பட்ட காலத்தியதாயிருக்கலாம். கோயில் பெரிய கோபுரம், 128 அடி உயரம், 84 அடி அகலம், கோபுரத்திலிருந்து உள்ளே போகும் மண்டபம் 83 அடி நிகளம், 55 அடி அகலம், வெளிப் பிரகாரமெல்லாம் 1,700 வருஷத்திற்கு மேற்பட்டது. லிங்கமானது ஒரு குடத்தின் உடைந்த துண்டுகளை ஒரு பேழையில் வைக்கப்பட்டிக்கிற தாகச் சொல்லப்படுகிறது. இவ்வூருக்கு குடமூக்கு என்றும் பெயர் உண்டு. பிரளய காலத்தில் சகல ஆன்மாக்களையும் சேமித்து இட்ட குடத்தின் மூக்கு தங்கிய இடமாகலின் இப்பெயர் வந்ததென்பது ஐதிகம். பிரம்மோற்சவம் சித்திரை மாசம். இக்கோயிலிலுள்ள அர்த்தநாரீஸ்வரரும், கங்காளமூர்த்தியும் அழகியவை; ஏமரிஷி தாயின் எலும்பு இவ்விடம் பொற்றாமரையாக மாறியதால் இங்குள்ள தீர்த்தத்திற்கு ஏம புஷ்கரிணி என்று பெயர். கோயில்

கோவிந்த தீட்சதரால் முற்றிலும் புதுப்பிக்கப்பட்டது. இதைக் கூறும் ஒரு கல் வெட்டு தவிர, இங்கு வேறு கல் வெட்டுகளில்லை. (2) மல்லிகார்ஜுனர் கோயில் பிரம் மோற்சவம் சித்திரை மாசம். (3) அகஸ்தீஸ்வரர் கோயில் ஸ்வாமி அகஸ்தீஸ்வரர், தேவி பார்வதி, மஹாமக குளத் திற்குக் கிழக்குக் கரையிலுள்ளது. (4) பாணபுரீஸ்வரர் கோயில், ஸ்வாமி சோமசுந்தரர், தேவி குழலாம்பாள். ப்ரமசிவத்தின் பாணம் இங்கு விழுந்ததாக ஐதிகம். (5) கைலாசநாதர் கோயில், ஸ்வாமி கைலாசநாதர், தேவி பார்வதி பட்டுநூல்காரர் வீதியில் உள்ளது. இத்தெருவில் பிரம்மாவுக்கு கோயில் உண்டு. (6) மாதங்கேஸ்வரர் கோயில் ஸ்வாமி மாதங்கேஸ்வரர்-காளத்தீஸ்வரர், தேவி பார்வதி, மேற்கு டபீர் தெருவிலிருக்கிறது. (7) நாகேஸ்வரர் கோயில் இதற்குக் குடந்தைக் கீழ்க்கோட்டம் என்றும் மடந்தையார் கோயில் என்றும் பெயர்; ஸ்வாமி நாகேஸ்வரர், மடந்தை பாகர்; தேவி பெரியநாயகியம்மை, சூரிய தீர்த்தம், சூரிய பூஜை சித்திரை மாசம் 11, 12, 13 தேதிகளில்; இங்கு சூரியனுக்குப் பிரத்தியேகமாக ஒரு சந்நிதியுண்டு. விச்வ கர்மாவினல் ஒளியிழந்த சூரியன் ஸ்வாமியைப் பூசித்து ஒளி பெற்ற ஸ்தலம். இங்குள்ள சபாபதிமூர்த்திக்கு ஆட வல்லான் எனும் பெயர் உளது, பெரிய விக்கிரகம். அர்த்தநா ரீஸ்வரர் சிலை மிகவும் அழகியது. கர்ப்பக்கிரஹத்திற்கு வெளியில் பல்லவ சில்பங்கள் பல இருக்கின்றன. கோயிலின் வடபுரத்திலுள்ள மண்டபத்தில் பெரிய யானை குதிரை முதலிய உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை தஞ்சாவூர் மராட்டிய அரசர்கள் காலத்தில் கட்டப் பட்டவையாம். இங்குள்ள பிரளய கால ருத்திரர் சந்நிதியை சாதாரண ஜனங்கள் எமன் கோயில் என்று அழைக்கின்றனர். இக்கோயிலில் உச்சிஷ்ட கணபதி விக்ரஹம் உண்டு. இங்கு 1053-ம் வருஷத்திய கல் வெட்டு உண்டு. அப்பர் பாடல் பெற்றது. (8) காசிவிஸ்வநாதர் கோயில், இதற்குக் குடந்தைக் காரோணம் என்று மற்றொரு பெயர். ஸ்ரீ ராமர், பரமசிவத்தைத் தொழுது, ராவண சங்காரத்திற் காக, ருத்ராம்சம் பெற்றதாக ஐதிகம்; கோயில் மஹாமக குளத்திற்கு வடக்கிலுள்ளது. உமாதேவி சந்திரன் மாந்தாதா சத்தியகீர்த்தி தேவகன்மா பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி காசி விஸ்வநாதர், சோமநாதர்; தேவி காசி

விசாலாட்சி தேனார்மொழி யம்மை, சந்திர புஷ்கரணி மஹாமக தீர்த்தம். காரோணம் என்பதற்கு மஹா சங்கார காலத்தில் சிவபெருமான் ஆன்மாக்களைத் தம்முள் ஐக்கிய மாக்கிக்கொண்ட ஸ்தலம் என்று பொருள்படும், பரமசிவம் கங்கை முதலிய நவ நதிகளையும் அழைத்து மஹாமக குளத்துல் மூழ்கச் செய்ததாக ஐதிகம். இந்த நதிகளின் சிலைகள் கோயிலில் இருக்கின்றன. திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. மஹாமக காலத்தில் தான் இக்கோயிலில் 10-நாள் பிரம்மோற்சவம். (9) **சோமேஸ்வரர் கோயில்** இது ஏழைச் சோமநாதர் கோயில் என்று தற்காலம் வழங்கப்படுகிறது. ஸ்வாமி சோமேஸ்வரர். தேவி தேனார்மொழியம்மை, பார்வதி, சந்திரன், பிரகஸ்பதி பூசித்த க்ஷேத்திரம், பொற்றாமரைக்குளம், சாரங்கபாணி கோயிலுக்கடுத்தது. இச் சாரங்கபாணி கோயில் ஆதியில் சிவாலயமாக இருந்ததெனச் சிலர் கூறுகின்றனர். (10) அபிமுகேஸ்வரர் கோயில் (11) கௌதமேஸ்வரர் கோயில். கும்பகோணத்தில் பல சத்திரங்கள் உள. அவற்றுள் முக்கியமானவை ரெயில் ஸ்டேஷன் அருகில் உள்ளன; மஹாமகக் குளக்கரையில் இரண்டு, காவிரி ஸ்நானக் கட்டக்கரையில் ஒன்று. இங்கு முசாபர் பங்களாவும் உண்டு.

**குயிலாலுவம்** :—இமயமலைக்கருகிலுள்ள சிவஸ்தலம்.

**குரக்குக்கா** :—(திரு) தென்னிந்தியா தலை நகருக்கு 1-மயில் வடக்கிலுள்ளது. ஹநுமார் பூசித்த க்ஷேத்திரம்; ஸ்வாமி கொந்தளேஸ்வரர், தேவி கொந்தள நாயகி, அநும தீர்த்தம், சுரதா தீர்த்தம்; திருநாவுக்கரசு சுவாமி பாடல் பெற்லது.

**குரங்குத்தளி** :—(திரு) தேவார வைப்புஸ்தலம், சென்னை ராஜதானி ஈரோட்டிலிருந்து கோயமுத்தூருக்குச் செல்லும் வழியில் கூனிபாளையம் ஸ்டேஷனுக்குத் தெற்கே, நஞ்சராஜன் குளத்தருகிலுள்ளது. குரங்கு + தளி குரங்குத்தளி. சுக்கிரீவன் பிரதிஷ்டை செய்த லிங்கம் என்பது ஐதிகம்; ஸ்வாமி சுக்கிரீபெச்சுரர், பல கல்வெட்டுகளுடைய கோயில், இவ்வூருக்குப் பெரியபாளயம் என்றும் பெயர். கோயில் அழகிய சிற்ப வேலை யமைந்தது. தேவியின் விக்ரஹம் சில வருடங்கு முன் களவாடப்பட்டது. இங்கு

ஓர் நில அறையினின்றும் சில வருடங்களுக்கு முன் நடராஜமூர்த்தி முதலிய விக்ரஹங்கள் கண்டெடுக்கப் பட்டன.

குரங்கணின்முட்டம் :—(திரு) சென்னை ராஜதானி, செங்கல்பட்டு ஜில்லா, காஞ்சீபுரத்திற்கு 6-மயில் தெற்கி லுள்ளது. வாலி பூசித்த க்ஷேத்ரம். ஸ்வாமி வாலீஸ்வரர் இறையார்வளையம்மை; வாலிதீர்த்தம், நளகங்கை. குரங்கு (வாலி) + அணில் + முட்டம் (காக்கை) இவை பூசித்த ஸ்தலமாதலால் இப்பெயர் பெற்றது. கோயில் மிகவும் பழமையானது. பல்லவ கட்டடம். சுமார் ஏழாம் நூற்றாண் டில் கட்டப்பட்டிருக்கலாம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

குரங்காடுதுறை :—(திரு) (வடக்கு) வடகுரங்காடுதுறை என்று பெயர். தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, ஐயம்பேட்டை ஸ்டேஷனுக்கு 4-மயில் வடமேற்கிலுள்ளது. வாலி பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி குலைவணங்கீஸ்வரர், அழகு சடைமுடிநாதர், தேவி குவலயநாயகி, அழகு சடை முடியம்மை. காவிரி தீர்த்தம். இங்கிருந்த செங்கல் கோயிலை கண்டராதித்யர் மனைவியாகிய செம்பொன் மாதேவியார் கற்றளி (கருங்கல்லாலாகிய கோயில்) ஆக மாற்றினார்கள். கண்டராதித்யர் காலம் 10-ஆம் நூற்றாண்டின் மத்தியாகும்; பிரம்மோற்சவம் தை மாதம்.

குரங்காடுதுறை :—(தெற்கு) தென் குரங்காடுதுறை என்று பெயர். இதை ஆடுதுறை என்றும் கூறுவர்; தென் இந்தியா ரெயில்வே ஸ்டேஷன் சென்னை ராஜதானி, சுக்ரீவன், அனுமார் மிருகண்டு ரிஷி பூசித்த க்ஷேத்திர மாம். ஸ்வாமி ஆபத்சகாயேஸ்வரர், தேவி பவளக்கொடி யம்மை; காவிரி தீர்த்தம், சகாய தீர்த்தம்; பிரம்மோற்சவம் தை மாதம், திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசு பாடல் பெற்றது.

குருகாவூர் :—(திரு) திருக்கடாவூர் என்றும் திருக்குருகாவூர் வெள்ளடை என்றும் வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி தஞ்சாவூர் ஜில்லா, சீர்காழிக்கு 4-மயில் கிழக்கு. சுந்தரருக் கும் அவரது சிஷ்யர்களுக்கும் சிவபெருமான் கட்டுச் சோறும் தண்ணீரும் வழங்கிய ஸ்தலம். ஸ்வாமி வெள்ளடை.

நாதர், தேவி காவியங்கண்ணியம்மை. திருஞானசம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது. தீர்த்தம் கூபதீர்த்தம்.

**குருகோடு**:—பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி ஹிந்தூளி சங்கமேஷ்வரர் கோயில்; சளுக்கிய கட்டடம்.

**குருசந்திரா**:—வட இந்தியா, சிவாலயம் சுயம்புலிங்கம், ஸ்வாமி சங்கர்மஹாதேவ்.

**குருதாஸ்பூர்** பிரிவு.—வட இந்தியா, பஞ்சாப் மாகாணம்; இங்கு இரண்டு சிவாலயங்கள் உள. (1) **மூகேஷ்வரர் ஆலயம்** குகைக்கோயில் (2) **காலனூர்** சிவாலயம் கிரான்நதிக் கரையிலுள்ளது. சிவராத்திரி விசேஷம்.

**குருவட்டி**:—சென்னை ராஜதானி, பல்லாரி ஜில்லா, ஹர்ப்பனஹல்லி தாலூகா, சவுடதாம்பூருக்கு 3-மயில்; சிவாலயம் துங்கபத்ரை கரையிலுள்ளது. ஸ்வாமி **மல்லிகார்ஜுனர்**; இக்கோயில் கர்பக்கிரஹத்திற்கெதிரில் லங்கையில் பௌத்த ஆலயங்களி லிருப்பதுபோல் சந்திரக் கற்கள் (Moonstones) இருக்கின்றன. மண்டபம் 19-அடி சதுரம், மேலே இடிந்திருக்கிறது. சிகரத்தின் ஸ்தூபி புதுப்பிக்கப் பட்டிருக்கிறது. சளுக்கிய சில்பம். இங்கு வெண்கலத்தாலாகிய ரிஷபவாகன மூர்த்தி உளது.

**குருஜாங்கலம்**:—வட இந்தியா, சுயம்பு லிங்கம். ஸ்வாமி சண்டேசர்.

**குருஜாலா**:—சென்னை ராஜதானி, பல்லாரி ஜில்லா, துங்கபத்ரை கரையிலுள்ளது. 108 சிவாலயங்களில் இது ஒன்றாகும்.

**குமாரவயலூர்**:—சென்னைராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா, சிவாலயம், ஸ்வாமி அக்னீஸ்வரர், தேவி பூர்வஸ்திதி நாயகி.

**குந்தாபுரம்**:—மேற்கு இந்தியா, உடுப்பிக்கு 23-மயில் சிவாலயம், ஸ்வாமி உமாகாந்தர், தேவி உமாதேவி.

**குருவாயூர்**:—தென் இந்தியா, மலையாள நாடு, சிவாலயம், ஸ்வாமி வடக்குநாதர், உமாதேவி; சித்திரைப் பூரம் விசேஷ உற்சவம்.

**குத்தி**:—சென்னை ராஜதானி, பல்லாரி ஜில்லா ரெயில் ஸ்டேஷன் சிவாலயம்.

குயிலாலந்துறை :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, மாயவரத்திற்கு 1-மயில் சிவாலயம் ; ஸ்வாமி ஆலந்துறை யப்பர், தேவி குயிலாண்டநாயகி ; சூரிய தீர்த்தம் சூரியன் பூசித்தது. வைப்புஸ்தலம்.

குருக்ஷேத்ரம் :—வட இந்தியா, டில்லி யருகிலுள்ளது, தானேஷ்வர் ஸ்டேஷனி லிறங்கவேண்டும். தானேஷ்வர் கோயில், ஸ்வாமி தானேஷ்வர்மஹாராஜ், க்ஷேத்திரமும் தீர்த்தமும் மிகவும் புனிதமானவை. இங்கு பல தர்மசாலைக ளுண்டு.

குரோசா :—பம்பாய் ராஜதானி, கல்யாண் நகரத்திற்கு அருகிலுள்ளது. சிவாலயம் ; மேலைச் சளுக்கியர்களால் குகையில் வெட்டப்பட்டது.

குலசேகரப்பட்டினம் :—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, சிவாலயம், ஸ்வாமி காஞ்சி விஜயகண்டேஸ்வரர், தேவி அறம்வளர்த்த நாயகி, ஸ்தலவிருட்சம் மா. மார்க்கண்டேயர் பூசித்த ஸ்தலம்.

குலம்பாந்தல் :—செய்யூர் தாலூகா, வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் கங்கைகொண்ட சோழேஸ்வரமுடையார் என்றிருக்கிறது.

குலமங்கலம் :—திருமெய்யம் தாலூகா, புதுக்கோட்டை சமஸ்தானம், சிவாலயம் குகைக்கோயில்.

குலவைப்பட்டி :—புதுக்கோட்டை சமஸ்தானம் சென்னை ராஜதானி, புதுக்கோட்டைக்கு 10-மயில சிவாலயம், ஸ்வாமி அடவீஸ்வரர்.

குவலயபுரி சமஸ்தானம் (குவாலியர்) இங்கு அடியிற் கண்ட சிவாலயங்கள் உள :—குப்தேஸ்வர் மஹாதேவ் கோயில், மிகவும் கிலமாயிருக்கிறது. 2. குவலயபுரி பட்டணம் ரெயில் ஸ்டேஷன், சிவாலயம் ஸ்வாமி காடேஸ்வர மஹாதேவ், தேவி பார்வதி. 3. அகார்பெய்ஜ்நாத் மஹாதேவ் கோயில். 4. போன்ராசா பன்வர்நாத் மஹாதேவ் ஆலயம். 5. பிப்லராவன் சிவாலயம். 6. சோனகச், மஹாதேவர் ஆலயம். 7. சுந்தாசி சிவாலயம். 8. பாரோகேரா சார்புஜ் மஹாதேவர் கோயில் 9. ஜவாட் மஹாதேவர் ஆலயம். 10. தாகூராய் பழய மஹா

தேவர் கோயில் கிலமாயிருக்கிறது. 11. அம்ஜீரா சிவாலயம் குகைக் கோயில், இங்கு தேவிக்கும் சந்நிதியுண்டு. அம்மன் பெயர் அம்பிகை.

குளத்தூர் :—சென்னை ராஜதானி, செங்கல்பட்டு ஜில்லா வில்லிவாக்கத்திற்கு 1-மயில் சிவாலயம், ஸ்வாமி சோம நாதேஸ்வரர், தேவி அமிர்தவல்லி, சோம தீர்த்தம்.

குளத்தூர் :—புதுக்கோட்டை சமஸ்தானம் புதுக்கோட்டைக்கு 13-மயில், சென்னை ராஜதானி சிவாலயம். நாமணு என்பவரால் கட்டப்பட்டதென்பர். கோயில் புதியது.

குளத்தூர் :—சென்னை ராஜதானி, செங்கல்பட்டு ஜில்லா சிங்கப்பெருமாள் கோயிலுக்கு 1½-மயில் தூரம். சிவாலயம் முற்றிலும் பாழாய்ப்போய், பெரிய சிவலிங்கம் மாத்திரம் இருக்கிறது; இங்குள்ள பெருமாள் கோயிலுக் கெதிரில் உள்ளது. ஸ்வாமி பெயர் துளசி ஈஸ்வரர் என்பர் இங்குள்ள வைஷ்ணவர்கள்.

குளத்தூர் :—சென்னை ராஜதானி, வட ஆற்காடு ஜில்லா சிவாலயம்; ஸ்வாமி திருவகலீஸ்வரமுடைய மகாதேவர். இரண்டாம் பிராகாரக் கோயில் 1365 ஆம் ஆண்டில் கட்டப்பட்டதாம்.

குவளை :—திருக்குவளை, தியாகராஜ ஸ்வாமி கோயில்; தர்மபுர ஆதீன மேற்பார்வை.

குளித்தலை :—சென்னை ராஜதானி, கடம்பவனேஸ்வரர் கோயில், பிரம்மோற்சவம் மாசி மாதம்; அகண்ட காவிரி ஸ்நானம் விசேஷம். ரெயில் ஸ்டேஷன்.

குற்றாலம் :—இதற்குத் திருத்துருத்தி என்று தேவாரப் பெயர். தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, ரெயில் ஸ்டேஷன். மாயவரத்திற்கு 5½-மயில். சுந்தரர் சங்கிலி நாய்ச்சியார் பொருட்டு செய்த சத்தியம் தவறியமையால் பெற்ற தேகப்பிணி இந்த ஸ்தலத்தில் நீங்கியது. ஸ்வாமி உக்தவேதீஸ்வரர், தேவி மிருதுமுகிளகுசாம்பிகை. சுந்தர தீர்த்தம், காவிரி தீர்த்தம். குறுஆல விருட்சம். மூவர் பாடல் பெற்றது. மேற்குப்பார்த்த சந்நிதி. கோபுரம் 5-நிலையுடையது.

குற்றாலம் :—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, தென்காசி ரெயில் ஸ்டேஷனுக்கு 3½-மயில்மேற்கு.

அகஸ்தியர் விஷ்ணுமூர்த்தியை சிவலிங்கமாக்கி பூசித்த க்ஷேத்ரம். புஷ்பகந்தா, கவுன்சனர் பூசித்த ஸ்தலம். ஆலயம் முறகாலத்தில் விஷ்ணு ஆலயமாயிருந்து பிறகு சிவாலயமாக மாற்றப்பட்டது. சிவலிங்கத்தின் பின் பெருமாள் உருவம் இருக்கிறதென்பர். ஸ்வாமி குறுபலா ஈஸ்வரர், தேவி குழல்வாய்மொழியம்மை, சித்ராநதி தீர்த்தம்; குறும்பலா விருட்சம். பஞ்ச சபைகளில் இங்கு சித்திர சபை. ஸ்வாமிக்கு துளசி பூசை யுண்டு. கோயில் சங்கைப் போல் கோணகாரமானது. கோயில் வடக்கு பார்த்தது. இப்பக்கம் ஒரு பெரிய கோபுரம் ஆரம்பிக்கப்பட்டு முடிக் கப்படாது விடப்பட்டிருக்கிறது. இது விஜயநகரத்தரசர் காலத்தியதா யிருக்கலாம். தென்காசியி லிருப்பதுபோல் அம்மன் சந்நிதியில் 10 அழகிய சிலை உருவங்கள் உண்டு. அம்மன் சந்நிதியும் ஸ்வாமி சந்நிதியும் அக்கம்பக்கமா யிருக்கின்றன. திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. இங்கு முசாபர் பங்களா உண்டு, சத்திரங்களுமுண்டு.

குறநாடு :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம் ஸ்வாமி புனுகீஸ்வரர்; தேவி சாந்த நாயகி பிரம்மோற்சவம் வைகாசி மாதம்.

குறும்பாலூர் :—சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா, சிவாலயம் ஸ்ரீரங்கத்திற்கு 28-மயில்; வைப்பு ஸ்தலம்.

குழிப்பிறை :—திருமெய்யம் தாலுக்கா, புதுக்கோட்டை சமஸ்தானம், சிவாலயம் புதியது.

குறுக்கை:—(திரு) சென்னை ராஜதானி, பொன்னூருக்கு 4-மயில் வடமேற்கு. அஷ்ட வீரட்டானங்களிளொன்று. மன்மதனை எரித்த க்ஷேத்ரம், மார்க்கண்டேயர் பூசித்த தலம். ஸ்வாமி-வீரட்டேஸ்வரர். தேவி-ஞானம்பிகை, சூல தீர்த்தம். அப்பர் பாடல் பெற்றது, தர்மபுர ஆதீனம் மேற்பார்வை.

குறுங்குடி :—தென் இந்தியா, திருநெல்வேலி ஜில்லா சிவாலயம் ஸ்வாமி - சத்திநாதேஸ்வரர், தேவி - பாங்காய நாயகி. பரசுராமர் பூசித்த க்ஷேத்ரமாம்.

குன்றக்குடி :—சென்னை ராஜதானி, மதுரை ஜில்லா. சிவாலயம்; பிரம்மோற்சவம் பங்குனிமீ. ஸ்வாமி-அகஸ் தீஸ்வரர், தேவி உமாதேவி.

**குன்றத்தூர்** :—குண்ணத்தூர் என்று வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, செங்கல்பட்டு ஜில்லா, ஸ்ரீபெரும்பூதூர் தாலுக்கா; சேக்கிழார் பிறந்த ஸ்தலம்; பல்லாவரத்திற்கு 2¾-மயில், இங்கு பழய சிவாலயமொன்று கிலமாயிருக்கிறது, கஜப்பிருஷ்ட ஆகிருதி. மற்றொரு சிவாலயமும் கிலமாயிருக்கிறது. ஸ்வாமி பெயர் கருதாலீஸ்வரர், அல்லது திருவாலீஸ்வரர், அம்மன் ஞானம்பிகை.

**குஜராதிபேடா**:—சென்னை ராஜதானி, விசாகபட்டணம் ஜில்லா, சிவாலயம், ஸ்வாமி லட்சேஸ்வரர்.

**குஜராத் பிரிவு** :—பம்பாய் ராஜதானி, இங்கு அடியிற்கண்ட சிவாலயங்கள் உள. 1. **பாஜ்நாத்** பாவநாத் மஹாதேவர் ஆலயம். இங்குள்ள தீர்த்தம் குஷ்டரோகத்தை நிவாரணம செய்வதாக ஐதிகம். 2. **இடார்**; கோக்நாத் மஹாதேவர் ஆலயம். குகைக்கோயில் இடிந்திருக்கிறது. 3. **அஹமடாபாட்** இங்கு அசர்வா எனும் சிற்றூரில் நீலகண்ட மஹாதேவர் கோயில். 4. **வஸ்தரால்** மஹாதேவர் சிவாலயம் **ஷாவாடி** சிவாலயம். 5. **பீம்நாத்** பீம்நாத் மஹாதேவர் கோயில், பீமன் பிரதிஷ்டை செய்த லிங்கமாம். 6. இங்கு **ரேவாகாந்தா** சமஸ்தானத்தில், **ஜேயோர்** என்னுமிடத்தில் **கும்பேஷ்வர்** மஹாதேவ் கோயில். 7. **சானேட்** இங்கு **கபிலேஷ்வர், காசி விஸ்வநாதர், ஆதித்யேஷ்வர், கமலேஷ்வர், நர்மதேஷ்வர், மார்க்கண்டேஷ்வர்** எனும் 6 சிவாலயங்களுண்டு. 8. **குஜராத்** சிவாலயம்; ஜெயசிம்மரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கம். இக்கோயிலில் சஹஸ்ர லிங்கமுமுண்டு.

**கூகலூர்** :—சத்யமங்கலம் தாலுக்கா, கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, பழய சிவாலயம், சேர அரசர்களால் கட்டப்பட்டதென்பர்.

**கூடலி** :—ஷிமோகா ஜில்லா, மைசூர் ராஜ்யம், துங்கபத்ரையும் மற்றொரு நதியும் சங்கமமாகுமிடம். **சங்கமேஷ்வர்** கோயில் கூடலி = சங்கமம் (கன்னட பாஷையில்) இங்கு **ராமேஷ்வர்** கோயில், **பிரம்மேஸ்வர்** கோயில் என்று இரண்டு சிவாலயங்கள் உண்டு.

**கூடலையாற்றூர்** :—(திரு) சென்னை ராஜதானி, சிதம்பரத்திற்கு 16-மயில் மேற்கு; திருமணிமுத்தா நதியும் வெள்ளாறும் கூடும் இடம். வன்மீக ரிஷி பூசித்த ஸ்தலம். விருத்தாசலத்திலிருந்து 14-மயில் சிவாலயம். ஸ்வாமி

நெறிகாட்டு நாயகர், தேவி புரிகுழலாம்பிகை; சங்கு தீர்த்தம், மணிமுத்தாநதி. சுந்தரருக்கு வழிகாட்டியபடியால் ஸ்வாமிக்கு நெறிகாட்டு நாயகர் எனப் பெயர் வந்தது; சுந்தரர் பாடல் பெற்றது.

**கூந்தலூர் :**—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சிவாலயம், ஸ்வாமி சண்பகாரண்யேஸ்வரர், தேவி ஆனந்த வல்லி, குமர தீர்த்தம் சீதா தீர்த்தம்; கும்பகோணம் ஸ்டேஷனிலிருந்து 9-மயில், பேணு பெருந்துறைக்கு அருகிலுள்ளது; குமரக்கடவுள், சீதாதேவி, ரோமரிஷி பூசித்த ஸ்தலம். இங்கு குமரக்கடவுளுக்கு தனியாக ஆலய முளது. ரோமரிஷி சிலை கோபுரத்தின் உட்பக்கம் உளது. தேவார வைப்புஸ்தலம்.

**கூரம் :**—காஞ்சீபுரம் தாலுக்கா, செங்கல்பட்டு ஜில்லா சென்னை ராஜதானி, கூரம் சாசனத்தில் இங்கு வித்யா விநீத பல்லவ பரமேஸ்வரர் கோயில் எனும் சிவாலயம் இருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. வித்யாவிநீதன் எனும் பல்லவ அரசனல் கட்டப்பட்ட கோயிலாம். இது பிற்காலம் விஷ்ணு ஆலயமாக மாற்றப்பட்டது. பழய ஆலயம் சுமார் 1300 வருடங்களுக்கு முற்பட்டது; கஜப் பிருஷ்ட ஆகிரதி யுடையது.

**கூலுபிரிவு :**—வட இந்தியா, பஞ்சாப் மாகாணம், இங்கு பல சிவாலயங்கள் உண்டு: 1. **பிஜ்லிமகாதேவர்** கோயில் மலையிலுள்ளது; $36 \times 24$ அடி விஸ்தீரணம். அடிப்படை கருங்கல், மேல் கட்டிடம் தேவதாரு மரத்தாலாயது. துவஜஸ்தம்பம் 60 அடி உயரம். 2. **ஹாட்** தாழ்வரையில் கோயில் ஸ்வாமி பாஷேஸ்வர், தற்காலம் பூஜையில்லை $8\frac{1}{2} \times 7$ அடி உள் அளவு, பருமனை சுவர்களால் சூழப் பட்டதால் வெளி அளவு 13 அடி சதுரம். 3. **நக்கர்** கௌரி திலகர் கோயில். 4. **தாஷால்** கௌரிஷங்கர் கோயில். 5. **துண்டி,** திரிலோகநாத் கோயில்; இது பூர்வம் புத்த ஆலயமாயிருந்து பிறகு சிவாலயமாக மாற்றப்பட்டதென்பர். 6. **காலாத்** கபிலமுனி கோயில் சிவாலயம்.

**கூவம் :**—**திருவிற் கோலம்** என்பது இதன் தேவாரப் பெயர். சென்னை ராஜதானி, கடம்பத்தூர் ஸ்டேஷனுக்கு $5\frac{1}{2}$-மயில் தென்மேற்கு, திரிபுர தகனஞ்செய்ய சிவபெருமான் இங்கிருந்து புறப்பட்ட க்ஷேத்ரம். லிங்கத்தின் வர்ண

மானது மழைவரும் காலத்திலும் யுத்தம் நேரிடும் காலத்திலும் மாறுகிறதென்பது ஐதிகம். காரியும் இந்திரனும் பூசித்த ஸ்தலம், ஸ்வாமி திரிபுராந்தகேஸ்வர், தேவி திரிபுராந்தகி யம்மை, ஆவிற்கோல தீர்த்தம், கூபாக்னி தீர்த்தம்; ஸ்வாமிக்கு 12 திருநாமங்களுண்டு. ஸ்வாமி தீண்டாத் திருமேனி, அருகிலுள்ள மணல் திடரிலிருந்து ஊற்றுஜலம் தினம் ஸ்வாமியின் அபிஷேகத்திற்குக் கொண்டுவரப்படுகிறது. பிரம்மோற்சவம் சித்திரை மாதம்.

**கூனிமேடு** :—தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம் பாழாயிருக்கிறது. இங்கு அச்சுதேவர் (1533) காலத்து கல்வெட்டுளது.

**கூவனூர்** :—தென் இந்தியா, சிவாலயம்; அகத்தீஸ்வரர் தேவி கர்ப்பூரவல்லி, சந்திரபுஷ்கரணி, அகஸ்திய தீர்த்தம்.

**கேங்கனூர்** :—கெங்கநல்லூர் என்றும் வழங்கப்படுகிறது. வேலூர் தாலுக்கா, வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, கெங்கேஸ்வரர் கோயில்.

**கெம்பாலபாளையம்** :—தென் இந்தியா, சிவாலயம் அகஸ்தீஸ்வரர் ஆலயம். ஸ்வாமி அகஸ்தீஸ்வரர், தேவி மரகதவல்லி, தீர்த்தம் பத்மசரஸ்.

**கேட்** :—பம்பாய் ராஜதானி, பூனாவுக்கு 25-மயில்; சித்தேஸ்வரர் கோயில்; 1725 வருஷம் திரியம்பக் எனும் வாணியனால் கட்டப்பட்டது.

**கேதாரம்** :—(திரு) வட இந்தியா, இமயமலையிலுள்ள க்ஷேத்ரம்; பிருங்கிமஹரிஷி பூசித்த ஸ்தலம், தன்னை வணங்காத பிருங்கி மஹரிஷியின்பொருட்டு பார்வதிதேவி பரமசிவத்தைப் பூசித்து வாமபாகப் பெற்ற திவ்ய ஸ்தலம். ஸ்வாமி கேதாரீஸ்வரர் அல்லது கேதார்நாத், தேவி கேதார கௌரி அல்லது தாட்சாயினி, புஷ்கரதீர்த்தம், மந்தாகினி தீர்த்தம், நாரதகுண்டா. இங்கு 6 மாதம் தேவர்களும், 6 மாதம் மனிதர்களும் பூசை செய்வர் என்பது ஐதிகம். கோயில் ஒன்றன்பின் ஒன்றாக 3 அறைகள் அடங்கியது. லிங்கம் கடைசி அறையில் இருக்கிறது. இருட்டில் நெய் விளக்கு ஒன்று எரிந்துகொண்டிருக்கிறது. லிங்கம் வட்டத்தின் குறுக்களவு 6-அடி. பக்தர்கள் லிங்கத்தின்மீது வெண்ணெயைத் தடவி ஆலிங்கனம் செய்துகொள்வது

வழக்கம். இந்த லிங்கம் ஆதி சங்கராசாரியரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதென்பர். வடக்கிலுள்ள 12 ஜோதி லிங்கங்களில் ஒன்றும். கோயில் சமுத்திர மட்டத்திற்கு 11950 அடி உயரம். யாத்திரை செய்வதற்கு மே ஜூன் மாதங்கள்தான் தக்க காலம். மற்ற காலம் கடும் பனியால் இங்கு போவது சாத்தியமல்ல. கோயிலுக்குள் போவதற்கு 3 பைசா கட்டணம். சாதுக்களுக்கு இக் கட்டணம் இல்லை. தெற்கில் கேதார கௌரி விரதம் அற்பிசி மாதம் அனுஷ்டிப்பது இந்த ஸ்தல மஹாத்மியத்தைப் பற்றிதான். பார்வதி பரமசிவத்தை மணந்த ஸ்தலம் என்றும் கூறுவர். இதற்குப் போகும் வழியில் **1. மமதம் 2. துங்கம் 3. ருத்ரம் 4. கோமேஸ்வரம்**, என்று நான்கு சிவ க்ஷேத்திரங்கள் உள. திருஞானசம்பந்தர் சுந்தரமூர்த்தி பாடல் பெற்றது.

**கேதீச்சரம்** :—இது இலங்கைத்தீவில் உள்ளது. மாதோட்டம் என்று தற்காலம் அழைக்கப்படுகின்றது. சிவாலயம் மிகவும் கிலமாயிருக்கிறது. ஸ்வாமி கேதீஸ்வரர் தேவி கௌரியம்மை; கௌரி தீர்த்தம். மாலியவான் பூசித்த ஸ்தலம், திருஞானசம்பந்தர் சுந்தரர் பாடல் பெற்றது.

**கேரளபுரம்** :—திருவாங்கூர் ராஜ்யத்திலுள்ளது, சிவாலயம், ரவிவர்மா இரண்டு முறை ஜீர்ணோத்தாரணம் செய்தார்.

**கைச்சினம்** :—(திரு) சென்னை ராஜதானி, திருநெல்வேலிக்கு 2-மயில் கிழக்கு; இந்திரன் பூசித்த க்ஷேத்ரம், இந்திரன் மணலினால் லிங்கம்செய்து பூசித்த பிறகு அதை எடுத்து அப்புறம் வைக்கும்போது அவன் கைக்குறி (கைச்சின்னம்) அதில் பட்டது. ஸ்வாமி-கைச்சின நாதேஸ்வரர் தேவி வெள்வளையம்மை, இந்திர தீர்த்தம், லிங்கத்தின் மீது விரல்கள் பட்ட குறி இன்றைக்கும் காணலாம். திரணபிந்து பூசித்த ஸ்தலம், திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

**கைட்டா** :—தும்கூர் ஜில்லா, மைசூர் ராஜ்யம், சிவாலயம், 1150 ஆம் வருஷம் குலேபொச்சி என்பவரால் கட்டப்பட்டதாகக் கல்வெட்டினால் தெரிகிறது.

**கைரா பிரிவு** :—பம்பாய் ராஜதானி, இங்கு பாட்வன்ஜ் எனும் ஊரில் சிவாலயம், பூமி மட்டத்திற்கு கீழிருக்கிறது.

**கைலாயம் :—(திரு)** இதற்கு வெள்ளியங்கிரி என்றும் பெயர், இமயமலையிலுள்ளது. ஸ்வாமி கைலாசநாதர் அல்லது பரமசிவம், தேவி பார்வதி அல்லது கிரிஜா ; மஹா சிவதீர்த்தம், இதை **நொடித்தான்மலை** என்று சுந்தரர் பாடியுள்ளார். சரவணப்பொய்கை தீர்த்தம் ; மூவர் பாடல் பெற்றது. கைலாயகிரிக்குப் போகும் மார்க்கத்தில் காளி கங்கையும் சரோஜா எனும் நதியும் கூடுமிடத்தில் ஒரு சிவாலய மிருக்கிறது.

**கொடுங்கோளூர் :—**தென் இந்தியா மலையாள தேசம், அஞ்சைக்களத்திற்கு 3 மயில் சிவாலயம் ; ஸ்வாமி சிதம்பரேசர், தேவி சிவகாமி ; இடங்கழி நாயனார் முத்திபெற்ற ஸ்தலம், தேவார வைப்புஸ்தலம்.

**கொங்கணம் :—**தென் இந்தியா மலையாள தேசம் சிவாலயம் ; ஸ்வாமி கிரீசர், உமாதேவி ; வைப்புஸ்தலம்.

**கைலாயபுரம் :—**திருநெல்வேலி ஜில்லா, சிந்துபூந்துறை சென்னை ராஜதானி, ஸ்வாமி கைலாசநாதர் தேவி சிவகாமி ; தாம்ரபர்ணி தீர்த்தம் ; அகஸ்தியர் பூசித்த ஸ்தலம்.

**கோட்டயம் :—**மலையாளம் சென்னை ராஜதானி, அரிசிபரம்பு சிவாலயம் ; சிறிய கோயில்.

**கோட்டையூர் :—**சென்னை ராஜதானி, செட்டிநாட்டிலுள்ளது காரைக்குடிக் கருகில் சிவாலயம், ஸ்வாமி சுந்தரேஸ்வரர், தேவி மீனாட்சியம்மன்.

**கோட்டையூர் :—**சென்னை ராஜதானி கும்பகோணத்திற்கு 2 மயில் வட மேற்கு ; ஸ்வாமி கோடீஸ்வரர், தேவி பந்தாடுநாயகியம்மை, கோடி தீர்த்தம் ; மார்க்கண்டேயர், பத்திரயோகி, ஆத்திரேயர் பூஜித்த ஸ்தலம், ஸ்வாமி ஆமணக்கு கொட்டைச் செடியின்கீழ் இருந்து தோன்றியமையால் கொட்டையூர் எனப் பெயர் பெற்றது. சோழ மகாராஜாவுக்கு கோடிலிங்கமாகத் தரிசனம் கொடுத்தமையால் கோடீஸ்வரர் என்று ஸ்வாமிக்கு திருநாமமுண்டு. பெரிய லிங்கத்தில் அநேகம் சிறு லிங்கங்கள் இருப்பது போல் காணப்படும். திருவலஞ்சுழியில் காவிரியின் ஜலத்தில் இறங்கிய ஏரண்ட முனிவர் இங்கு வெளிவந்து அனுக்கிரஹம் பெற்றார். ஆகவே இதற்கு ஹேரண்டபுரம் எனும் நாமமுண்டு. இக்கோயிலில் ஏரண்ட முனிவர் பிரதிஷ்டை

செய்த லிங்கம் ஒன்றுண்டு. இந்த ரிஷியின் சிலையுமிருக்கின்றது. அப்பர் பாடல் பெற்றது.

**கோடக்கல்** :—(குடைக்கல் ?) மலபார் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

**கோடகனி** :—சொராப் தாலூகா, ஷிமோகா ஜில்லா, மைசூர் ராஜ்யம், சித்தராமேஸ்வரர் கோயில்.

**கோடகனூர்** :—மைசூர் ராஜ்யம், தேவாங்கரெ தாலூகா சிவாலயம், ஸ்வாமி கள்ளேஸ்வரர்.

**கோடசாத்ரி** :—மைசூர் ராஜ்யம், நரசிம்மராஜபுரம் ரயில் ஸ்டேஷனுக்கு 3 மயில் சிவாலயம் ; ஸ்வாமி சங்கமேஸ்வரர்.

**கோண்டல்** :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா சீர்காழிக்கு 3 மயில் சிவாலயம், ஸ்வாமி தாரகப் பரமேஸ்வரர், தேவி பார்வதி வைப்புஸ்தலம்.

**கொழுமம்** :—சென்னை ராஜதானி, மதுரை ஜில்லா, பழனிக்கு 9 மயில் சிவாலயம் ; ஸ்வாமி சோமேஸ்வரர் தேவி பிரஹதாம்பாள்.

**கோல்லம்** :—தென் இந்திய மலையாளதேசம், சிவாலயம் ; ஸ்வாமி பரமேஸ்வரர், பார்வதி தேவி ; ரயில்ஸ்டேஷன்.

**கோண்டாபுரம்** :—சென்னை ராஜதானி, வட சர்க்கார் தாடிபத்ரிக்கு 17 மயில் சிவாலயம். இதனருகில் குண்டி கோட்டா, பெண்ணேறு எனும் இடங்களில் சிவாலயங்கள் உண்டு.

**கோடிமங்கலம்** :—மதுரை ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

**கொடுங்குன்றம்** :—(திரு) பிரான்மலை என்றும் பெயர் பெற்றது. சென்னை ராஜதானி அம்மைய நாய்க்கனூர் ஸ்டேஷனுக்கு 16 மயில் வடகிழக்கு ; மஹோதரர் எனும் ரிஷி பூசித்த ஸ்தலம் ஸ்வாமி கொடுங்குன்றீஸ்வரர் தேவி குயிலமிர்தநாயகியம்மை, சுந்தர தீர்த்தம், ஸ்வாமி மணவாளக்கோலத்துடன் இருக்கிறார். மலை உச்சியில் ; கார்த்திகை தீபம் விசேஷம். (இங்கு சுப்பிரமணிய சந்நிதி விசேஷம்) திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

**கொடும்பாளூர்** :—இதற்கு தற்காலம் மூவர் கோயில் என்றுப் பெயர் ; சோழ அரசனாகிய பூதி விக்ரமகேசரியும் அவனது இரண்டு மனைவிகளும் சேர்ந்து கட்டியமையால்

மூவர் கோயில் எனப் பெயர்பெற்றதென்பர் 950-970-40 பூர்வ காலத்தில் மூன்று கோயில்களிருந்தனவாம்; தற்காலம் ஒன்றுதானிருக்கிறது. பழயகோயில் பத்தாம் நூற்றுண்டின்முன் கட்டப்பட்டதாம்; அழகிய சில்பமமைந்தது; கிலமாயிருக்கிறது. சிலப்பதிகாரத்தில் இவ்வூர் குறிக்கப்பட்டிருக்கிறது. கர்ப்பக்கிரஹம் 8 அடி 9 அங்குலம் சதுரம்; பிராகாரம் 17 அடி 9 அங்குலம் × 15 அடி விஸ்தீர்ணம் பல்லவ கட்டிடம்; இங்கு 3 வலம்புரி விநயகர்களுண்டு இவ்வூரில் மற்றொரு சிவாலயமுண்டு.

**கோத்தமங்கலம்** :—சென்னை ராஜதானி செட்டிநாடு சிவாலயம் ஸ்வாமி தம்மனைஈஸ்வரர்.

**கொடுமுடி** :—ஈரோடு தாலூகா, கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம், ஸ்வாமி மகுடேஸ்வரர் தேவி சௌந்தரநாயகி, கொங்குதேசத்து 7 சிவாலயங்களுள் இது ஒன்றும்; இங்கிருக்கும் வன்னிமரம் மிகவும் புராதனமானதென்பர், இதற்குப் பூவும் காயும் கிடையாதென்பர்.

**கொடுவாயூர்** :—தென் இந்தியா விஸ்வநாதர் கோயில்.

**கொண்டகம்பேடு** :—சென்னை ராஜதானி, விசாகப்பட்டணம் ஜில்லா, இங்கு 1½ மயில் தூரத்தில் காட்டின் நடுவில் ஒரு பழய சிவாலயம் உண்டு; பூஜை நடக்கிறது. வழிப்போக்கர்களெல்லாம் ஒரு புஷ்பத்தால் சிவலிங்கத்தை அர்ச்சனை செய்து போவது வழக்கமாம்.

**கொண்டல்** :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சிவாலயம், இங்கு விஷ்ணு ஒருபுறம் இருக்கிறூர். ஸ்வாமி தாரக பரமேஸ்வரர், விஷ்ணு வழிபட்டதால் கொண்டல் வண்ணன்குடி எனப் பெயர் பெற்றது. அப்பெயர் நாளடைவில் கொண்டல் எனக் குறுக்கப்பட்டது. சீர்காழிக்கு 3½ மயில் தூரம்.

**கொண்டிவ்டி** :—பம்பாய் ராஜதானி, சால்செட்டுக் கருகில் கோகேஸ்வரர் குகைக்கோயில்.

**கொண்டீச்சரம்** :—(திரு) சென்னை ராஜதானி, நந்நிலத்திற்கு 1½ மயில் மேற்கு, காமதேனு பூசித்த க்ஷேத்ரம். இதற்கு வில்வாரண்ய க்ஷேத்ரம் என்றும் பெயர். ஸ்வாமி பசுபதீஸ்வரர், தேவி சாந்தநாயகி, திருநாவுக்கரசு பாடல் பெற்றது.

கோமரலிங்கம் :—உடுமலைபேட்டை தாலூகா, கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, பழைய சிவாலயம் சோழ கட்டடம்.

கோரமங்கலம் :—மைசூர் ராஜ்யம் புச்சேஸ்வரர் கோயில் 1173ளு கட்டப்பட்டது. சளுக்கிய சில்பம். இதற்கு அருகில் நாகேஸ்வரர் கோயில் என்று ஒரு சிவாலயமுண்டு.

கோரிங்கா :—கோதாவரி ஜில்லா, சென்னைராஜதானி, சிவாலயம், கொரிங்கேஸ்வரஸ்வாமி லிங்கம், ஸ்ரீராமர் பிரதிஷ்டை என்பர்.

கோல்ஹாபூர் பிரிவு :—பம்பாய் ராஜதானி இங்கு பல சிவாலயங்கள் உள (1) ஆக்ரா, ஸ்வாமி ராம்லிங், சிறிய கோயில், அருகில் ஒரு நீர்வீழ்ச்சி யுண்டு. சிவராத்ரி விசேஷம். (2) ஆல்டா ராமலிங்கஸ்வாமி குகைக்கோயில்; இங்கிருக்கும் கணபதி விக்ரஹத்தினின்றும் தண்ணீர் எப்பொழுதும் கசிந்துகொண்டே யிருக்கிறதென்பர். சிறு கோயில் 12 அடி சதுரம், நீலகங்கை தீர்த்தம் (3) பாடோலி சிவாலயம் ஸ்வாமி பத்ரேஷவர் கோயில் 122 அடி சதுரம் (4) கடின்கிளாஜ் காலேஷ்வர் சிவாலயம். 30 × 20 × 20 அடி விஸ்தீர்ணம் (5) ஹேர்லா மஹாதேவர் கோயில் 34 × 21 அடி. (6) ஹுப்ரி சிவாலயம் (7) ஜோதிபாடுன்று, இவ்வூரில் 3 சிவாலயங்கள்; கேதார்லிங் ஆலயம் பழய கோவில் நங்கிசாயா என்பவரால் கட்டப்பட்டது ஆதியில், பிறகு 1730 வருஷம் ராணோஜி ராவ் என்பவரால் புதுப்பிக்கப்பட்டது. கேதாரேஷ்வரர் கோயில் 49 × 22 × 89 அடி விஸ்தீர்ணம் 1808 வருஷம் கட்டப்பட்டது; ராம்லிங் கோயில் 13 × 13 × 40 விஸ்தீர்ணம் 1780இல் கட்டப்பட்டது. (8)கானேரி சித்தேஷ்வர் கோயில் 20 × 20 × 30 விஸ்தீர்ணம். (9) காசர்டே தோபேஷ்வர் கோயில் (10) கிதர்பூர் கோபேஷ்வர் ஆலயம் 103 × 65 × 52 விஸ்தீர்ணம்; கோயிலுக் கெதிரில் சுவர்க்க மண்டபம் என்று ஒரு மண்டபம் இருக்கிறது. (11) கோல்ஹார் பட்டணம் காசிவிஸ்வேச்வர் ஆலயம், மற்றொரு சிவாலயம் மலையின் உச்சியிலுள்ளது; பிராகாரம் பாழா யிருக்கிறது. (12) மல்காபூர், பீம்ஷங்கர் கோயில் 55 × 29 × 18 விஸ்தீர்ணம் விஸ்வேஸ்வர் கோயில் 58 × 29 × 18 விஸ்தீர்ணம். (13) ருக்டி மஹாதேவர் கோயில் 15 × 15 × 11 விஸ்தீர்ணம் (14) ராய்பாக் சோமேஷ்வர், சித்தேஷ்வர் ஆலயங்கள்.

(15) ஷிரோல் காலேஷ்வர் கோயில் 35 × 25 × 28 விஸ்தீர்ணம் (16) ரம்கவி ஷங்கர்லிங் கோயில் சுமார் 110 வருடங்களுக்குமுன் கட்டப்பட்டது; 25½ × 20 × 15 அடி விஸ்தீர்ணம்; இங்கு அருகாமையில் சிறு குன்றில் பர்வ தேஷ்வர் கோயில், மல்லிகார் ஜுனர் கோயில் என்று இரண்டு சிவாலயங்கள் உள. (17) கேத்ராபூர் கொல்ஹாபூர் பட்டணத்திற்கு 30 மயில் கிழக்கு கோப்பெல்லார், கோயில் பெரியது; கோயில் முடிக்கப்படவில்லை. சளுக்கிய கட்டடம் 1213ஷு புதுப்பிக்கப்பட்டது. (18) தேர்டால் இங்கு 4 சிவாலயங்கள் உள. லட்சுமேஸ்வர், சோமேஷ்வர், லட்மீஸ்வர் லட்சுமிலிங்கேஸ்வர்; இவைகள் சுமார் 1000 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டவையாம்.

கோல்லாபுரம்:—சென்னை ராஜதானி, அநந்தபூர் ஜில்லா, சோழ அரசனால் கட்டப்பட்ட சிவாலயம்.

கோல்லகொல்லா:—கும்சூர் தாலுக்கா, கஞ்சம் ஜில்லா, சென்னை ராஜதானி; இங்கு 2 சிவாலயங்கள் உள (1) கங்காதரேஸ்வரர் கோயில் (2) ஜகதேஸ்வர ஸ்வாமி கோயில்.

கொல்லபாளையம்:—நெல்லூர் ஜில்லா, சென்னை ராஜதானி, இங்கு இரண்டு சிவாலயங்கள் உள. மணலில் மூடப்பட்டிருக்கின்றன.

கோலாபாபிரிவு:—பம்பாய் ராஜதானி, இங்கு நான்கு சிவாலயங்கள் உள. (1) அட்சி சோமேஷ்வர் கோயில் (2) செயுல் தூமேஷ்வர் கோயில், (3) ராமேஷ்வர் கோயில், இங்கு மூன்று குண்டங்கள் உள, அக்னி குண்டம், வாயு குண்டம் பர்ஜன்ய குண்டம் (4) கங்கேஷ்வர் கோயில், இது அழகிய சில்பமுடையது.

கொழும்பு:—இலங்கைத்தீவிலுள்ளது. சிவாலயம் புதியது ஸ்வாமி, பொன்னம்பலவனேஸ்வரர், தேவி சிவகாம சுந்தரி கோயில் கொகந்தேபோம் தெருவில் ஹார்பருக் குப் பக்கத்திலுள்ளது. முதலில் செங்கல் கட்டடமாயிருந் தது; தற்காலம் சர். பி. ராமநாதம் அவர்களால 1910 ஆண்டில் கருங்கல்லால் கட்டப்பட்டது.

கொள்ளம்பூதூர்:—(திரு) நந்நிலம் தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, திருக்கரம்பூர் செல்லூர் என வும் வழங்கப்படுகிறது. நீடாமங்கலம் ஸ்டேஷனுக்கு 6 மயில் வடகிழக்கு; கொரடாச்சேரி ஸ்டேஷனிலிருந்து 3

மயில் வடக்கு. திருஞானசம்பந்தர் அடியார்களுடன் கோலில்லா நாவாய்மீதேறி, தாமாக ஓடம்விட்டு ஆற்றைக் கடந்த க்ஷேத்ரம். இந்த ஐதிகம் ஐப்பசி மாதம் அமா வாசையில் நடத்தப்படுகிறது. சாண்டில்யரிஷி பூசித்த ஸ்தலம். ஸ்வாமி வில்வவனநாதர், தேவி சௌந்தராம்கை, வில்வ விருட்சம், வெட்டாறு எனும் முள்ளிநதியின் கீழக் கரையிலுள்ளது. நான்கு யுகங்களிலும் முறையே பிரம வனம், பஞ்சாக்கரபுரம், காண்டீபவனம், வில்வ வனம் எனும் பெயரைப் பெற்றதாம். விநாயகர், வரகுணபாண்டி யன், பிரமன், அகஸ்தியர், ஆதிசேஷன், இடைக்காடர், விஜயன், சிலந்திச்சோழன் முதலியோர் பூசித்த ஸ்தலம். பழய கோயில் முற்றும் பிரிக்கப்பட்டு 1930-37 ஆம் வருடங் களில் புதியதாய்க் கட்டப்பட்டது. ஸ்வாமி கோயில் கோபுரம் 5 நிலைகளுடையது. இவ்வூருக்குப் போக பஸ் வசதி யுண்டு. திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

**கொள்ளிக்காடு** :—(திரு) சென்னை ராஜதானி பொன் னிறை ஸ்டேஷனுக்கு 3½-மயில் மேற்கு சுதீட்சணரிஷியும், அக்னிபகவானும், சனீஸ்வரரும் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி அக்னீஸ்வரர் அல்லது தீவண்ணநாதர், தேவி பஞ்சினும் மெல்லடியம்மை. (இங்குள்ள சனீஸ்வரர் சந்நிதி பிரசித்தி பெற்றது) திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

**கொள்ளேகால்** :—கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

**கொள்ளேகால்** :—மைசூர் ராஜ்யம், சிவசமுத்திரத்திற்கு 6-மயில்; மஹாதேவர் ஆலயம்.

**கொளிஞ்சவாடி** :—தாராபுரம் தாலூகா, கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி சொக்கநாதர், தேவி மீனாட்சியம்மன்.

**கொறுக்கை** :—சென்னை ராஜதானி, மாயவரத்திற்கு 5-மயில் வடமேற்கு, சிவாலயம்; மன்மதனை சிவபெருமான் எரித்த ஸ்தலம் என்று சிலர் கூறுவர்.

**கோனிதேனு** :—நரசராவ்பேட்டை தாலூகா, குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம் ஸ்வாமி சங்கரர்.

**கோக்ராகட்** :—வட இந்தியா சிவாலயம். ஸ்வாமீ மஹாதேவர், கோக்ராநதி தீர்த்தம்.

**கோகர்ணம்:**—வட கன்னட ஜில்லா, பம்பாய் ராஜதானி; பிரபல சிவாலயம். கார்வார் என்னும் ஊருக்கு 30-மயில். இதற்கு பூகைலாசம் என்றும் பெயர். ஸ்வாமி-மஹாபலேஷ்வர், தேவி கோகர்ண நாயகி-பார்வதி. கோடி தீர்த்தம் ராமதீர்த்தம்; இங்கு போவதற்கு மார்ம கோவாவுக்கு ரெயில் மார்க்கமாய்ப் போய், அங்கிருந்து தாத்ரிக்கு ஸ்டீமர் மூலமாய்ப போய், அங்கிருந்து வண்டி மார்க்கமாய்ப் போய்ச் சேரவேண்டும். கோயில் திராவிட சில்பம். சிவலிங்கம் பசுவின் காதுபோல் குழைந்து நீண்டபடியால் கோகர்ணம் எனப் பெயர்பெற்றது. இராவணன் தன் தாயாருக்காக கைலாயத்தில் பார்வதிதேவியார் பூசித்து வந்த ஆத்மலிங்கத்தைக் கொண்டுவரும்பொழுது விநாயகர் சூழ்ச்சியால் அது இங்கு வைக்கப்பட்டதாம். ராவணன் லிங்கத்தைப் பெயர்க்க முயன்றபொழுது முறுக்கப்பட்டதாம். ராவணனது விரல்கள் லிங்கத்தில் வடுவா யிருக்கிறது. ராவணன் தன் முழு பலத்தையும் கொண்டு பெயர்க்க முயன்றும் முடியாமற்போனபடியால் ஸ்வாமிக்கு மஹாபலேஷ்வர் எனப் பெயர் உண்டாயிற்று. லிங்கம் சில அங்குல உயரம். அதன் பெரும்பாகம் பீடத்தி லிருக்கும் ஜலத்தில் மறைந்திருக்கிறது. 25 வருடங்களுக்கு ஒருமுறை அஷ்டபந்தனம் செய்யப்படுகிறது. இக்கோயிலில் ஆதி கோகர்ண லிங்கம் என்று ஒரு லிங்கம் இருக்கிறது. ஸ்ரீராமர் ஆத்மலிங்கத்தை பூசித்ததாக ஐதிகம். இங்கு கோடிதீர்த்தத்தின் மத்தியில் சப்த கோடீஸ்வரர் லிங்கம் என்று ஒன்றுண்டு. ஷாஸ்திரேஸ்வர் லிங்கம் 18 அங்குலம் நிகளம், 2½ அடி சுற்றளவு. இங்கு அருகாமையில் பல சிவாலயங்கள் உள. 1. **அகஸ்தீஸ்வரர்** கோயில் 2. வசிஷ்டேஸ்வரர் கோயில் 3. **சங்கரநாராயணர்** கோயில்; இது பாதி மஹாவிஷ்ணு 4. **விஸ்வாமித்ரேஷ்வர்** கோயில 5. **அமிர்தேஸ்வரர்** கோயில் 6. **காயத்ரி, சாவித்ரி, சரஸ்வதி** லிங்கங்கள் 7. **விதுத்பாசேதலேஷ்வர்** கோயில் 8. **கேஷ்வர்** கோயில் 9. **மொரதேஷ்வர்** கோயில் 10. **தாரேஷ்வர்** கோயில் 11. **குமண்டேஷ்வர்** கோயில் 12 **காலகேஷ்வர்** கோயில் மற்றும் **கும்பகர்ணலிங்கம்,** **விபீஷண** லிங்கம், **நாகேஷர்** லிங்கம் **சனத்குமார லிங்கம்** முதலிய லிங்கங்கள் உள. **திருஞான** சம்பந்தர் திருநாவுக்கரசர் பாடல் பெற்ற ஸ்தலம்.

**கோகர்ணம்.**—கைவல்யமடச் சிவாலயம். இம்மடத்து ஸ்வாமியாரால் சில வருடங்களுக்குமுன் கட்டப்பட்டது. இங்குள்ள சிவலிங்கத்திற்கு **சக்ரவர்த்திலிங்கம்** என்று பெயர் இது ஒரு ஆங்கிலேயரால் சீமைக்குக் கொண்டுபோய் திருப்பி அனுப்பிக்கப்பட்டது.

**கோட்டாறு**—(திரு) திருநள்ளாறு தென் இந்தியா ஸ்டேஷனிலிருந்து 3-மயில் வடமேற்கு. வெள்ளையானை பூசித்த சிவாலயம்; ஸ்வாமி ஐராவதேஸ்வரர், தேவி வண்டார்பூங்குழலி யம்மை; சூரிய தீர்த்தம். கோச்செங்கண்ணச் சோழனல் கட்டப்பட்ட கோயில்.

**கோட்டியூர்:**—சென்னை ராஜதானி, மலையாள நாடு சிவாலயம். பிரம்மோற்சவம் சித்திரைமாதம். பரசுராமர் பூசித்த ஸ்தலம்.

**கோஷ்டியூர்:**—சென்னை ராஜதானி, திருப்புத்தூருக்கு 5 மயில்; இங்கு பிரபலமான விஷ்ணு ஆலயத்திற்குள் சிவாலயம் ஒன்றுளது. ஸ்வாமி சரபலிங்கர் இங்குத் தெப்பக்குளத்தருகில் பைரவனூர் எனுமிடத்தில் ஒரு சிவாலயமுண்டு. ஸ்வாமி மெஞ்ஞானர், தேவி பாகம் பிரியாள்.

**கோட்டூர்;**—(திரு) சென்னை ராஜதானி, மன்னார்குடி ஸ்டேஷனுக்கு 10 மயில் தெற்கு. குச்சரரிஷி பூசித்த க்ஷேத்ரம். ஸ்வாமி கொழுந்தீஸ்வரர், தேவி மதுரவசனாம்பிகை, அமிர்த தீர்த்தம்; திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

**கோட்டைக்குப்பம்:**—சென்னை ராஜதானி, சிவாலயம் ஸ்வாமி புண்யகோடீஸ்வரர். தேவி அன்னபூரணி, புண்ய கோடி தீர்த்தம்.

**கோட்டையம்:**—திருவாங்கூர் ராஜதானி, ஹளிக்குன்றம் சிவன்கோயில்.

**கோட்டையூர்:**—திருமெய்யம் தாலூகா புதுக்கோட்டை சமஸ்தானம் சிவாலயம், பழய கோயில், பாண்டிய காடவர்மன் காலத்திய கல்வெட்டு இங்கு ஒன்றுளது. இதற்குக் கோட்டூர் என்றும் பெயர்.

**கோட கருங்குளம்:**—திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி, நாங்குநெறி தாலூகா, சிவாலயம், ஸ்வாமி ராஜசிம்மேஸ்வரர்.

**கோடகேரி** :—உடுப்பி தாலூகா, சென்னை ராஜதானி தென் கன்னட ஜில்லா, பாரக்பூர் அருகிலுள்ளது. பஞ்ச லிங்கேஸ்வரர் கோயில்.

**கோடப்பகொண்டா** :—குண்டூர் ஜில்லா, சென்னை ராஜ தானி, நரசராவ் பேட்டைக்கு 10 மயில், சிவாலயம் சிறு குன்றத்தில் இருக்கிறது; பூமி மட்டத்திற்கு 600 அடி உயரம், புராதன கோயில், மாசி மாசம் பிரம்மோற்சவம், சிவராத்ரி விசேஷம். ஸ்வாமி திரிகோடீஸ்வரர். மலைமீது ஒரு சத்திரம் உண்டு.

**கோடி** :—திருக்கோடி, குழகர் கோயில், குழவர் கோயில் எனவும் வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, திருத்தரு பூண்டி ஸ்டேஷனிலிருந்து 32 மயில்; சிவாலயம். ஸ்வாமி அமிர்தலிங்கேஸ்வரர் (அமிர்தத்திலிருந்து உத்பவித்தவர்) தேவி மையார் தடங்கண்ணியம்மை, அமிர்த தீர்த்தம; வேதாரண்யத்திற்கு 6 மயில். சுந்தரர் பாடல் பெற்றது. வாயுதேவர் பூசித்த ஸ்தலம்.

**கோடிக்கரை** :—(திரு) வேதாரண்யத்திற்கு 8 மயில், சென்னை ராஜதானி, இதற்கு ஆதி சேது என்றும் பெயர். ஸ்ரீராமர் பூசித்த க்ஷேத்திரம். இங்குள்ள சிவாலயத்து சுப்பிரமணியருக்கு 6 கரங்கள் தானுள; இடது கரம் ஒன்றில் அமிர்த கலசம் வைத்துளார். ஸ்வாமி அமிர்த கடேசர் தேவி மையார்தடங்கண்ணி. வருணன் பூசித்த ஸ்தலம்; சுந்தரமூர்த்தி நாயனர் பாடல் பெற்றது.

**கோடிகா** :—திருக்கோடிக்காவல் என்று வழங்கப்படு கிறது; சென்னை ராஜதானி, திருவிடைமருதூருக்கு $1\frac{3}{4}$ மயில் கிழக்கு, மூன்று கோடி ரிஷிகள் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி திருக்கோடீஸ்வரர் அல்லது கோடிக்கா ஈஸ்வரர், தேவி வடிவாம்பிகையம்மன், காவிரிநதி அகஸ்திய தீர்த்தம், திரு ஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் பாடல்பெற்றது.

**கோடி தீர்த்தம்** :—நெல்லூர் ஜில்லா சென்னை ராஜதானி கோடேஸ்வர ஸ்வாமி கோயில், முக்கிய உற்சவம் மாசி மாதம்; கல்யாண உற்சவம் விசேஷம். சுயம்புலிங்கம்.

**கோடிபல்லி** :—கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி சோமேஸ்வரர்; கோயில் சந்திரன் தாரையைச் சேர்ந்த பாபம் தீரக் கட்டிய கோயில் என்பது ஐதிகம். இங்கு கோடீஸ்வரர் கோயில் என்றும் ஒரு சிவாலயமுண்டு.

**கோடிமங்கலம்** :—மதுரை ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம், பல கல்வெட்டுகளுடையது; இவை மராமத் காலத்தில் தாறுமாறாய் மாற்றி வைக்கப்பட்டிருக்கின்றன.

**கோடீஸ்வரம்** :—இதற்கு ஊர் ஐய்க்காடு என்றும் பெயர். தென் இந்தியா சிவாலயம், ஸ்வாமி கோடீஸ்வரர், தேவி கொடியிடைவல்லி, தாம்ரபர்ணி தீர்த்தம், அகஸ்தியர் ஸ்வாமியை மணலாலாகிய லிங்கத்தால் பூசித்த ஸ்தலம்.

**கோடேஸ்வர்** :—வட இந்தியா அம்போகிக்கு 4 மயில் சிவாலயம், ஸ்வாமி கோடேஸ்வர், தேவி மஹா தேவி, குமரி தீர்த்தம், சிவாலயம் காட்டின் மத்தியிலுள்ளது பில்ஸ் எனும் ஜாதியார் வசிக்குமிடத்தில்.

**கோடேஷ்வர்** :—தென் கன்னட ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம், ஸ்வாமி கோடேஷ்வரர்.

**கோடைக்கானல்** :—சென்னை ராஜதானி, மதுரை ஜில்லா சிவாலயம்.

**கோணக்கரை** :—நீலகிரி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம், ஸ்வாமி மஹாலிங்கேஸ்வரர்.

**கோதாவரி** :—சென்னை ராஜதானி மேற்படி ஜில்லா; ரெயில் ஸ்டேஷன், சிவாலயம்; ஸ்வாமி கௌதமேஸ்வரர்.

**கோபிலாஸ்** :—ஒரிஸ்ஸாவிலுள்ளது; சிவாலயம் மலை உச்சியிலுள்ளது; 2098 அடி சமுத்திர மட்டத்திற்கு உயரம். பங்காள் நாக்பூர் ரெயில் ஸ்டேஷன்; கோபிலால் ரோட்டிலிருந்து 30 மயில்; சிவராத்திரி விசேஷம்.

**கோயம்பேடு** :—செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம், ஸ்வாமி கொறுங்காலீஸ்வரர் அல்லது குசலவபுரீஸ்வரர், தேவி தர்மசம்வர்த்தனி, வடக்கு பார்த்த சந்நிதி, மடக்குபோல் லிங்கம்; பிரம்மோற்சவம் சித்திரை மாசம்.

**கோயமுத்தூர்** :—மேற்படி ஜில்லா, சென்னை ராஜதானி **கோட்டை ஈஸ்வரர்** கோயில், **பேட்டை ஈஸ்வரன்** கோயில் என இங்கு இரண்டு சிவாலயங்கள் உள. இங்கு சத்திரங்கள் உள; முசாபர் பங்களாவும் உண்டு.

**கோயில்பட்டி** :—திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி, தென் இந்தியா ரயில்வே ஸ்டேஷன், சிவாலயம் ஸ்வாமி புவனலிங்கேஸ்வரர், தேவி சண்பகவல்லி;

அகஸ்தியர், வாதாபி வில்வளர்களை அழிந்தஸ்தலமென்பர்; சிவாலயம் பாண்டிய அரசனல் கட்டப்பட்டது. இங்கு மூசாபர் பங்களா உண்டு.

**கோயில்பட்டி** :—மதுரை ஜில்லா, சென்னை ராஜதானி; திருமங்கலத்திற்கு 14 மயில், சிமாலயம் லிங்கம் முக்கிய தினங்களில் தான் கோயிலில் வைக்கப்படுகிறது. கோயில் அழகிய கட்டிடம்.

**கோயிலூர்** :—திருக்கோயிலூர் என்றும் உசாத்தானம் என்றும் வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி முத்துப் பேட்டை ஸ்டேஷனுக்கு 2 மயில்; ஸ்ரீராமர், லட்சுமணர், ஜாம்பவான், சுக்ரீவான், அனுமார் பூஜித்த ஸ்தலம், ஸ்வாமி மந்திரபுரேஸ்வர், தேவி பெரியநாயகியம்மை; நிர்மல தீர்த்தம்; திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

**கோயில் வெண்ணி** :—வெண்ணியூர் என்றும் பெயர் பெற்றது. தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன், சென்னை ராஜதானி. தத்தாத்ரேயர் பூசித்த ஸ்தலம்; சிவாலயம்; லிங்கமானது கொம்புகளைக் கட்டாகக் கட்டியதுபோல் உருவம் உடையது; ஸ்வாமி இட்சுபுரீஸ்வரர், தேவி அழகிய நாயகியம்மை, நந்தியாவார்த்த தீர்த்தம். கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் திருவெண்ணியுடையார் எஸ்றிருக்கிறது, ஊர் பெயர் வெண்ணிநகரம் என்றிருக்கிறது. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசு பாடல்பெற்றது. இங்கு உக்கடை தேவர் சத்திரமுண்டு.

**கோர்கரா** :—வட இந்தியா இமய மலையிலுள்ள சிவ க்ஷேத்ரம்,

**கோரக்பூர்** :—ஐக்கிய மாகாணத்திலுள்ளது. இங்கு சோநாக் எனும் கிராமத்தில் சிறு சிவாலயமுள்ளது. ஸ்வாமி மஹா ருத்திரநாதர்.

**கோலக்கா** :—(திரு) இதற்கு அகரத் திருக்கோலக்கா என்றும் பெயர்; தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். சீர்காழிக்கருகிலுள்ளது. திருஞானசம்பந்தர் பொற்றாளம் பெற்ற ஸ்தலம், தேவி அதற்கு ஓசை கொடுத்ததாக ஐதிகம். ஸ்வாமி சப்தபுரீஸ்வரர், தேவி ஓசைகொடுத்த நாயகி, சூரியதீர்த்தம் ஆராதீர்த்தம்; திருஞானசம்பந்தர் சுந்தரர் பாடல் பெற்றது. அகஸ்தியர் கண்வர் பூசித்த தலம்.

**கோல்கானூர்** :—கிருஷ்ணு ஜில்லா, சென்னை ராஜதானி அகஸ்தீஸ்வரர்கோயில்; 1202 வருஷத்திற்கு முன்பு கட்டப் பட்டதாக ஒரு கல்வெட்டால் அறிகிறேும்.

**கோலம்** :—சென்னை ராஜதானி, திருக்கோலமென வழங்கப்படுகிறது. ஸ்வாமி திருக்கோலீஸ்வரர், தேவி காமாட்சியம்மை ; தீர்த்தம் குசஸ்தல நதி.

**கோலார்** :—மைசூர் ராஜ்யம், கோலார் பிரிவிலுள்ளது. பெங்களூர் சிக்கபள்ளாபூர் ரெயில் ஸ்டேஷன். சிவாலயம். ஸ்வாமி சோமேஸ்வரர் ; பத்தாம் நூற்றுண்டில் ஒரு சோழ அரசனுல் கட்டப்பட்ட கோயில்; இங்கு அருகாமையில் வட மேற்கில் சதஸரிங்க பர்வதத்தருகில் ஒரு சிவாலய முளது. மலையில் அந்தர கங்கை தீர்த்தம் ; அதன் ஜலம் ரிஷபத் தின் வாயிலிருந்து வருகிறது.

**கோலகோண்டா** :—சென்னை ராஜதானி கிருஷ்ணு ஜில்லா சிவாலயம்.

**கோயிலூர்** :—சென்னை ராஜதானி மதுரை ஜில்லா சிவாலயம், ஸ்வாமி ராஜகட்க பரமேஸ்வரர், தேவி சாலிவா டீஸ்வரி. அகஸ்தியர் பூசித்த ஸ்தலம். வைப்புஸ்தலம்.

**கோராராக்** :—மத்திய இந்தியா, ஜகந்நாத்திற்கு 19-மயில் சிவாலயம், ஸ்வாமி சாம்பசிவம், தேவி சாம்பவி.

**கோலாகோகர்நாத்**:—வட இந்தியா, மஹாதேவர் கோயில் கங்கை தீர்த்தம்.

**கோவலூர்** :—(திரு) சென்னை ராஜதானி, தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன். இதற்கு கீழவூர் என்றும் பெயர் உண்டு. ஸ்ரீராமர் மந்திரோபதேசம் பெற்ற ஸ்தலம் அஷ்ட வீரட்டானங்களில் ஒன்று. அந்தகாசூரனைச் சம்மாரம் செய்த க்ஷேத்திரம். மெய்ப்பொருள் நாயனு ருடைய திருப்பதி. சிவாலயம் மேற்கு பார்த்தது. ஸ்வாமி வீரட்டானேஸ்வரர், தேவி சிவாநந்தவல்லி, பெண்ணைநதி தீர்த்தம். கோயில் ஸ்டேஷனுக்கு ½-மயில் தூரம்; இவ்வூர் மேலூர் கீழூர் என்று இரண்டு பிரிவுள்ளது. சிவாலயம் கீழூரிலுள்ளது. திருஞானசம்பந்தர் அப்பர் பாடல் பெற்றது.

**கோவர்த்தன கங்காபுரம்** :—மத்ய இந்தியா நாசிக் ஸ்டேஷன் அருகிலுள்ளது. சிவாலயம். ஸ்வாமி மகாதேவர்;

தர்சினம் செய்தால் சுவர்ணதான பலம் மிடைக்குமென்பது ஐதிகம். இதற்கு ஒரு மயில் தூரத்தில் சோமேஸ்வரர் தேவாலயம் இருக்கிறது; பாபநாச தீர்த்தம்.

**கோவிந்தபுரம்** :—நாசராவ்பெட் தாலூகா, குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி பீமேஸ்வரர் கோயில்.

**கோவிந்தபுரம்** :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா திருவிடைமருதூர்க்கு 1-மயில் சிவாலயம் ஸ்வாமி பாணபுரீசுர், அபிராமியம்மன்.

**கோடவநல்லூர்** :—சென்னை ராஜதானி, திருநெல் வேலிக்கு 5-மயில் சிவாலயம். ஸ்வாமி ரோமேசா இமயாம்பிகை. ரோமரிஷி பூசித்த ஸ்தலம்.

**கோவிந்தஹல்லி** :—கிரு ராஜ்பெட் தாலுக்கா மைசூர் ராஜ்யம், பஞ்சலிங்கேஸ்வரர் கோயில்; 5 பிராகாரங் களில் 5 லிங்கங்கள் இருக்கின்றன. கோயில் 96 × 42 அடி விஸ்தீரணம் 1237-ம் வருடம் கட்டப்பட்டது.

**கோவிலடி** :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா திவ்ய ஞானேஸ்வரர்கோயில் ; கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் திருச்சடைமுடியுடைய மகாதேவர், திருப்புறத்துறை யும் பெருமான், என்று இருக்கிறது. இதனருகில் திருச் சமண பூண்டி கிராமத்தில் சிவாலயமொன்றுண்டு. மிகவும் பழய கோயில்; இதில் பராந்தகன் (906—949) காலத்திய கல்வெட்டுகள் உள.

**கோவிலூர்** :—சென்னை ராஜதானி, செட்டி நாட்டில் காரைக்குடிக் கருகிலுள்ளது சிவாலயம். ஸ்வாமி பரமேஸ் வரர், தேவி பார்வதி. நாட்டுக்கோட்டை செட்டிமார்களால் புதியதாய்க் கட்டப்பட்டது.

**கோவிலூர்** :—சென்னை ராஜதானி திருத்தரு பூண்டி தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா சிவாலயம்.

**கோவூர்** :—சென்னை ராஜதானி, வளவநாடு தாலூகா மலபார் ஜில்லா, கண்ணேஸ்வர ஸ்வாமி கோயில்.

**கோவில்பட்டி** :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சிவாலயம். ஸ்வாமி சோழேஸ்வரர், தேவி குந்தளாம்பாள் ; சோழராஜன் பூசித்தது.

**கோவூர்** :—சோழபுரி என்றும் பெயர் ; ஸ்ரீபெரும்பூதூர் தாலுக்கா, செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி,

சென்னையிலிருந்து 12-மயில்; பரங்கிமலைக்கு அருகி லுள்ளது. தினம் இங்கு பஸ் போகிறது. இதற்கு பழய பெயர் அழகிய சோழநல்லூர்; சிவாலயம். ஸ்வாமி சுந்தரேஸ் வரர், பழய பெயர் திருமேனி ஈஸ்வரர்; தேவி சௌந்த ராம்பிகை. தியாகராஜ ஸ்வாமிகளால் கீர்த்தனம் பாடப் பெற்ற ஸ்தலம். பிரம்மோற்சவம் வைகாசி மாசம். பழய கோயில் சுமார் 200 வருடங்களுக்கு முன் வயித்தியநாத முதலியாரால் முற்றிலும் புதுப்பிக்கப்பட்டது. தற்காலம் கோயில் உட்புறச் சுவர்களிலும் மடப்பள்ளியின் படியி லும் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளினால் பழய கோயில் சுமார் 1000 வருடங்களுக்கு முற்பட்டதென்று அறிகிறோம். மடப்பள்ளி கல்வெட்டு 965 வருடத்தியது. பழய கல்வெட்டு களில் இக்கோயிலுக்கு ராஜராஜேஸ்வரம் எனும் பெயர் இருந்ததாகத் தெரிகிறது. கோ + ஊர் = அரசனது ஊர் என்று அர்த்தம் செய்யவேண்டு மென்பர் சிலர். கர்ப்பக் கிரஹம் கஜப்பிருஷ்ட ஆகிருதி.

**கோழம்பம்** :—(திரு) இதற்கு திருக்கோளம்பூர் என்றும் பெயர். சென்னை ராஜதானி, தென் இந்தியா ரெயில் நரசிங்கன்பேட்டை ஸ்டேஷனுக்கு 2-மயில் தென் கிழக்கு. குயிலாய்ச் சபிக்கப்பட்ட வித்யாதரன் சாபம் நீங்கிய ஸ்தலம் ஸ்வாமி கோகிலேஸ்வரர், தேவி சௌந்தர நாயகி யம்மை. மது தீர்த்தம். திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசு பாடல்பெற்றது. சந்திரன் பூசித்த தலம் என்பது ஐதிகம்.

**கோழபுரம்** :—தென் இந்தியா சிவாலயம் ஸ்வாமி ஸ்வாமி கொபுராந்தேஸ்வரர் தேவி ஆதி சக்தி, மெஞ்ஞான தீர்த்தம்.

**கோழியனூர்** :—தென் ஆற்காடு ஜில்லா, விழுப்புரம் தாலுக்கா, சென்னை ராஜதானி, சிவாலயம் ஸ்வாமி வாலீஸ்வரர், கல்வெட்டுகளில், வாலீசுரர் என்றிருக்கிறது.

**கோளிலி** :—(திரு) திருக்குவளை எனவும் பெயர் உண்டு. கைச்சினத்திற்கு 5-மயில கிழக்கு; திருவாரூருக்கு 12-மயில் தென் கிழக்கு பீமன் பாபம் நீங்கிய ஸ்தலம். பீமனது உருவமும் பகாசுரனது உருவமும் கோயிலில் காணலாம். முசுகுந்தர் தியாகராஜப் பிரதிஷ்டை செய்த சப்த விடங்க ஸ்தலங்களில் ஒன்று. தியாகராஜரது நடனம் வண்டு நடனம், சுந்தரமூர்த்தி நாயனர் இதற்கருகிலுள்ள

குண்டையூரிலிருந்த நெல் மலையை 'நீள நினைந்தடியேன்' என்னும் பதிகம்பாடி பூதகணங்களைக்கொண்டு திருவாரூருக்கு எடுத்துக்கொண்டுபோகச் செய்த ஸ்தலம். ஸ்வாமி கோளிலி நாதேஸ்வரர், தேவி வண்டமர் பூங்குழலியம்மை, பிரம தீர்த்தம்; மூவர் பாடல்பெற்றது.

**கோனேரிராஜபுரம்** :—இதற்கு திருநல்லம் என்றும் பெயர். தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்; கண்டராதித்யர் மனைவியாகிய செம்பொன்மா தேவியாரால், பழய செங்கற்கோயிலா யிருந்தது, கருங்கல் கட்டடமாக்கப்பட்டது. கண்டராதித்யர் காலம் 948 வருஷம்; ஆகவே இது ஒரு மிகவும் பழய கோயிலாம். புதுப்பித்த கோயிலுக்கு கண்டராதித்தம் எனப் பெயர் ஆயிற்று. கோயிலில் கண்டராதித்தர் செம்பொன்மாதேவியார், அவர்களது குமாரன் முதலியோருடைய சிலைகள் இருக்கின்றன. ஸ்வாமி உமா மஹேஸ்வரர், தேவி மங்களநாயகி, கங்கை தீர்த்தம், இங்குள்ள நடராஜர் விக்ரஹம் அழகியது.

**கோஹத்தி** :—வட இந்தியாவில் ஆசாம் தேசத்தில் காம்பே ஜில்லாவிற் முக்கிய பட்டணம்; பிரமபுத்ரா நதியின் இரு கரையிலுமுள்ளது. நதியின் மத்தியில் ஒரு தீவில் சிவாலய மிருக்கிறது. ஸ்வாமி உமாநந்தர். ஸ்டேஷனுக்கு $1\frac{1}{2}$ மயிலில் தர்ம சாலையுண்டு, பண்டாக்கள் வீடுகளுமுண்டு ஆசாம் பெங்காள ரெயில் ஸ்டேஷன்.

**கௌரிசங்கர் மலை** :—வட இந்தியாவிலுள்ளது. சிவாலயம் இங்கு 36 சிவலிங்கள் உள.

**கௌசிகா** :—மைசூர் ராஜ்யம், சிவாலயம் சிறியது.

**சக்கரபள்ளி** :—ராஜகிரி ஐயம்பேட்டை எனவும் வழங்கப்படுகிறது; சென்னை ராஜதானி ஐயம்பேட்டை ஸ்டேஷனுக்கு $\frac{3}{4}$ மயில் மேற்கு, சிவாலயம், ஜெயந்தன் சப்த யாத்ருக்கள் பூசித்த ஸ்தலம், திருமால் பூசித்து சக்கரம் பெற்ற ஸ்தலமென்பர் சிலர், ஸ்வாமி ஆலந்துறை நாதர், பசுபதி நாயகேஸ்வரர், தேவி அல்லியங்கோதை, பால்வண நாயகி, காவிரி தீர்த்தம், காக தீர்த்தம்; திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

**சகல் தீர்த்த** :—மத்திய இந்தியா, பரோக் ஸ்டேஷனிலிருந்து 10 மயில் சிவாலயம், ஸ்வாமி மஹாதேவ் நர்மதை தீர்த்தம்.

**சக்லேஷ்கர்** :—ஹசான் ஜில்லா, மைசூர் ராஜ்யம், ஹேமநதியின் வடகரையிலுள்ளது. சிவாலயம் ஸ்வாமி சகளேஸ்வரர்; கன்னடத்தில் துண்டுபட்ட ஈஸ்வரர் என்று பொருள்படும். லிங்கத்தின் உருவம் சிதைவுற்றிருக்கிறது.

**சகோ** :—கோட்பூர் ஜில்லா, மார்வார், வட இந்தியா சிவாலயம், முகலிங்கம்.

**சங்கரராமநல்லூர்** :—உடுமல்பெட் தாலூகா, கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, பழய சிவாலயம், 1253 வருடத்திய கல்வெட்டுகளுடையது.

**சட்டேகாளம்** :—கொள்ளேகால் தாலூகா, கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, பழய சிவாலயம், பிரம்மா பூசித்த ஸ்தலம்.

**சத்யமங்லம்** :—மேற்படி தாலூகா, சென்னை ராஜதானி கோயமுத்தூர் ஜில்லா, பழய சிவாலயம், இதற்கருகில் **கொட்டுவீரம்பாளயத்தில்** ஒரு சிவாலயமுண்டு.

**சங்கமேஷ்வரம்** :—கர்னூல் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம்.

**சங்கமேஷ்வரர்** கோயில் :—மைசூர் ராஜ்யம் மாலப்பிரபையும், கிருஷ்ண நதியும் சந்திக்குமிடமுள்ளது. இங்கு பசவர், லிங்கரூபத்தில் ஐக்கியமானதாக ஐதிகம். இக்கோயிலில் ஹைதர் ஆலி நடுலிங்கம் பிரதிஷ்டை செய்ததாகச் சொல்லப்படுகிறது. மைசூர் ராஜ்யத்தில் காவிரியும் பவானியும் சங்கமமாகுமிடத்திலும் ஒரு சிவாலய முண்டு. இங்கு அமிர்தவாஹினி அந்தர்வாஹினியா யிருப்பதாகச் சொல்லப்படுகிறது,

**சங்கரநாராயணர்** கோயில் :—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, இதற்கு புன்னைவன மென்றும், இராசை யென்றும் பெயர் உளது, சிவாலயம், ஸ்வாமி சங்கரநாராயணர், தேவி கோமதியம்மன், ஆளுடையம்மை, புன்னைவிருட்சம்; இங்குள்ள விஷ்ணு சந்நிதி பிறகு கட்டப்பட்டதென்பர். ஆடி மாசம் பிரபல உற்சவம்; 10-ம் நாள் அம்மன் தபசு. சங்கரநர்ராயணர் காட்சி விசேஷம். இங்கு பெரிய சிம்பங்கள் 16-ம் ஆண்டில் வெட்டப்பட்டனவாக புரொபசர் ஹிராஸ் எண்ணுகிறார். பிரகுரிஷி பூசித்த ஸ்தலம். இதங்கு சங்கரநயினர் கோயில் என்றும், சங்கரன்

கோயிலென்றும் பெயர்கள் உண்டு. இந்த ஸ்தலத்தில் சங்கர நாராயணர் கோயில் என்றும், சங்கரலிங்கர் கோயில் என்றும் இரண்டு சந்நிதிகளுண்டு. கோயிலின் தலைவாயிலுக்கு நேராக இருப்பது சங்கரலிங்கர் கோயில்; இதற்கு வடக்கில் கோமதியம்மன் கோயில், இடையில் சங்கர நாராயணர் கோயில். இது 16-ஆம் நூற்றாண்டிற் முற்பகுதியில் கட்டப்பட்டது, உக்கிரபாண்டியனால ; பிறகு பிரஹத்துவஜ பாண்டியனாலும், அவனது குமாரன் விஜயகுஞ்சர பாண்டியனாலும், பல திருப்பணிகள் செய்யப்பட்டது. பெரிய கோபுரம் 11 நிலைகளுடையது, கோயிலுக்குள் உள்ள கோமதி அம்மன் சிலை, உக்கிரபாண்டியன் சிலை, மன்மதன் காவற்காரன் பறையன் சிலைகள், பார்க்கத் தக்கவை சங்கரலிங்கம் சுயம்புலிங்கம். புன்னைவனத்தைக் காத்த பறையன் உருவம்தான் காவற்காரப் பறையன் எனப் படுகிறது.

**சங்கரபுரம்** :—வட இந்தியா, தற்காலம் படான் என்று அழைக்கப்படுகிறது. ஸ்ரீ நகருக்கும் பாராமூலாவுக்கும் இடையிலுள்ளது, காஸ்மீர் ராஜ்யத்தில். இங்கு இரண்டு சிவாலயங்கள் உள. சங்கரவர்மனாலும் அவன் மனைவி சுகந்தையாலும் (883—902) கட்டப்பட்டவைகள். கோயில்கள் மாத்திரம் இருக்கின்றன. பிராகாரங்கள் மகம்மதிய அரசர்களால் அழிக்கப்பட்டன. கோயில்களுக்கு விமானங்கள் தவிர மண்டபங்கள் கிடையா. காஸ்மீர் சில்பம்.

**சங்கரநாராயணு** :—தென் கன்னட ஜில்லா, சென்னை ராஜதானி, பெரிய சிவாலயம், ஸ்வாமி சங்கர நாராயணர்.

**சங்கரி துர்க்கம்** :—சென்னை ராஜதானி. திருச்செங்கோட்டிற்கு 3 மயில்; ரெயில் ஸ்டேஷன்; சிவாலயம்.

**சங்கவரம்** :—கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி இங்கு ஐந்து மயில் தூரத்தில் நடு குன்றின்மீது சிவாலயம். 1282 வருஷம் இது கட்டப்பட்டதாக ஒரு கல்வெட்டு குறிக்கிறது.

**சங்குகரணம்** :—வட இந்தியா சிவாலயம், சுயம்புலிங்கம், ஸ்வாமி மஹாதேவேஸ்வரர்.

**சட்டாரா** பிரிவு :—பம்பாய் ராஜதானி, இங்கு பல சிவாலயங்கள் உள. (1) கிருஷ்ணேஸ்வரர் கோயில், சுக்ர

வார்பேட்டையிலுள்ளது. (2) பூலேஷ்வர் கோயில் மங்களவார்பேட்டையிலுள்ளது. (3) பார்லி பழய சிவாலயம், மகம்மதியரால் இடிக்கப்பட்டது. புதிய ஆலயம் ஒன்று பிறகு கட்டப்பட்டது. (4) படேஷ்வர் சிவாலயம், மலைக் கோயில்; ஸ்வாமி படேஷ்வர், தேவி பார்வதி. (5) சதாஷிவ்கட் மஹாதேவர் ஆலயம். சிவாஜி அரசனால் கட்டபபட்டதாம். (6) பால் கண்டோபா சிவாலயம்; சுமார் 400 வருடங்களுக்குமுன் கட்டப்பட்டது. இங்கு காணேஷர் மஹாதேவ் கோயில் என்று ஒரு சிவாலயமுண்டு. மல்லிகார்ஜுனமலை, சிவாலயம் குகைக்கோயில், ஸ்வாமி சோமநாத மஹாதேவ், மல்லிகார்ஜுனர், பாதாளகங்கை தீர்த்தம், 12-ஆம் நூற்றாண்டில் குடையப்பட்டதென்பர். (8) மாஸ்லட் சித்தநாதர் கோயில் ஸ்வாமி சித்தநாதர் தேவி ஜோகை. (9) மாஹுலி பில்வேஷ்வர் சிவாலயம் 1742 வருஷம் கட்டப்பட்டது. இங்கு ராதா சங்கரர் கோயில், ராமேஷ்வர் கோயில் என்று இரண்டு கோயில்களுண்டு. இங்குள்ள சங்கமேஷ்வர் சிவாலயம் 1740 ஆம் வருடம் கட்டப்பட்டது, விஸ்வேஸ்வர் மஹாதேவர் ஆலயம் 1735 வருஷம் கட்டப்பட்டது. கிருஷ்ணேஸ்வர் மஹாதேவர் ஆலயம் 1754 வருஷம் கட்டப்பட்டது. (10) கின்ஹாய் சிறிய சிவாலயம். (11) குந்தல் இங்கு பைரவர் குகைக்கோயிலெதிரில் ஒரு சிறிய மஹாதேவர் ஆலயமுண்டு. இங்குள்ள மற்றொரு குகைக் கோயிலில் பரமசிவத்தின் பக்கவில் பார்வதியும் கங்கையும் தேவிகளாக அமைக்கப்பட்டிருக்கின்றனர். (12) குஸ்ரூட் குகை சிவாலயம். (13) மச்சிந்தர்கட் மலைக்கோயில், ஸ்வாமி மச்சிந்தர்நாத். (14) சிகுர்டி மஹாதேவர் ஆலயம். 50 × 32 அடி விஸ்தீர்ணம். (15) சிமங்காண் சிவாலயம். (16) தேவாஷடா சமுத்ரேஷ்வர் கோயில், சமுத்திரராஜன் பூசித்த க்ஷேத்ரம். (17) திவாஷிகுக்ட் குகைக் கோயில் ஸ்வாமி துவாரேஷ்வர் மஹாதேவ் (18) தோம் மஹாதேவர் சிவாலயம் இங்குள்ள நந்தி ஆமையின் முதுகிலிருப்பது போல் செய்யப்பட்டிருக்கிறது. இங்கு ஹிவ் பஞ்சாயதன கோயில் என்று ஒரு சிவாலய முண்டு. நான்கு முகங்கள் நான்கு திக்குகளையும், ஐந்தாவது ஆகாயத்தையும் நோக்கியதாயிருக்கிறது. கோயில் 1780 வருஷம் கட்டப்பட்டதாம். இதற்கு ½ மயில் தூரத்தில் மஹாராஷ்டிர அரசன் ஷாஹுவினால் பூசிக்கப்பட்ட லிங்க முண்டு. இது தௌம்யரால்

பிரதிஷ்டை செய்யப்பட்ட தென்பர். (19) கரோட், இங்கு காசி விஸ்வேஸ்வர் ஆலயம், கமலேஷ்வர் ஆலயம் என இரண்டு சிவாலயங்கள் உண்டு. (20) காடங் சிவாலயம், க்ஷேமாத் பன்ட் கட்டடம் 17 × 15 அடி விஸ்தீர்ணம் (26) கிக்ஸி சிவாலயம், பாழாய்க் கிடக்கிறது. ஷிங்களதேவ் அரசனால் கட்டப்பட்டதாம். (22) சந்தன் மஹாதேவர் சிவாலயம். (23) பஹதூர்வாடி மல்லிகார்ஜுனர் சிவாலயம் 50 × 20 அடி விஸ்தீர்ணம்; இதன் மதில் சுவர்கள் கருப்புக் கல்லால் ஆக்கப்பட்டவை. (24) பாஹி ராமலிங்கஸ்வாமி கோயில் 250 வருடங்களுக்கு முன்பு அந்தோபநாயக் பிடே என்பவரால் கட்டப்பட்டது. கர்ப்பக்கிரஹம் 10 × 10 × 10 அடி. ஸ்ரீராமர் பூசித்த ஸ்தலமென்பர். (25) பாஹனே பஹுலேஷ்வர் மகாதேவ் கோயில், லிங்கம் ஒரு இடையனால் பிரதிஷ்டை செய்யப்பட்டதென்பர் (26) பான்புரி சிவாலயம் ஸ்வாமி நாயிக்பா (27) பாவ்தன் சிவாலயம் கர்ப்பக்கிரஹம் 12 அடி சதுரம். (28) போஸ் சிவாலயம் குகைக்கோயில். ஸ்வாமி கண்டோபா மஹாதேவ், 12 ஆம் நூற்றாண்டில் ஒரு யாதவ அரசனால் குடையப்பட்ட தென்பர். (29) போபால்கட் மஹாதேவர் சிவாலயம் (30) போபர்டி புதிய சிவாலயம் 20 × 28 அடி விஸ்தீர்ணம் இக்கோயில் ஒரு குளத்தின் மத்தியிலுள்ளது. (31) நகாரி சிவாலயம் குகைக் கோயில் (32) சந்தோஷ்கட் தடோபா மஹாதேவர் ஆலயம் (33) வடகோன் வடேஷ்வர் மஹாதேவ் ஆலயம், பழய கோயில (34) ஷிங்கள்பூர் கடகேஷ்வர் மஹாதேவர் ஆலயம் சிவாஜி மஹாராஜரால் (1627-1680) கட்டப்பட்டது. இங்கு அமிர்தேஷ்வா கோயில் என்று மற்றொரு சிவாலயமுண்டு. (35) ஷிராலா சிவாலயம், ஸ்வாமி கோரட்சர்நாத் (36) வாய் உமா மஹேஷ்வர் பஞ்சாயதன்; இங்கு தக்லேஷ்வர் மஹாதேவ் கோயில், கங்கர் ராமேஷவர் மஹாதேவர் கோயில் காசி விஸ்வேஸ்வர் கோயில் என்று மற்றும் 3 சிவாலயங்களுள; கடைசியில் குறிக்கப்பட்டது 1757 வருஷம் கட்டப்பட்டது. இன்னும் இங்கு கிருஷ்ண ஆற்றங்கரையில் **8** சிறிய சிவாலயங்கள் உண்டு (37) யவதேஷ்வர் சிவாலயம், ஸ்வாமி யவதேஷ்வர்.

சண்டா பிரிவு:—மத்ய மாகாணம். இங்கு சில சிவாலயங்களுள. (1) ஆர்மரி கிராமம் சிவாலயம். இது மூன்று சந்நிதிகளுடைய சிவாலயம் (சளுக்கிய கட்டி

டம்?) (2) பாடாலா கிராமம் சிவாலயம், சிகரம் இடிந்திருக்கிறது. (3) சாமாசி பழய இடிந்த சிவாலயம் (4) சண்டா பட்டணம்; அசலேஸ்வரர் கோயில்; இதற்கு 1 மயில் தூரம், காட்டின் நடுவில் ஒரு சிவலிங்கமும் அதைச் சுற்றிலும் 16 சிவலிங்கங்களும் இருக்கின்றன. (5) மார்க்கண்டா கிராமம், சிவாலயம், லிங்கம் மார்க்கண்டேயர் பிரதிஷ்டையென்பர், இங்கு மிருகண்டு ரிஷி பூசித்த சிவாலயம் ஒன்றுண்டு. (6) நளேஷ்வர் கிராமம் சிவாலயம், இங்குள்ள நந்தியின் வாயினின்றும் சதாகாலம் ஜலம் வந்துகொண்டிருக்கிறதாம்.

**சந்தனை** :—சென்னை ராஜதானி திருச்சிராப்பள்ளி ஜில்லா, சிவாலயம், ஸ்வாமி சுந்தரேசர், தேவி மீனாட்சி.

**சதுர்வேதிமங்கலம்** :—சென்னை ராஜதானி, மதுரை ஜில்லா, சிவாலயம்; ஸ்வாமி வேதநாதர், உமாதேவி; வேதங்கள் பூசித்த ஸ்தலம்.

**சத்தர்பூர் சமஸ்தானம்** :—வட இந்தியா ராஜபுதனத்திலுள்ளது; இங்கு சில சிவாலயங்கள் உள. (1) சத்தர்புரி பட்டணம், சிவாலயம் ஸ்வாமி சங்கடமோட்சன் மஹாதேவ இது 1786 வருஷம் ஹீனத்ராய்காயஸ்த் என்பவரால் கட்டப்பட்டது. இங்கு மற்றும் பிரதாபேஷ்வர் மஹாதேவ் கோயில், கௌரிஷங்கர் மஹாதேவ் கோயில் என்று இரண்டு ஆலயங்கள் உள. (2) காஜ்ரஹா. இங்கு கண்டார்ய மஹாதேவர் கோயில், விஸ்வநாத் கோயில், முதலிய சில சிவாலயங்கள் உள. (3) மணியகர், சுவர்கேஷ்வர் மஹாதேவ் கோயில்; இங்குள்ள லிங்கத்தின்மீது எப்பொழுதும் தீர்த்தம் துளித்துக்கொண்டிருக்கிறதாம். (4) ராஜ்நகர் கௌரிஷங்கர் கோயில்.

**சத்திமுத்தம்** :—(திரு) தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, தாராசுரம் ஸ்டேஷனுக்கு 2 மயில் தென்மேற்கு; பட்டீஸ்வரத்திற்கு மிகவும் அருகிலுள்ளது. ஸ்வாமி சிவக்கொழுந்தீஸ்வரர், தேவி பெரியநாயகி யம்மை; வேலாயுத தீர்த்தம், சூலதீர்த்தம். அம்பிகை சிவலிங்கத்தைத் தழுவி முத்தங்கொடுத்தபடியால் சத்தி (சக்தி) முத்தம் எனப் பெயர் பெற்றது. திருநாவுக்கரசர் பாடல் பெற்றது.

**சத்தியவேடு** :—சென்னை ராஜதானி, பொன்னேரி தாலூகா, செங்கல்பட்டு ஜில்லா, சிவாலயம் ஸ்வாமி மாதங்

கேஷ்வர், தேவி மரகதவல்லி, மாதங்கதீர்த்தம். இங்கு சுமார் 975௵ ஆண்ட கங்கபல்லவ அரசன் அபராஜிதன் காலத்திய கல்வெட்டுளது. கோயிலுக்கு மாதங்கன் பள்ளி என்று பெயர், மாதங்கரிஷி பூசித்த ஸ்தலம்.

**சதாசிவக் கோனே** :—சென்னை ராஜதானி, சிவாலயம் ஸ்வாமி சதாசிவேஸ்வரர், தேவி காமட்சி. ஆகாயகங்கை தீர்த்தம்.

**சதுரகிரி** :—தென் இந்தியா சிவாலயம் ஸ்வாமி அறப்பளீசர், ஊருக்கு அறப்பளீசுரம் என்றும் பெயர். தேவார வைப்புஸ்தலம்; கொல்லிமலையைச் சார்ந்தது.

**சதுரங்கபட்டினம்** :—கல்வெட்டுகளில் இதன் பழயபெயர் சதிரவாசகன் பட்டினம் என்றிருக்கிறது. இங்கு ஒரு பழய சிவாலய மிருந்ததாக எண்ண இடமிருக்கிறது. இதற்கு 3 மயில் தூரத்தில் ஒரு சிவாலயமுண்டு, திருப்பளீஸ்வரர் கோயில், பழய கோயில்; கஜப்பிருஷ்ட ஆகிருதி.

**சந்தகட்டா** :—மைசூர் ராஜ்யம். சங்கமேஷ்வர் கோயில் இது இரட்டைக்கோயில்.

**சந்தரவூர்** :—பாபட்லா தாலூகா, குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி, இங்கு இரண்டு சிவாலயங்கள் உள. ராமலிங்கேஸ்வர ஸ்வாமி கோயில், நாகேஸ்வரர் கோயில்.

**சந்திரகிரி** :—சென்னை ராஜதானி, வட ஆற்காடு ஜில்லா திருப்பதிக்கருகிலுள்ள கிராமம். சிவாலயம் பாழடைந்திருக்கிறது. இதன் கோபுரம் அநந்தராஜன் என்பவரால் கட்டப்பட்டது. ஸ்வாமி காலசம்ஹாரர், தேவி திரிபுரசுந்தரி; மார்க்கண்டேயர் பூசித்தது.

**சந்திரகுப்தா** :—நிஜாம் ராஜ்யம். 900 படிகளுடைய ஒரு மலையின்மீது சிவாலயம். இந்த ராஜ்யத்தில் பர்லி எனும் இடத்திலும் ஒரு குன்றின்மீது சிவாலயமிருக்கிறது.

**சந்திராவதி** :—வட இந்தியா, சித்தேஸ்வரர் கோயில்; அழகிய சிவாலயம், ஆரிய சில்பம்; இக்கோயில் ஒன்பதாம் நூற்றூண்டிற்கு முன் கட்டப்பட்டதாம்.

**சம்பா** :—வட இந்தியா, பங்காள்நாகபூர் ரெயில் ஸ்டேஷன்; ஹாஸ்டேல் நதியின் கரையிலிருக்கிறது. மகாதேவர், மகாதேவி; சகல வியாதி நிவாரண ஸ்தலம்; இதற்கு

2 மயிலில் பிட்டன்பூர் எனும் கிராமத்தில் சிவாலயமிருக்கிறது; ஸ்வாமி ஷிவ் பிட்டியேஷ்வர்.

**சம்பான் பிரிவு** :—வங்காளம், வட இந்தியா, இங்குலெளரிய அரராஜ் எனுமிடத்தில், அசோக ஸ்தம்பத்திற்கு 1 மயில் தென் மேற்கில் ஒரு சிவாலயமுளது. ஸ்வாமி மஹாதேவ்.

**சமயபுரம்** :—திருச்சிராப்பள்ளி தாலூகா, ஷை ஜில்லா சென்னை ராஜதானி, ஸ்ரீமுகேஸ்வர ஸ்வாமி கோயில். கோயில் கிலமாயிருக்கிறது.

**சப்த கோதாவரி** :—மத்திய இந்தியா, பீமேஸ்வரர் கோயில். சுயம்பு லிங்கம். இதற்கருகில் ஹரிச்சத்திரம் எனும் இடத்தில் ஒரு சிவாலயமுண்டு.

**சவுடம்பூர்** :—தார்வார் ஜில்லா, சிவாலயம் துங்கபத்ரைக் கரையிலுள்ளது. முக்தேஸ்வரர் கோயில். சுவாமிக்கு முக்திநாதர் என்றும் பெயர்.

**சாக்கோட்டை** :—இதற்குத் திருக்கலயத்தான்குடி என்றும் பெயர். தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, கும்பகோணம் ரெயில் ஸ்டேஷனுக்கு 1-மயில் தெற்கு. ஷாஜி கோட்டை என்பதின் மரு சாக்கோட்டை என்றாயது. இதன் பழய பெயர் ரகுநாதபுரம், சிவாலயம். ஸ்வாமி அமிர்தகடேஸ்வரர்.

**சாகர் பிரிவு** :—மத்திய மாகாணம், மத்ய இந்தியா. இங்கு இரண்டு சிவாலயங்கள் (1) பாபெல் ஊரில் பூல்நாத் ஸ்வாமி கோயில்; கார்த்திகை விசேஷம். (2) நஹார்மாவ் எனும் ஊரில் சிறிய சிவாலயம், குன்றின் மத்தியில் உளது.

**சாட்டியக்குடி** :—திருத்தருபூண்டி தாலூகா, சென்னை ராஜதானி, கன்றாப்பூருக்கு அருகிலுளது. திரு ஆரூர் ஜங்ஷனிலிருந்து போகலாம். சிவாலயம் திருவிசைப்பா பெற்றது.

**சாத்தங்குடி** :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, திருப்புங்கூருக்கு $1\frac{1}{2}$ மயில்; வைதீஸ்வரர் கோயிலிருந்தும் போகலாம்; ஸ்வாமி விஸ்வநாதர், தேவி விசாலாட்சி, சிவகங்கை தீர்த்தம்; வைப்புஸ்தலம்.

**சாத்தமங்கை** :—(திரு) கோயிற்றிருசாத்தமங்கை எனவும் செய்யாற்றமங்கை எனவும் பெயர் உண்டு. திருமருக

லுக்கு 1 மயில் வடகிழக்கு; அஷ்டவக்கிரர் பூசித்த ஸ்தலம்; சிவாலயத்திற்கு ஆயவந்தி என்று பெயர்; ஸ்வாமி ஆயவந் தீஸ்வரர், மாதீஸ்வரா, தேவி மலர்க்கண்ணம்மை, தையலாம்பிகை. பிரமதீர்த்தம். சிவலிங்கத்தின்மீது ஒரு சிலந்திப்பூச்சி விழ அதை வாயினல் ஊதி அகற்றிய தன் மனைவியை நிக்ரஹித்த திரு நீலநக்க நாயனரைச் சமா தானப்படுத்தி ஸ்வாமி அம்மனைவியை ஏற்றுக்கொள்ளும் படி செய்த ஸ்தலம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

**சாந்தலூரு**:—சென்னை ராஜதானி, சிவாலயம் விஜய நகரத்து உத்யோகஸ்தர் பந்துவாகிய சின்னம்மாள் என் பவர்களால் 1540 வருஷம் கட்டப்பட்டது.

**சாத்தங்குடி**:—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா வைதீஸ்வரன் கோயிலுக்கு 4-மயில் சிவாலயம்; ஸ்வாமி விஸ்வநாதர், தேவி விசாலாட்சி, வைப்புஸ்தலம்.

**சாதேபச்சஹல்லி**:—மைசூர் ராஜ்யம், மஹாலிங்கேஸ்வரர் கோயில், ஹொய்சல சில்பம்.

**சாத்தியக்குடி**:—நாகப்பட்டினம் தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி வேதபுரீஸ்வரர்.

**சாத்தூர்**:—ராமநாதபுரம் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி சுந்தரேசர், தேவி மீனட்சி.

**சாதலூர்**:—நரசராவ்பெட் தாலூகா, கிருஷ்ணுஜில்லா சென்னை ராஜதானி, ராமலிங்கேஸ்வர ஸ்வாமி கோயில்.

**சாம்பல்பூர் பிரிவு**:—வங்காள ராஜதானி. இங்கு உள்ள சில சிவாலயங்கள் (1) **அம்பாபோஹ** சிவாலயம் சுமார் 150 வருடங்களுக்கு முன் தக்கணிராய் என்பவரால் கட்டப் பட்டது. (2) **கைசாமா** கிராமம்-பாலகேஸ்வரர் சிவாலயம் (3) **ஹுமாமகாதேவர்** கோயில். (3) **குயிலிகோகர்** கிராமம். சிவாலயம் ஸ்வாமி மஹேஸ்வர்நாத். இங்கு ஒரு குகையில் மற்றொரு சிவாலயமுண்டு (5) **கும்பாரி**-பழய சிவாலயம். (6) **நரசிங்கநாத்** சிறு சிவாலயம்.

**சாமக்குளம்**,—கோயில்பாளையம் என்னும் பெயர் உண்டு கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, பழய சிவா லயம். இதில் பல கல்வெட்டுகள் உள.

**சாமராஜநகர்**:—மைசூர் ராஜ்யம், மைசூரிலிருந்து 36-மயில் இங்கு இருந்த பழய சிவாலயத்தை 1828 ஆண்டில்

கிருஷ்ணராஜ உடையார் புதுப்பித்தார். இக்கோயிலின் வெளிப்பிராகாரத்தில் பல தேவதைகளின் உருவங்கள் அமைக்கப்பட் டிருக்கின்றன. ஸ்வாமி பெயர் சாமராஜேஸ்வரர்.

**சாமராஜ்பேட்தாலுக்கா** :— மைசூர் ராஜ்யம், காவேரி சங்கரர் கோயில்; காவிரியும் ஹேமவதியும் சங்கமமாகும் இடம்.

**சாமன்னு** :—திருச்சாமன்னு என்று வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி மலையாளத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற சிவாலயம்; ஆயினும் கோயிலுக்கு விமானம் முதலியவை கிடையாது. ஒரு காட்டின் நடுவில் அடுக்கப் பட்ட கருங்கற்களின்மீது சிவலிங்கம் இருக்கிறது. வைகாசி மாதம் 28 நாட்கள் இதற்குத் திருவிழா. மற்ற காலங்களில் பூசை கிடையாது. திருவிழாவின்போது நாயர்களும் தீயர்களும், ஆயிரக்கணக்காக வருகிறார்கள். நாயர்கள் சுமார் 5000 நெய்க்குடங்களை அபிஷேகம் செய்கின்றனர். இதன் பிறகு தீயர்கள் ஸ்வாமிக்கு இளநீர் அபிஷேகம் செய்கின்றனர். இங்கு தட்சயாகம் நடந்ததென்பது ஐதிகம்; லிங்கத்தில் வெடிபட்டு இரத்தம் பெருகியதாகவும் ஐதிகம்.

**சாமுண்டி மலை** :—மைசூர் ராஜ்யம், மைசூரிலுள்ளது. இங்கு மலைமீது ஒரு சிவாலயமுண்டு, ஸ்வாமி மஹாபலேஷ்வர்.

**சாய்க்காடு** :—(திரு) சாயாவனம் என்றும் பெயர் சென்னை ராஜதானி, சீர்காழிக்கு 9 மயில் தெற்கு, உபமன்யு பூசித்த க்ஷேத்ரம், இயற்பகை நாயனர் முத்திபெற்ற ஸ்தலம், காசிக்கு சமானமான க்ஷேத்ரம் என்று ஸ்தல புராணம் கூறுகிறது. சிவாலயம்; ஸ்வாமி சாயவனேஸ்வரர் தேவி குயிலினுநன்மொழி யம்மை; சாயாதீர்த்தம், காவிரி தீர்த்தம்; திருஞான சம்பந்தர் பாடல்பெற்றது. இங்குள்ள **பல்லவனீஸ்வரர்** கோயில் என்பது பல்லவ கட்டிடமன்று.

**சாயல்குடி** :—ராம்நாட் ஜில்லா, சென்னை ராஜதானி, பழய சிவாலயம். ஸ்வாமி சொக்கநாதர்; கோயில் அயகிரி மஹரிஷியால் கட்டப்பட்டதென்பது ஐதிகம்.

**சார்நாத்** :—வட இந்தியா, காசிக்கு 3 மயில் அருகிலுள்ள க்ஷேத்திரம்; சிவாலயம் ஸ்வாமி சாரங்கநாதர் விஸ்வேசர்;

சிறு கோயில், பௌத்தர்கள் கொண்டாடும் மான் தோட்டத்திற்கு அருகிலுள்ளது.

**சாரான்பிரிவு** :—வங்காள ராஜதானி, இங்கு இரண்டு சிவாலயங்கள் உண்டு (1) சில் ஹெளரி சிவாலயம், ஸ்வாமி சிலாநாதர் (2) கோன்பூர் ஹரிஹர்நாத மகாதேவர் கோயில்.

**சாரிபள்ளம்** :—திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, சோமலிங்கேஸ்வரர் கோயில்.

**சாளுவன்குப்பம்** :—செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி, மஹாபலிபுரத்திற் கருகிலுள்ளது; அதிரண சண்டேஸ்வரர் ஆலயம், பல்லவக் கட்டிடம். 670-700 இல் ஆண்ட இரண்டாவது நரசிம்மனல் கட்டப்பட்டது. லிங்கம் பட்டை தீர்த்த உருவமுடையது. லிங்கத்தின் பின்புறம் சோமாஸ்கந்தமூர்த்தி செதுக்கப்பட்டிருக்கிறது. ஆவுடையார் லிங்கத்தின் மத்தியில் இருக்கிறது. கோயிலின் சில பாகம் மண் மூடப்பட்டிருக்கிறது; பூஜை யில்லை.

**சாண்டால் தூர்சானுஸ்**:—வங்காளத்தின் ஓர் பிரிவு. இங்கு தேவக்கிரஹம் எனும் ஊரில் வைத்யநாதஸ்வாமி கோயில்; சந்திரகூப தீர்த்தம், ஜோதிலிங்கங்களில் ஒன்று; ராவணப் பிரதிஷ்டை என்பது ஐதிகம், ஸ்வாமி பெயர் வைத்யநாத்; ராவணேஸ்வரர் என்றும் பெயர். விமானம் 72 அடி உயரம்; பழய கோயில்; லிங்கம் வட்டவடிவுடையது; 5 அங்குலம் வட்டக் குறுக்களவு உடையது, 4 அங்குல உயரம். இங்கு தூத்நாத மஹாதேவர் கோயில் என்று மற்றொரு சிவாலயமுண்டு.

**சாஹோர** :—சம்பா சமஸ்தானம், சந்திரசேகரர் ஆலயம்; பழய கோயில், கூரை மாத்திரம் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது.

**சால்கமான்** :—பம்பாய் ராஜதானி சோமேஸ்வரர் கோயில், இங்குள்ள தீபஸ்தம்பத்தில் கார்த்திகையில் 350 விளக்குகள் ஏற்றப்படுகின்றன.

**சாலவாக்கம்** :—காஞ்சீபுரம் தாலூகா, சென்னை ராஜதானி சிவாலயம், 200 கெஜம் நிகளம், 150 கெஜம் அகலம், ஸ்வாமி சொர்ணபுரீஸ்வரர் தேவி ஆநந்தவல்லி. இங்கருகிலுள்ள மலை உச்சியில் வைரவநாதர் எனும் சிவாலயமுண்டு.

**சிக்கந்தராபாத்** :—நிஜாம் ராஜ்யம் சிவாலயம்.

சிக்கல் :—ராம்நாட் ஜில்லா, சென்னை ராஜதானி சிறு சிவாலயம்; ஸ்வாமி திருவநந்தேஸ்வரர். இங்கு சத்திரமுண்டு.

சிக்கல் :—தென் இந்தியர் ரெயில்வே ஸ்டேஷன் நாகப் பட்டினத்திற்கு அருகிலுள்ளது. வசிஷ்டர் காமதேனுவை அடையும் பொருட்டு பூசித்த ஸ்தலம், ஸ்ரீ கிருஷ்ணன் பூசித்த ஸ்தலம், ஸ்வாமி சந்நிதி கட்டு மலையிலிருக்கிறது. ஸ்வாமி நவனீதேஸ்வரர் தேவி வேல்நெடுங்கண்ணியம்மை, புஷ்கரிணி தீர்த்தம், ஸ்தல விருட்சம் மல்லிகைச் செடி (இங்குள்ள சிங்காரவேலர் பிரபலமூர்த்தி) காமதேனுவின் பால் பெருகி எங்கும் வெண்ணெயாய்ப் படிய, வசிஷ்டர் அதைத் திரட்டி சிவலிங்கமாக்கிப் பூசித்தார்; அதனல் ஸ்வாமிக்கு வெண்ணெய் லிங்கேஸ்வரர் என்று திருநாமம். அந்த லிங்கத்தை வேறிடம் வைக்க எடுக்கப் பிரயத்னப் பட்டபொழுது வராமல் சிக்கிக் கொண்டபடியால் சிக்கல் எனப் பெயர் உண்டாயிற்றென்பது ஐதிகம். பிரம்மோற் சவம் சித்திரை மாசம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

சிக்கிஹொண்டா :—தேவாங்கெரெ தாலூகா, மைசூர் ராஜ்யம், சிவாலயம் பாழா யிருக்கிறது.

சிக்மகளூர் :—மைசூர் ராஜ்யம், ராமஸ்வாமி கோயில் தற்காலம் புதிதாய்க் கட்டப்பட்டது.

சிங்கபுரம் :—விசாகபட்டணம் ஜில்லா, சென்னை ராஜதானி, இங்கு தேவகிரி எனும் குன்றில் குகைக்கோயில் சிவாலயம், சிவராத்ரி விசேஷம்.

சிங்கபூர் :—மலேயா நாட்டிலுள்ளது கடற்கரைக்கு 2 மயிலில் சிவாலயம், இங்கு மற்ற தேவதைகளும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. பிராமண குருக்கள் பூஜை.

சிங்கபூம் பிரிவு :—வங்காள ராஜதானி, பெனுசாகர் சிவாலயம், ஏழாம் நூற்றூண்டில் கட்டப்பட்டது; கிலமா யிருக்கிறது.

சிங்கற்பூர் :—சட்டாரா ஜில்லா, பம்பாய் ராஜதானி, கோரிகாவான் ஸ்டேஷனிலிருந்து 40 மயில் சிவாலயம் சிறு குன்றின் மீதுளது; ஸ்வாமி மஹாதேவர். இங்கு பெரிய சத்திரமுளது.

சிட்டல்துர்க் :—இதற்கு சித்ர துர்க்கம் அல்லது சத்திரக் கல் என்றும் பெயர்; மைசூர் ராஜ்யம், மலை உச்சியில்

சித்தேஸ்வரர் கோயில்; இங்குள்ள ஒரு குகையில் பஞ்சலிங் கேஸ்வரர் ஆலயமுண்டு. இது 700 வருடங்களுக்கு முன்பு வெட்டப்பட்டதாம், ஸ்வாமி பெயர் சித்தநாதர் 1355 வருஷம் மல்லிநாதரால் கோயில் கட்டப்பட்டது. இங்கு அங்கிளிமத் என்றும் குன்றிருக்கிறது. இதில் தரை மட்டத்தின்கீழ் குகைகள் இருக்கின்றன; இவைகளில் சிவலிங்கங்கள் இருக்கின்றன.

**சித்ரகூடம்** :—வட இந்தியா மாணிக்பூருக்கு 25 மயில் சிவாலயம், ஸ்வாமி காந்தநாதர் தேவி காந்திமதி, ரெயில் ஸ்டேஷன்.

**சிட்டகாங் பிரிவு** :—வங்காள ராஜதானி (கிழக்கு) இங்கு 3 சிவாலயங்கள் உண்டு. (1) மைஸ்கால் சிவாலயம் ஸ்வாமி ஆதிநாதர். (2) சிதாகுண்ட சிவாலயம் ஸ்வாமி ஷம்புநாத் (3) சந்திரநாத்குன்று சிவாலயம், ஸ்வாமி சந்திரநாத்.

**சிட்டூர்கர்** :—மார்வார் தேசம், உதயபுரி ராஜ்யத்தி லுள்ளது சிவாலயம்.

**சிண்டலாரா பிரிவு** :—மத்திய மாகாணம் இங்கு மூன்று சிவால்யங்கள் உள (1) சாவல்பாஹி சிவாலயம் (2) நில்கண்டி சிவாலயம்; இங்கு சில இடிந்த சிவாலயங்களுமுண்டு (3) ராகா தேவி கிராமம் சிவாலயம்; குகைக்கோயில்; பக்கத்தி லுள்ள கிணற்றில் இறங்கிப் போகவேணும்.

**சித்தனவாசல்** :—சென்னை ராஜதானி, புதுக்கோட்டை சமஸ்தானம் இங்கு இடிந்துபோன ஒரு சிவாலயமுளது. இங்கு குளத்தருகில் குகைக்குள் ஒரு சிவாலயமுண்டு தண்ணீரை இரைத்தாலொழிய சிவலிங்கம் புலப்படாது. இக்குகைக் கோயிலில் வர்ணம் தீட்டிய சித்திரங்கள் உள; அவை அஜெண்டா குகையிலிருப்பவை போன்றவை. ஆகலின் இக்குகைக்கோயில் மிகவும் புராதனமானது.

**சித்தனகர்** :—காஞ்சிபுரம் தாலூகா, செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம்; ஸ்வாமி உமையா ளீசர் தேவி அகிலாண்டவல்லியம்மன்.

**சித்தவட்டம்** :—கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம் சித்தேஸ்வரர் அல்லது சித்தவடேஸ்வரர்; கோயில் மணலால் மூடப்பட்டிருக்கிறது. இதில் பழய கல் வெட்டுகள் இருப்பதாக வதந்தி. குபேரன் பூசித்த ஸ்தலம்.

**சீத்தபுரம்** :—பேலூர் தாலூகா, ஷிமோகா ஜில்லா, மைசூர் ராஜ்யம், சித்தேஸ்வரர் கோயில்.

**சித்தபூர்** :—(சித்தபுரி) அல்லது சித்தர்பூர்; அகமதாபாத்திலிருந்து 64 மயில்; சரஸ்வதி நதியின் வடகரையிலுள்ளது, பரோடா சமஸ்தானத்தில்கடி ஜில்லாவில் உளது. சிவாலயம், சித்தேசர் ருத்திரமாலா எனும் பெயர் உடையது பெரிய கோயில்; தற்காலம் மிகவும் கிலமா யிருக்கிறது. இங்கு ஸ்டேஷனுக்கருகில் ஒரு தர்ம சாலையுண்டு. பம்பாய் பரோடா சென்ட்ரல் ரெயில் ஸ்டேஷன். இதனருகில் நர்மதா சங்கமத்தில் ஓர் சிவாலயமுளது; ஸ்வாமி சங்கமுகேஸ்வரர், சுயம்புலிங்கம்.

**சித்தர் மலை** :—மதுரை ஜில்லா, அம்மைய நாயக்கனூர் ஸ்டேஷனுக்கு 13 மயில் தென் மேற்கு சிவாலயம், 14-ஆம் நூற்றாண்டில் பம்பரமுத்து நாயக்கர் என்பவரால் கட்டப்பட்டது. இக்காரணம்பற்றி இன்றைக்கும் சிவபூஜை முடிந்தவுடன் "பம்பரமுத்து நாயக்கர்" என்று மும்முறை அழைத்து அவரது சந்ததியார் யாராவது வந்தால் அவர்களுக்கு விபூதிப் பிரசாதம் முதலிய கொடுக்கும் வழக்கமுண்டு. கோயிலிலுள்ள லிங்கத்திற்கு மஹாலிங்கம் எனப் பெயர்; எழுகடல் தீர்த்தம்.

**சித்தானம்** :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, மாயவரத்திற்கு அருகிலுள்ள சிவஸ்தலம்.

**சித்தூர்** :—ராஜபுதனம், உதயபுரி ராஜ்யம், இங்கு பல சிவாலயங்கள் உள. (1) **சமித்தேஷ்வர்** ஆலயம் (2) **நீலகண்ட மஹாதேவர்** ஆலயம் (3) **கைலாசபுரி** ஆலயம் ஸ்வாமி ஏகலிங்கர்; பப்பா என்பவரால் கட்டப்பட்டது. மகம்மதியர்களால் பழய கோயில் இடிக்கப்பட்டபின் ராணி ராய்மல் என்பவர்களால் 1488 வருஷம் புதுப்பிக்கப்பட்டது; சிவலிங்கம் கறுப்புக்கல்லாலாயது 4 முகங்களுடையது (4) **ஜஹாஸ்பூர்** இங்கு 12 சிவாலயங்கள் உள. (4) **கும்பகர்** கோட்டைக்குள் ஒரு சிவாலயமுண்டு.

**சித்தேஸ்வரம்** :—வட இந்தியா, பாதர்பூர் ஸ்டேஷனுக்கு சமீபம், சுயம்புலிங்கம்; ஸ்வாமி பெயர் தவளீஸ்வரர்.

**சித்தலிங்க மடம்** :—திருக்கோயிலூர் தாலூகா, தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, வியாக்ரபாதர்

கோயில; இங்கு சுந்தரபாண்டியன் (1270-1302) காலத்திய கல் வெட்டுகள் உள.

**சிதம்பரம்:**—சென்னை ராஜதானி, தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன், இதற்குக் கோயில், தில்லை, பெரும்பற்றப்புலியூர், புண்டரீகபுரம், தகராகாசம், வியாக்ரபுரம், என்றும் பெயர்களுண்டு. தில்லை என்பது ஒரு செடியின் பெயர்; தில்லைக் காடா யிருந்தமையால் ஆதியில் அப்பெயர் வந்திருக்கலாம். சிறு × அம்பலம் = சிற்றம்பலம், சிதம்பரம் என்றாயது என பெர்கூசன் எண்ணுகிறார். சித் × அம்பலம் = சிற்றம்பலம், சித்மபரம் ஆயது என்று சமஸ்கிருத வித்வான்கள் கூறுகின்றனர். கோயில் மிகவும் பிரபலமானது. மூவர் பாடல் பெற்றது. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பாடல் பெற்ற ஸ்தலம்; பூலோக கைலாசம் எனப் பெயர் பெற்றது. தர்சிக்க முக்தியளிக்கும் ஸ்தலம் என்பது ஸ்தல மகாத்மியம்; பதஞ்சலி வியாக்ர பாதர்களால் சேவிக்கப்பட்ட க்ஷேத்திரம். பஞ்ச சபைகளில், கனக சபையையுடையது; சபாநாதர் ஆநந்தத் தாண்டவ மாடிய பதி; தில்லை மூவாயிரவர் பூசிக்கும் கோயிலையுடையது. திருநீலகண்ட நாயனர், நந்தனர், கூற்றுவநாயனர், சந்தனசாரியார், கோச்செங்கட் சோழர், கணம்புல்லர், மறைஞான சம்பந்த சிவாசாரியார், உமாபதி சிவாசாரியர், துற்பதன், துற்சகன், துர்த்தெரிசினன் முதலியோர் முக்திபெற்ற ஸ்தலம். உபமன்யு பாற்கடல் பெற்றுண்ட ஸ்தலம்; வியாசர், சுகர், சௌனகர் சூதர் பூசித்த தலம். குலோத்துங்க சோழன் காலத்தில் நம்பியாண்டார் நம்பி இக்கோயிலின் ஓர் அறையில் தேவாரங்களைக் கண்டெடுத்த ஸ்தலம்; மாணிக்கவாசகர் இங்கு சமணர்களை வென்ற இடம்; அர்த்த ஜாமத்தில் எல்லா சிவ க்ஷேத்திரங்களிலுமுள்ள சிவகலைகள் தன்னிடம் வந்து சேரப்பெற்ற சிவமூர்த்தியையுடையது. பஞ்சலிங்கங்களில் ஆகாயலிங்க க்ஷேத்திரம். சிவாலயம் ஆதியில் சிறியதாயிருந்து பிறகு மிகவும் பெரியதாக்கப் பட்டது. ஸ்வாமி திருமூலநாதர்-சபாநாயகர்; தேவி உமையம்மை, சிவகாமியம்மை, சிவகங்கை தீர்த்தம், புலிச்சுர தீர்த்தம், குய்ய தீர்த்தம், புலிமடு, வியாக்ரபாத தீர்த்தம், காந்த தீர்த்தம், பிரம தீர்த்தம், திருப்பாற்கடல்; இங்குள்ள கூபத்திற்கு பரமாநந்த கூபம் என்று பெயர். கோயில் 600 கெஜம் தெற்கு வடக்கு, 500 கெஜம் கிழக்கு, மேற்கு;

மொத்தம் 39 ஏகரா விஸ்தீர்ணமுடையது. வெளி மதிற் சுவர்கள் 30 அடி உயரம், பெரிய கோபுரம் சுமார் 122 அடி உயரம்; கோயிலில் நான்கு பிராகாரங்கள் இருப்பதாகக் கூறலாம்; முதல் பிராகாரம் விக்ரம சோழனல் கட்டப் பட்ட தென்பர்; இரண்டாம் பிராகாரத்திற்கு விக்ரம சோழன் திருமாளிகை என்று பெயர்; மூன்ருூம் பிராகாரத் தில் 1000-க்கால் மண்டப மிருக்கிறது. 350 × 260 அடி விஸ்தீரணமுடையது, இது 1595 முதல் 1685 ஆண்டிற்குள் கட்டப்பட்டதாம். முதல் குலோத்துங்கன் தங்கை குந்தவையும், சிற்றரசனுகிய நரலோகவீரனும் கோயிலில் இரண்டு பிராகாரங்கள் கட்டியதாகச் சொல்லப்படுகிறது. இவர்கள் 100 கால் மண்டபத்தையும் கட்டி வைத்தனர். பெரிய புராணத்தை எழுதும்படிச்செய்த அனபாய சோழன் அம்மன் கோயில் பிராகார மதில்கள் கட்டி வைத்தனன். மூன்ருவது குலோத்துங்கன் (1178) சபா பதிக்கு முக மண்டபமும், ஒரு கோபுரமும் அம்மன்கோவில் பிராகாரத்தில் திருப்பணிகளும் செய்தனன். கோவில் மூலஸ்தானம் மிகவும் பழமையானது; இது ஒரு ரதத்தைப் போல் அமைக்கப்பட்டிருக்கிறது. நடராஜமூர்த்தி யிருக்கும் சபைக்கு சித்சபை என்று பெயர்; இது மரத்தாலாயது. சித்சபைக்கு எதிரில் கனகசபை இருக்கிறது; இங்குதான் நடராஜருக்கு தினம் அபிஷேக மாகிறது. கனகசபையும் மரத்தாலாயது. நடராஜ விக்ர ஹத்திற்குப் பின்னல் சிதம்பர ரஹஸ்யம் இருக்கிறது; இது சாதாரணமாகத் திரையால் மூடப்பட்டிருக்கும்; இங்கு லிங்கம் ஆகாய லிங்கமாம். சித் சபையில் நடராஜப் பெருமாள் பதஞ்சலி வியாக்ரபாதர்களுக்கு நடனமாடிய தாக ஐதிகம். இங்குள்ள ஐந்து படிகளும் வெள்ளியால் மூடப்பட்டிருக்கின்றன. இவை பஞ்சாக்கரங்களைக் குறிக் கின்றன என்பது ஐதிகம். சித் சபையானது மானிட உடம்பில் எப்படி இருதயம் இருக்கிறதோ, அப்படியே இக்கோயிலில் அமைக்கப்பட்டிருக்கிறது. இச்சபைதான் இக்கோயிலுக்கு கர்ப்பக்கிருஹமாம். இம்மண்டபம் அடி பீடத்திற்குமேற் கட்டப்பட்டிருக்கிறது. இதில் நடனம் செய்யும் சில்பங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளைப் போன்ற அழகிய சில்பங்கள் இந்தியா முழுவதுமே கிடையா தெனக் கூறலாம். இம்மண்டபத்தின்

பக்கங்களில் சக்கரங்கள் போலும் குதிரைகள் போலும் சிலைகள் இருக்கின்றன. ஆகவே இது ஒரு பெரியரதத்தைப் போன்றதாம். மூலஸ்தானேஸ்வரர் ஆலயம் கோயிலில் பெரிய கோபுரத்திற்கு நேராக உள்ளது; இதுதான் பழய கோயில் என்று சிலர் எண்ணுகின்றனர். இங்கு பூர்வத்தில் பழய கல் வெட்டுகள் இருந்ததாக அறிகிறோம்; கனகசபை பின்பு கட்டப்பட்டதாம். நடராஜர் கோயில் மரத்தாலிருக் கிறபடியால் பெர்கூசன் துரை இதுதான் கோயிலில் மிகவும் பழமையான பாகம் என்று நினைக்கிறார். இவை பத்தாம் நூற்றாண்டில் கட்டப்பட்டன என்கிறார். இங்குள்ள பார்வதி கோயில் பிறகு 14 நூற்றாண்டில் கட்டப்பட்டதாக நினைக் கிறார். கனகசபை பொற்றகடால் மூடப்பட்டது; முதல் பராந்தகன் (907-947) காலத்திற்கு முன்பு அது தாமிரத் தால் மூடப்பட்டிருந்தது. பராந்தகன் அதற்கு பொன் வேய்ந்து கனகசபை யாக்கினன். நிருத்த சபையில் 8 அடி உயரமுள்ள 56 அழகிய தூண்கள் உள. கோயிலின் இரண்டு உட்பிராகாரங்கள், 927-977 ஆண்டுகளில் ஆண்ட வீர சோழனும், 1004-ஆம் ஆண்டில் ஆண்ட அவனது பேரன் அரிவர்ம தேவனும் கட்டப்பட்டதாக கொங்கு தேச ராஜாக்கள் சரித்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பார்வதி கோயில் கட்டப்பட்ட சமயம்தான் இங்குள்ள பெரிய கோபுரங்கள் கட்டப்பட்டன. கிழக்கு கோபுரம் கோபெருஞ்சிங்க தேவனால் சுமார் 1050 AD-இல் கட்டப் பட்டு, பிறகு (1754-1794)—பச்சையப்ப முதலியார் தங்கையால் புதுப்பிக்கப்பட்டது; இதில் பதஞ்சலி வியாக்ர பாதர்கள் சிலைகளிருக்கின்றன. தெற்கு கோபுரம் பாண்டிய அரசனால் கட்டப்பட்டதாம், இதுதான் மிகப் பெரியது, 7 நிலைகளுடையது; இதற்கு அறிகுறியாக மச்சக்கொடி பொறிக்கப்பட்டிருக்கிறது. வடக்கு கோபுரம் 1516-ஆம் ஆண்டில் விஜயநகரத்து கிருஷ்ணதேவராயரால் கட்டப்பட் டது, 140 அடி உயரம்; இங்குள்ள இரண்டு கோபுரங்களில் இரண்டு பக்கமும் பரத நாட்டியத்திற்குரிய 108 நடனங்கள் சித்திரிக்கபபட்டிருக்கின்றன, ஒவ்வொரு முத்திரையின் பெயரும கீழே குறிக்கப்பட்டிருக்கிறது. ஆயிரக்கால் மண்டபத்திற்கு ராஜசபை என்று பெயர். இது 192 அடி அகலம், 338 அடி நிகளம், 1000 கால்கள் சரியா யிருக் கின்றன. இங்குள்ள சுப்ரமணியர் கோயிலுக்கு பாண்டிய

நாயகம் கோயில் எனப் பெயர்; இது 17-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாம்; இதன் அடிவாரச் சில்பங்கள் பார்க்கத் தக்கவை. சபா நாயகருடைய முக மண்டபமும், அம்மன் கோயில் கோபுரமும், பிராகாரமும் மூன்றாவது குலோத்துங்க சோழன் (1178-1216) காலத்தில் கட்டப்பட்ட தென்பர். கோயிலில் முற்கூறிய சபைகளன்றி தேவ சபை என்றும் ஒரு சபையுளது. சிவகாமி அம்மன் கோயிலில் புராணக் கதைகள் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. அம்மன் கோயில் கூரை விசித்திர வேலைப்பாடுடையது; முன் மண்டபமும் அழகியது. கோயிலின் மத்தியில் சிவகங்கை யெனும் திருக்குளம் இருக்கிறது; 175 அடி நீளம், 100 அடி அகலம்; இதைச் சுற்றிலும் மண்டபங்கள் இருக்கின்றன. இதில் மூழ்கித் தன்னைப் பீடித்திருந்த குஷ்ட வியாதி நீங்கினபடியால், ஹிரண்ய கர்ப்பன் என்பவனால் கோயிலின் பழய பாகம் கட்டப்பட்டதெனச் சொல்லப்படுகிறது. உட்பிராகாரத்தில் தெற்கு மூலையில் கோவிந்தராஜர் எனும் விஷ்ணு சந்நிதியுண்டு. இது 12-ஆம் நூற்றாண்டில் விக்கிரம சோழனால் கட்டப்பட்ட தென்பர். இது ராஜா சர். அண்ணாமலை செட்டியாரால் பெரும் பொருள் செலவழித்து புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. பிற்காலம் தேவாரத் திருப்பதிகங்கள் கண்டெடுக்கப்பட்ட அறை கோயிலின் வடகிழக்கில் இரண்டாம் பிராகாரத்திலிருக்கிறது. கோயிலின் தென் மேற்கு மூலையில் ஒரு பெரிய கணேசர் இருக்கிறார். இதுதான் இந்தியா முழுவதிலும் கோயிலிலுள்ள கணேச விக்ரஹங்களில் பெரிது என மதிக்கப்படுகிறது. கோயிலின் 8 மூலைகளிலும் அஷ்டதிக் பாலர்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனர். கோயிலில் 9 அங்குல உயரமுள்ள ஸ்படிக லிங்க மிருக்கிறது. மாணிக்க நடராஜ விக்ரஹத்திற்கு தினம் அபிஷேகம்; இது மிகவும் விசேஷம் இதற்கு கற்பூரார்த்தி நடக்கும்போது பின்புறம் இருந்து பார்ப்பது ஆச்சரியகரமான காட்சியாம். இக்கோயிலிலுள்ள சண்டேஸ்வர அனுக்கிரஹ மூர்த்தியும் திரிபுராந்தக மூர்த்தியும் பார்க்கத்தக்கவை. அன்றியும் இங்குள்ள அழகிய சிலைகளில் குதிரைகள் பூட்டிய சூரியனுடைய ரதம் ஒன்று பார்க்கத்தக்கது. இதற்கு அருணன் சாரதியாயிருக்கிறான். கோயிலில் சண்டேஸ்வரர் இருக்கவேண்டிய ஸ்தானத்தில்

பிரம்மா இருக்கிறார். இக்கோயிலில் அநேகம் கல்வெட்டு கள் உள; மிகவும் பழமையானது முதல் ராஜேந்திர சோழனுடைய 24 - ஆண்டு கல்வெட்டாம். இங்கு பல்லவ கல்வெட்டுகளும் இல்லை, சில்பங்களு மில்லையென்பது கவனிக்கத்தக்கது. கல்வெட்டுகளில் திருத்தொண்டத் தொகை குறிப்பிட்டிருக்கிறது. அன்றியும் 63 நாயன்மார் களுடைய உற்சவமும் குறிக்கப்பட்டிருக்கிறது. முன் கூறிய சிவகங்கையன்றி இக்கோயிலில் அடியிற்கண்ட முக்கிய தீர்த்தங்கள் உள, காயதீர்த்தம், வியாக்ரபாத தீர்த்தம், பரமபதி தீர்த்தம், ஆநந்த தீர்த்தம், பிரம்ம தீர்த்தம், நாக தீர்த்தம். இக்கோயில் காரியங்கள் ஆதிமுதல் தில்லை மூவாயிரவர் எனும் தீட்சதர்களால் பார்த்துவரப்படு கிறது. கோயிலில் இரண்டு முக்கிய பிரம்மோற்சவங்கள் உண்டு, ஆனிமாதம் ஒன்று, மார்கழிமாதம் ஒன்று; மார்கழி மாதம் ஆருத்திரா தர்சினம் மிகவும் பிரபலமானது; தர்சினம் என்பது ராஜ சபையிலிருந்து நடராஜமூர்த்தி திரும்பும்பொழுது கொடுக்கும் காட்சியாம். கோயிலில் ராஜேந்திர சோழன் காலத்தியதும், குலோத்துங்கசோழன் காலத்தியதுமான கல்வெட்டுகளும்உள. கோயிலில் ஒற்றைக் கால் மண்டபம் என்று ஒன்றுண்டு. யமனுக்கு பிரத்யேக ஆலயம் உண்டு, தற்காலம் கொஞ்சம் கிலமாயிருக்கிறது. இவ்வூரிலுள்ள மற்ற ஆலயங்கள். (1) நந்தேஸ்வரர் கோயில், பெரிய கோயிலுக்கருகிலிருக்கிறது. இது பதஞ்சலி பூசித்த கோயிலாம்; இங்கு தூர்வாசர் சிலையுளது. (2) இளமை யாக்கினர் கோயில், வியாக்ரபாதர் பூசித்த கோயில். மற்ற ஆலயங்கள்:—சிங்காரத்தோப்பருகில் பீமேஸ்வரர் கோயில், மன்னங்குடிச்சேரியில் திருக்காலஞ்சேதி மகாதேவர் ஆலயம், பரகேசரிநல்லூரில் விக்ரம சோளீஸ்வரமுடையார் கோயில்; இக்கோயில் எதிரிலிசோழனால் கட்டப்பட்டதென்பர். இவ் வூரில் ஞானவாபி எனும் குளக்கரையில் சேக்கிழாருக்கு ஒரு சிறிய கோயில் உண்டு. இங்கு பல சத்திரங்கள் உள. (1) செட்டியார் சத்திரம் தெற்கு மாடவீதி, (2) சின்ன பண்ணைச் சத்திரம் தேரடிக் கரை வீதி, இங்கு கலியாண சோழபுரம் தர்ம சத்திரமுமுளது. (3) பல்லவராயபெட் தர்ம சத்திரம் தெற்குத் தெரு. (4) முத்தைய முதலியார் சத்திரம் வடக்கு மாட வீதி. (5) மார்வாடி சத்திரம் கிழக்கு மாட வீதி. (6) மற்றொரு மார்வாடி சத்திரம், மாறு தீட்சதர்

சந்து. (7) சுப்பராய செட்டியார் சத்திரம் ஓம குளத் தருகில். (8) குப்பாயத்துப் பிள்ளை சத்திரம் மேற்கு மாட வீதி. (9) குண்டு பிள்ளை சத்திரம் தேரடிக் கடைத் தெரு. (10) தங்கரதம் சத்திரம் வடக்கு மாடவீதி. (11) கோமுட்டி சத்திரம் மேற்கு மாடவீதி.

சிந்தமல்லி :—சென்னை ராஜதானி திருநெல்வேலிக்கு 7 மயில் கந்தர்ப்பேசர் - லோகநாயகி ; வைப்புஸ்தலம்.

சிந்தாமணி :—சென்னை ராஜதானி கடற்கரையி லுள்ளது ; ஆரணி சங்கமமாகுமிடம் சிவாலயம் ; ஸ்வாமி சிந்தாமணீஸ்வரர் ; இதற்கு கிழக்குகோகர்ணம் என்று பெயர்.

சிந்துவல்லி :—நஞ்சங்கோட் தாலூகா, மைசூர் ராஜ்யம், சங்கமேஷ்வர் கோயில்.

சிப்சாகர் பிரிவு :—வட இந்தியா ஆசாம் ராஜதானி ; இங்கு 3 சிவாலயங்கள் உள. (1) சிவகோட் கோயில் 1727 கட்டப்பட்டது. (2) ஹரகௌரி தேவாலயம், 1704 கட்டப்பட்டது. (3) சிப்சாகர் பட்டணம் சிவாலயம் ; ஸ்வாமி ஈசானேஸ்வரர் ; 1769 கட்டப்பட்டது.

சிப்பகிரி :—ஆலூர் தாலூகா, பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம் ; போஜேஸ்வர ஸ்வாமி ; இங்குள்ள துவஜஸ்தம்பம் 40 அடி உயரம்.

சிர்மூர் ராஜ்யம் :—பஞ்சாப் மாகாணம் வட இந்தியா (1) சௌர்பிக் மலை உச்சியில் சிவலிங்கம் உண்டு. அதற்கு தினம் பூஜை நடக்கிறது. அடிவாரத்தில் ஒரு சிவாலயம். (2) பயிரிவாலா சிவாலயம் ; இக்கோயில் ஸ்ரீ சங்கராசாரியால கட்டப்பட்டதென்பர்.

சிராப்பள்ளி (திரு) :—மேற்படி ஜில்லா சென்னை ராஜ தானி ரெயில் ஸ்டேஷன். முக்கியசிவாலயம் மலைக்கோயில் ; ஸ்வாமி தாயுமானேஸ்வரர், செவ்வந்திநாத ஸ்வாமி, தேவி மட்டுவார்குழலம்மை ; நன்று தீர்த்தம், தீயல்லா தீர்த்தம், காவிரிநதி. மலைவாயிலில் இருக்கும் விக்னேஸ்வரருக்கு மாணிக்க விநயகர் என்று பெயர். திரிசிரஸ் எனும் அசுரன் பூசித்தபடியால் திருசிராப்பள்ளி என்று பெயர்பெற்றது. இதை தட்சிணகைலாசம் என்பர். பிரசவ வேதனையிலிருந்து ஒரு பெண்மணிக்கு பரமசிவம் அவளது தாயுருவுடன்போய் உதவியமையால் தாயுமானவர் என ஸ்வாமிக்குப் பெய

ருண்டாயிற்று. தாயுமான ஸ்வாமி பல வருடங்கள் தங்கி யிருந்த இடம். அனுமார், ஸ்ரீராமர், திரிசிரன் பூசித்த க்ஷேத்திரம். கோயிலில் மூல லிங்கம் மேற்கு நோக்கியது. பரிவார தேவதைகளெல்லாம் கிழக்கு நோக்கி யிருக்கின்றன. ஒரு சோழ அரசன்மீது கோபங்கொண்டு ஸ்வாமி முகத்தைத் திருப்பிக்கொண்டதாக ஸ்தல புராணம்; செவ்வத்திப் புட்பத்திற்காக ஸ்வாமி மேற்கு முகமாக மாறினர் என்றும் சொல்வர். முக்கிய உற்சவம் சித்திரை மாசம். மலை உச்சியில், உச்சிப் பிள்ளையார் கோயில் பார்க்கத்தக்கது. இந்த விநயகர் தலையில் ஒரு வடு உண்டு. ஸ்ரீராமர் விபீஷணருக்களித்த விஷ்ணு விக்ரஹத்தை, அவர் பிராம்மண பிரம்மசாரி வடிவங்கொண்ட பிள்ளையாரிடம் கொடுக்க, விநயகர் அதை ஸ்ரீரங்கத்தில் வைத்துவிட, கோபங் கொண்ட விபீஷணர் பிள்ளையாரைக் குட்டியதாக ஐதிகம். இங்கு மலையின்மேற் போகும் வழியில் ஒரு குகைக் கோயில் உண்டு. சிவாலயம் 7-ஆம் நூற்றுண்டில் பல்லவ அரசனகிய மஹேந்திரவர்மனல் வெட்டப்பட்டது, தெற்கு முகமானது, மலையின் தென்பாரிசத்திலுள்ளது. கர்ப்பக் கிரஹமும் முன் தாழ்வாரமு மடங்கியது. கோயில் மேற்கு நோக்கியது. கர்ப்பக் கிரஹத்தில் தற்காலம் லிங்கமில்லை; முற்காலத்தில் இருந்ததாகத் தெரிகிறது. மஹேந்திரவர்மனுடைய சிலையும் இங்கு முன்பிருந்ததாகத் தெரிகிறது. மேற்கு சுவரில் கங்காதர மூர்த்தியின் உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. இங்கு பல பழய கல்வெட்டுகள் உள. இங்கு அடிவாரத்திலும் ஒரு குகைக்கோயில் உண்டு சிவாலயம் குகைக்கோயில்; பூர்த்தியாகவில்லை. இரண்டு கர்ப்பக் கிரஹங்களுக்கும் இடையில் ஒரு தாழ்வாரமுண்டு. பின்புறத்தில் கணேசர், பரமசிவம், துர்க்கை, சூரியன், பிரம்மா, விஷ்ணு விக்ரஹங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இக்கோயில் மஹேந்திரவர்மன் குமாரன் நரசிம்மவர்மனல் வெட்டப்பட்டதாம். இங்குள்ள கணேசர் விக்ரஹம்தான் இந்தியாவிலுள்ள மிகவும் பழமையான கணேசர் உருவம் என்று எண்ணப்படுகிறது. இவ்வூரில் பல சத்திரங்கள் உண்டு; முக்கியமானவை (1) ஸ்ரீபிரசன்ன வெங்கடேசஸ்வாமி சத்திரம், தினம் குடிக்கூலி 6 அணு, ஸ்டேஷனுக்கு ½ பர்லாங்கிலுள்ளது. (2) சின்னையா பிள்ளை சத்திரம் 2 பர்லாங் தூரம்; முசாபர் பங்களாவும்

உண்டு. திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசு ஸ்வாமிகள் பாடல் பெற்ற ஸ்தலம். இவ்வூரிலுள்ள மற்ற சிவாலயங்கள் (1) நாகநாதஸ்வாமி கோயில் (2) பூலோகநாதர் கோயில் (3) கைலாசநாதர் கோயில்.

**சிருங்கேரி** :—காடூர் ஜில்லா மைசூர் ராஜ்யம், துங்கை நதியின் கரையிலுள்ளது. இதங்கு ரிஷ்ய சிருங்ககிரி என்றும் பெயர். வித்யாசங்கரர் கோயில் ஒரு சிறு குன்றின் பேரில் உளது. தற்காலக் கோயில கட்டப்பட்ட காலம் 1338ஹு. இங்கு மூன்று அறைகளில் உமா மஹேஸ்வரர், சரஸ்வதி பிரம்மா, லட்சுமி நாராயணர் இருக்கிறார்கள். இங்குள்ள நவரங்க மண்டபத்தில 12 தூண்களில் சிங்கங்களின் உருவங்கள் உள, அவைகளின் வாய்களில் கருங்கல் குண்டுகள் உருளுகின்றன. ஒவ்வொரு தூணிலும் ஒரு ராசி செதுக்கப்பட்டிருக்கிறது. சூரிய மாசங்களில் ஒவ்வொரு மாசத்திலும் சூரியரஸ்மி இத்தூண்களில் ராசிக்கேற்றபடி விழுகின்றது. நவக்கிரஹங்களுள் 8, இத்தூண்களில் செதுக்கப்பட்டிருக்கின்றன; சூரியன் மத்தியில் காட்டப்பட்டிருக்கிறது. இங்கு மஹா மண்டபத்தில் கணேசர் இருக்கவேண்டிய இடத்தில் எஃகினவாகிய சகீஸ்வர பகவான் இருக்கிறார். லோக கர்த்தாவாகிய ஹரிஹரன் உருவம் இருக்கிறது. மூலஸ்தான லிங்கத்திற்கு வித்யாசங்கரர் என்று பெயர். கோயிலின் கஜானவில், ஒரே ழத்தில் ஒரு நந்தி செதுக்கப்பட்டிருக்கிறது. இக்கோயிலிலுள்ள சரஸ்வதி விக்ரஹம் (சாரதாம்பாள்) முற்றிலும் பொன்னலாயது; பார்க்கத்தக்கது. ஒரே பச்சைக் கல்லில் ஒரு சிறு மண்டபம் செதுக்கப்பட்டிருக்கிறது. பட்டணத்தின் நடுவில் மல்லிகார்ஜுனர் கோயில் இருக்கிறது. இங்கிருக்கும் வேணுகோபாலரும் ஸ்ரீனிவாசரும் கெம்புக்கற்களாலானவை.

**சில்ம்கூர்** :—கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி புரோடட்டூர் தாலூகா, கலமல்லா ஸ்டேஷனுக்கு $1\frac{1}{2}$ மயில் சிவாலயம், ஸ்வாமி அகஸ்தீஸ்வரர், தென்கன்னடத்திலுள்ள ஜெயினக் கோயிலைப்போல் கட்டப்பட்டிருக்கிறது. பூர்வ காலத்தில் ஜைன ஆலயமாயிருந்து பிறகு சிவாலயமாக மாற்றப்பட்டிருக்கலாம். கர்ப்பக்கிரஹம் வட்டவடிவமானது.

**சிவகங்கை** :—மைசூர் ராஜ்யம் பெங்களூருக்கு 20 மயில் நிடுவண்டா ஸ்டேஷனுக்கு 5 மயில் ரோட் மார்க்கம்; பெங்களூரிலிருந்து பம்பாய்க்குப் போகும் மார்க்கத்திலிருக்கிறது. கோயில் சுமார் 5000 அடி உயரமுள்ள கருத்கிரி எனும் மலைமீது உளது. இம்மலை கிழக்கிலிருந்து பார்த்தால் நந்தியைப் போலவும், மேற்கிலிருந்து கணேசரைப் போலவும், வடக்கிலிருந்து சர்ப்பத்தைப் போலவும், தெற்கிலிருந்து லிங்கத்தைப் போலவும் தோன்றும். சிவாலயம் கெம்ப கௌடரால் கட்டப்பட்டதாம். ஸ்வாமி **கங்காதரீஸ்வரர்** தேவிசுவர்ணம்பாள், ஹொன்னதேவி (கன்னடம்); பாதாள கங்கை தீர்த்தம், வெயில் காலத்தில் தண்ணீர் அதிகமாயும் மழை காலத்தில் தண்ணீர் குறைந்தும் போகிறது! இதற்கு தட்சிண காசி என்றும் பெயர். கோயில் கர்ப்பக்கிரஹம் குகையில் குடையப்பட்டிருக்கிறது கோயிலில் சண்டேஸ்வரர் இருக்கவேண்டிய ஸ்தானத்தில் பிரம்மா இருக்கிறார். முகமண்டபத்தில் சப்த மாத்ருக்கள், அஷ்டதிக்பாலர்கள் நவக்கிரஹங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றனர். இங்குள்ள பரமசிவத்திற்கும் பார்வதி தேவிக்கும் கலியாணக்கோலம் அழகியது; கோயில் உற்சவ விக்ரஹத்திற்கு பார்வதி கங்கை 2 தேவிகளுண்டு. ஹொன்னதேவி கோவில் மிகவும் பிரபலமானது. இங்குள்ள **சாங்தேஸ்வரர்** ஆலயத்திலிள்ள கலியாணி தீர்த்தம் எனும் குளம் மிகவும் அழகியது. இதைச் சுற்றிலுமுள்ள சுவரில் ராமாயண பாகவத கதைகளின் சிற்பங்கள் இருக்கின்றன. இது விஷ்ணுவர்த்தனனுடைய மனைவியாகிய சாந்தலை தேவியின் ஞாபகார்த்தமாக 1129௵ கட்டப்பட்டிருக்கலாம்; அழகிய சில்பங்களுடையது. மலையின் உச்சியில் ஒரு நந்தியிருக்கிறது. அதற்குமேல் வீரபத்திரர் கோயிலிருக்கிறது. இங்கு பாதாளகங்கை தவிர இன்னும் ஏழு தீர்த்தங்கள் உள. மலையின் உச்சியில் இரண்டு தூண்கள் உள. ஒன்றின் கீழிருந்து மகர சங்கிராந்தி தினம் ஜலம் பெருகுகிறது. இதற்கு கங்கோத்பத்தி என்று பெயர்; இதில் பாதி மைசூர் மஹாராஜாவுக்கு அனுப்பப்படுகிறது, மற்ற பாதி பக்தர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

**சிவகங்கை** :—செட்டிநாட்டு சிவாலயம், ஸ்வாமி கைலாசநாதர், தேவி நித்யகல்யாணியம்மை.

**சிவசைலம்** :—சென்னை ராஜதானி திருநெல்வேலி ஜில்லா, ஆழ்வார்குறிச்சிக்கு 2 மயில் சிவாலயம்; அத்திரீஸ்வரர், கல்யாணியம்மன், அத்திரிமுனிவர் பூசித்த ஸ்தலம், வைப்புஸ்தலம். பங்குனி மாசம் உற்சவம், ரதோற்சவம் விசேஷம்.

**சிவகோட்** :—வட இந்தியா, பிரயாகையிலிருந்து 6 மயில் சிவாலயம்; ஸ்ரீராமர் இங்கு லிங்கப்பிரதிஷடை செய்து பூசித்ததாக ஐதிகம். காசியிற்போல் மகம்மதியரும், பஞ்சமரும் தவிர, மற்றவர்கள் நேராக லிங்கபூசை செய்யலாம்.

**சிவ சமுத்திரம்** :—மைசூர் ராஜ்யம் சிவாலயம் ஸ்வாமி சோமேஸ்வரர்; கோயிலில் மஹாத்துவாரம் (பெரியவாயில்) பார்க்கத்தக்கது. (இங்கு அருகிலுள்ள காவேரியின் கங்கன்சுக்கி, பாராசுக்கி எனும் இரண்டு நீர்வீழ்ச்சிகள் உலகப்பிரசித்தமானவை).

**சிவ சமுத்திரம்** :—கொள்ளேகால் தாலூகா, கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி வீரபத்திரஸ்வாமி கோயில்; இங்கு பல கல்வெட்டுகள் உள.

**சிவபுரம்** :—திருவள்ளூர் தாலூகா, சென்னை ராஜதானி, கடம்பத்தூர் ஸ்டேஷனுக்கு அருகிலுள்ளது சிவாலயம்.

**சிவபுரி** :—(திரு) தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, கும்பகோணத்திற்கு 3 மயில் தென்கிழக்கு; விஷ்ணு வராஹ அவதாரத்தில் சிவபெருமானைப் பூசித்த ஸ்தலம், பிரமன் பூசித்த ஸ்தலம்; ஸ்வாமி சிவபுரநாதர், பிரமபுரிநாயகேஸ்வரர்; தேவி சிங்காரவல்லி, பெரியநாயகி; சூரியதீர்த்தம், சண்பகவிருட்சம்; திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

**சிவன்மலை** :—கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம்.

**சிவாயமலை** :—தென் இந்தியா சென்னை ராஜதானி, சிவாலயம், பிரம்மோற்சவம் சித்திரைமாசம், முத்துப் பல்லக்கு உற்சவம் விசேஷம்.

**சிவையம்** —குளித்தலை தாலூகா, திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம், சுவாமி ரத்னேஸ்வரர்.

**சிற்றூர்** :—வட இந்தியா ராஜபுதனம் சிவாலயம் ஸ்வாமி சமீமேதஸ்வரர். இங்கு **ஆதீஸ்வரபகவான்** சிவாலயம் குன்றின் மீது இருக்கிறது. தற்காலக்கோயில் 1530ஸு கட்டப் பட்டது. வட இந்திய ஆரிய சில்பம்.

**சின்னகருப்பூர்**:—சென்னை ராஜதானி திருச்சிராப்பள்ளி ஜில்லா, இதற்கு குழுமணி யென்றும் பெயர். சிவாலயம்; ஸ்வாமி நாகநாதர், தேவி லோகநாயகி.

**சிற்றேமம்** :—(திரு) இதற்கு எழிலூர் நேமம் என்றும், சிற்றூய்மூர், சிற்றம்பூர் என்றும் சிற்றூமபூர் என்றும் பெயர் உளது. பொன்னேரியிலிறங்கி 6 மயில் போகவேண்டும். சிவாலயம்; ஸ்வாமி **பொன்வைத்தநாயகர்**; தேவி அகிலாண்ட நாயகி அல்லது அகிலாண்டேஸ்வரி; சுவர்ணதீர்த்தம், ஆத்திவிருட்சம்; அகஸ்தியரும் வேதங்களும் பூசித்த க்ஷேத்திரம்; ஸ்வாமி சந்நிதியில் ஒரு தேன் கூடு எப்பொழுதும் இருக்கிறது; இதற்கு தினம் பூஜை நடக்கிறது. கோயிலுக்குப் பின் இருந்த ஆத்தி விருட்சத்தை கோயிலுக்கு முன்பாகவும், பலிபீடத்திற்கு முன் இருந்த நந்தி தேவரை அதற்குப் பின்பாகவும் வரும்படி பரமசிவம் ஆக்ஞாபித்தருளினர் என்பது ஐதிகம். திருஞானசம்பந்தர் பாடல்பெற்றது. பரமசிவம் விபுதன் எனும் அடியவனுக்கு பொற்காசு அளித்த ஸ்தலம்.

**சிறுகுடி** :—(திரு) சென்னை ராஜதானி பேரளம் ஸ்டேஷனுக்கு 4 மயில் தென்மேற்கு, சிவாலயம், செவ்வாய், கருடன், கந்தர்வாள் பூசித்த க்ஷேத்திரம், ஸ்வாமி மங்களேஸ்வரர் தேவி மங்களநாயகி, சூரிய தீர்த்தம்; திருஞான சம்பந்தா பாடல் பெற்றது.

**சிறுகுப்பா** :—சென்னை ராஜதானி, இங்குள்ள கோட்டையில் சம்புலிங்கேஸ்வரர் கோயில்.

**சிறுவஞ்சூர்** :—சென்னை ராஜதானி செங்கல்பட்டு ஜில்லா, சிவாலயம் சிங்கபெருமாள் கோயிலுக்கு 5 மயில், ஸ்வாமி திருக்காளீஸ்வரர் தேவி திரிபுரசுந்தரி.

**சிறுவாலூர்** :—கோயமுத்தூர் ஜில்லா சத்யமங்கலம் தாலூகா, சென்னை ராஜதானி சிவாலயம்.

**சின்னகஞ்சம்** :—பாபட்லா தாலூகா, குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி சிதம்பரஸ்வாமி கோயில்.

**சின்னதாராபுரம்** :—திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி பழய சிவாலயம்.

**சின்னதாராபுரம்** :—கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, கரூர் தாலூகா, மிகவும் பழய சிவாலயம், கல் வெட்டுகள் உள.

**சின்னதும்பலம்** :—பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி. **ராமலிங்கேஸ்வரர்** கோயில்; சளுக்கிய சில்பம். இங்கு **சோமேஸ்வரர்** கோயில் என்று மற்றொரு சிவாலயமுண்டு.

**சின்னூர்** :—மத்ய இந்தியா நாசிக் ஸ்டேஷனுக்கு 18 மயி சிவாலயம்; ஸ்வாமி கொண்டேஸ்வரா. கோயில் 284 × 314 அடி விஸ்தீர்ணமுள்ளது சுமார் 11-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

**சின்னமாறூர்** :—மதுரை ஜில்லா சென்னை ராஜதானி, ராஜசிம்மேஸ்வரர் கோயில்.

**சீக்காகுளம்** :—சென்னை ராஜதானி, விசாகபட்டணம் ஜில்லா ரெயில்ஸ்டேஷன் சிவாலயம் ஸ்வாமி சங்கமுகேசர்.

**சீதாபுரம்** :—வட இந்தியா ரெயில்ஸ்டேஷன் சித்ரகூடத் தருகிலுள்ளது. சிவாலயம் ராகவப் பிரயாகையின் கரையி லுள்ளது. ஸ்வாமி மத்தகஜேந்திரேஸ்வரர்.

**சீதாமர்ஹி** :—வங்காளம், முசாபர்பூர் ஜில்லா, ரெயில் ஸ்டேஷன், ஸ்வாமி விஸ்வேசர்; இங்குள்ள 9 கோயில்களில் ஒன்று சிவாலயம். தர்பங்கா ரெயில்ஸ்டேஷனிலிருந்து 42 மயில், கோயில் புதிய கட்டிடம்.

**சீதாராமபுரம்** :—பாலகுண்டா தாலூகா விசாகபட்டணம் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம். ஸ்வாமி ராம லிங்கேஸ்வரர்.

**சீதாகுண்டம்** :—வட இந்தியா சிவாலயம் மலைமீதி லுள்ளது.

1782

(தொடரும்)

Printed at the R. V. Press, M. S. 16-A, C. 500. 27—6—46.